





பாரத ரத்னா புரட்சித் தலைவர்

# டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின்

# பொன்மொழிகள்

1977 - 1987



பாரத ரத்னா புரட்சித் தலைவர்

# டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின்

# பொன்மொழிகள்



மாண்புமிகு புரட்சித்தலைவி

# அம்மா அவர்கள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள்

சிறப்பு வெளியீடு எண் : 12

# தமிழரசு

இலவச வெளியீடு

டிசம்பர் 2017

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
சென்னை – 600 113.

**எடப்பாடி K. பழனிசாமி**
**முதலமைச்சர்**

**தலைமைச் செயலகம்**
**சென்னை – 600 009**

## அணிந்துரை

மனித நேயத்தின் சிகரம் என்றும், மனிதாபிமானத்தின் சின்னம் என்றும், மக்களால் போற்றப்பட்டு ஏழை எளிய மக்களின் இதயக் கோயில்களில் இன்னும் குடிகொண்டு கோலோச்சிக் கொண்டிருக்கும் மக்கள்திலகம், பாரத ரத்னா, புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள், தன்னுடைய சிறு வயதில் ஒரு நாடக நடிகனாக வாழ்க்கையைத் தொடங்கி, புகழ் வாய்ந்த கதாநாயகனாக திரை உலகில் மிளிர்ந்து, மக்கள் போற்றும் மகத்தான முதலமைச்சராக பணியாற்றி, அவர் வாழ்வில் ஏற்பட்ட அனுபவங்கள், அவரது உரைகளிலும், சொற்பொழிவுகளிலும், பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டிகளிலும், எழுதிய கட்டுரைகளிலும் அமுத மொழிகளாக விரவிக் கிடப்பதை, கடலில் மூழ்கி முத்தெடுப்பதைப் போல, தேடித் தேடிக் கண்டுபிடித்து அவற்றைப் பொன்மொழிகளாகத் தொகுத்து, **“பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் பொன்மொழிகள்”** என்ற தலைப்பில், செய்தி மக்கள் தொடர்புத்துறையால் அழகிய நூலாக வடிவமைக்கப்பட்டு உங்கள் கரங்களை வந்தடைந்துள்ளது.

எண்ணவும் அரிய எண்ணில்லா மக்கள் நலத் திட்டங்களை தமிழ்நாட்டிற்கு தந்த ஏந்தல் மாண்புமிகு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் புகழையும் பெருமையையும் உலகமெங்கும் பறை சாற்றும் வகையில் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா, ஆண்டு முழுதும் கொண்டாடப்படும் என்று இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழி நடக்கும் தமிழ்நாடு அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் இந்த அறிவிப்பை அரச கட்டளையாக ஏற்று, புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவினை இந்த உலகமே வியக்கும் வண்ணம் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மிகச் சிறப்பாக ஆண்டு முழுவதும் கொண்டாடி மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் புகழுக்குப் புகழ் சேர்த்தது.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாக்கள் மூலம் இதுவரை நடைபெற்ற (கன்னியாகுமரி மற்றும் சென்னை மாவட்டம் நீங்கலாக) 30 மாவட்டங்களில் மொத்தம் 5,397 கோடியே 52 லட்சம் ரூபாய் செலவில் 8,11,481 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளும், 5,127 கோடியே 11 லட்சம் ரூபாய் செலவில் 2,329 திட்டப்

பணிகளை தொடங்கி வைத்தும், 5,712 கோடியே 90 லட்சம் ரூபாய் செலவில் 3,200 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் மகத்தான மக்கள் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதயதெய்வம் புரட்சித்தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் எப்படியெல்லாம் சிந்தித்து திட்டங்களை செயல்படுத்துவார்களோ, அப்படி மாண்புமிகு அம்மா அவர்களின் வழி நின்று புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற திட்டப்பணிகளை மக்களுக்கு அர்ப்பணித்தும், மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான நலத்திட்ட உதவிகளை வழங்கியும், மகத்தான மக்கள் பணிகளை மேற்கொண்டோம்.

தமிழ்நாடு அரசின் சார்பில் இத்தனை சீரோடும் சிறப்போடும் நடத்தப்படும் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தின் ஓர் அங்கமாக வெளியிடப்பட்டுள்ள “**பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் பொன்மொழிகள்**” எனும் இந்த வரலாற்று பெட்டகம் மக்கள் திலகம் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஆழ்ந்த அறிவின் வெளிப்பாடாக, அரிய அனுபவங்களின் சாட்சியங்களாக, அற்புத எண்ணங்களின் குறியீடாக, மக்கள் சிந்தனைகளின் மதிப்பீடாக, சீர்பெற்றுத் துலங்கும் சிந்தனைச் சிதறலாக, கண்ணென போற்றத்தகு கருத்துக் குவியலாக, காலமெல்லாம் பின்பற்ற வேண்டிய வாழ்க்கை நெறியாக, மானிட சமுதாயம் வகையுடன் வாழ வழிகாட்டும் வைர வரிகளாக மின்னி மிளிர்ந்து கொண்டிருக்கிறது.

இத்தனை சிறப்பு வாய்ந்த இப்பெட்டகத்தை பொலிவோடும் புதுமையோடும் உருவாக்குவதில் மிகச்சிறப்புடன் பணியாற்றிய தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, அரசு செயலாளர், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலர்கள் ஆகியோருக்கு எனது வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த தமிழரசு அச்சக பணியாளர்களுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனித குலம் மேம்பட வழிகாட்டும் ஓராயிரம் உயர்நெறிச் சிந்தனைகளை உள்ளடக்கியதாக அமைந்திருக்கும் **“பொன்மனச்செம்மல் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் பொன்மொழிகள்”** என்னும் தலைப்பில் அமைந்துள்ள இந்நூலை தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

# நுழைவாயில்

**ப**ல்வேறு காலகட்டங்களில் **புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், டாக்டர் எம்.ஜி.ஆர்.** அவர்கள், தம் கடின உழைப்பாலும், உள்ள உறுதியாலும், மாற்றாரை மதிக்கும் பண்பாலும், பெரியாரைத் துணைக்கோடும் பெற்றியாலும், மக்களோடு நெருங்கிப் பழகினார்.

அடித்தட்டு மக்கள் வாழ்க்கையில் நலம் பெற்று, வளமுற்று வாழ்வதற்கான வழிவகைகளைக் கண்டறிந்து, அதற்கொப்ப, அரசியல்களம் புகுந்து, தமிழகத்தின் முதல்வர் பதவியை புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பெற்றார். அந்தப் பதவியில் இருந்தபோது, மக்கள் நலத்திட்டங்களைத் தீட்டி செயற்படுத்திய திறத்தாலும், எல்லாவற்றையும் விஞ்சி நிற்கின்ற மனிதநேயப் பண்பாலும் எண்ணற்ற மக்களின் இதயங்களில் அரியணையேறி, இன்றளவும் கோலோச்சி வருவதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ, மறக்கவோ முடியாது!

இன்சொல், ஈகை, பணிவுடைமை மற்றும் துணிவுடைமை இவற்றையே அணிகளாய்ப் பூண்ட புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு 'நூற்றாண்டு விழா'ப் போற்றி வருவது, நம்மை நாமே பெருமைப்படுத்துவது போன்று அமையக்கூடும்!

பொது நிகழ்ச்சிகளில், அரசியல் கூட்டங்களில், இலக்கிய மேடைகளில், அரசு அதிகாரிகள் வட்டங்களில், திரையுலக விழாக்களில் நிகழ்த்திய உரையாடல்களில் வெளிப்பட்ட, மாமனிதர் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் கருத்துகளை, சிந்தனைகளைப் பல்வேறு தலைப்புகளில் **'பொன்மொழி'**களாகப் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா மலர்க்குழு தொகுத்தளிக்கும் பணியினைப் பாங்குறச் செய்து முடித்துள்ளது.

உலக மக்களுக்கெல்லாம், வாழ்க்கையின் நெறிமுறைகளை சொல்லுகின்ற திருக்குறள், அவ்வைபிராட்டி எழுதிய ஆத்திசூடி போன்ற தமிழர்களின் தொன்மையான இலக்கியங்களில் சொல்லப்பட்டு இருக்கும் மனிதகுல வளர்ச்சிக்கான கருத்துகள், புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் உரைகளில் அமைந்திருக்கும் பொன்மொழிகளில் பொதிந்திருப்பது, அவருடைய மகத்தான அறிவாற்றலுக்குச் சான்றாகும்!

படிப்போர் பயனுறுவர் என்பது திண்ணம். அறிய, ஓராயிரம் செய்திகள் இதன்கண் உள. சிந்தனைக்கு விருந்தளிக்கும் இந்நூல் ஒவ்வொருவரது இல்ல நூலகத்திலும் இடம் பெற வேண்டும் என்பது எங்களது விழைவாகும்!

*மலர்க் குழுவினர்*

# பொன்மொழிகள்

**கலாச்சாரத்தின் எல்லைக்கோடு**

❖ ஒவ்வொரு கலாச்சாரத்திற்கும் ஓர் எல்லைக்கோடு இருக்கின்றது. நாணயத்தின் ஒரு பக்கம் கலாச்சாரம் என்றால் மறுபக்கம் மொழி.

**பண்பு வளர...**

❖ ஒவ்வொரு நாட்டின் மொழியின் வளர்ச்சிக்கு ஏற்ப பழக்க வழக்கங்களும், தட்பவெப்ப நிலைக்கு ஏற்பக் கலையும், கலாச்சாரமும் இருக்கின்றன. கலாச்சாரம் வளர்ந்தால்தான் பண்பு வளரும்.

**காவியங்கள் கூறுவது என்ன ?**

❖ காவியங்களும், காப்பியங்களும் ஒவ்வொரு மனிதனும் எப்படி இருக்க வேண்டும், எப்படி வாழ்க்கையில் நடக்க வேண்டும் என்ற நீதி நெறிகளைக் கூறுகின்றன.

**நன்னெறி (காவியங்களிலும் காப்பியங்களிலும்)**

❖ ஒவ்வொருவரும் காவியங்களிலும், காப்பியங்களிலும் உள்ள நல்ல கருத்துகளை எடுத்துக் கொண்டு நன்னெறியில் செல்கின்ற போக்கினைக் கைக்கொள்ள வேண்டும்.

**மாணவர்களின் இலட்சிய நோக்கு**

❖ மாணவர் சமுதாயத்திற்கு இன்றைய தினத்தில் மிகுந்த பொறுப்புள்ள இலட்சிய நோக்குகளும் குறிக்கோள்களும் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும். அப்படி முடிவெடுக்கப்படுகின்ற இலட்சியங்கள் பொதுவாக மனிதனின் நல்வாழ்வுக்கு வித்திட வேண்டும். அவற்றை நிறைவேற்றும் பொழுது ஜாதி, மத வித்தியாச மனப்பான்மை தலையெடுக்கக் கூடாது.

## இலட்சியங்கள்—கொள்கைகள்

❖ விலை மதிப்பில்லா மாணவப் பருவத்தில் படிப்பில் அக்கறை செலுத்த வேண்டும், படித்து முடித்தவுடன், ஏற்கெனவே தெளிவுபடுத்தப்பட்ட இலட்சியங்களை கொள்கைகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். அம்முயற்சியில் எந்த விதமான வர்க்க பேதமும் தலையெடுக்கக் கூடாது. நம்முடன் இருக்கும் அனைவரையும் ஒரே குடும்பத்தில் உள்ளவரைப் போல பாச உணர்வுடன் நடத்த வேண்டும்.

## சேமிப்பின் அவசியம்

❖ ஒருவர் சேமிப்பதன் மூலம் பிறர் உதவியை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இராது. சேமிப்பு நல்லொழுக்கத்திற்குப் பாதுகாப்பாய் அமைகிறது.

## மாணவர் சமுதாயம்

❖ மாணவர் சமுதாயம் தனி மனிதரின் சுயநலத்திற்கு இடம் தரக்கூடாது. மாணவர் அனைவரும் ஒன்றுபட்டு, கட்சி வேறுபாடின்றி மனித நல்வாழ்வே குறிக்கோள் என்று ஒற்றுமையாக வாழ வேண்டும்.

## செயல்படும் முறையை வரையறுப்போம்

❖ மாணவப் பருவத்தில் சிந்தனைகள் பல வழிகளிலும் செல்வது உண்டு. இளங்கன்று பயமறியாது என்பதைப் போல இலட்சியங்கள் தெரியுமே தவிர, அவற்றை வெளிப்படுத்தும் முறைகளை ஒழுங்காக வரையறுப்பது மாணவப் பருவத்தில் சிறப்புமிக்கதொன்றாகும்.

## பிளவு கூடாது

❖ வெளியில் இருக்கும் அரசியல்வாதிகளால், சுயநல நோக்கங் கொண்டவர்களால் மாணவர்கள் தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு தூண்டப்படலாம். அதற்கு மாணவர் சமுதாயம் வளைந்து கொடுக்கக்கூடாது. பலியாகி விடவும் கூடாது. மாணவர்களுக்குள் பிளவு ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது. பிளவைப் பயன்படுத்தி வெளியார் தலையீட்டை அனுமதிக்கக்கூடாது.

### அடைபடும் முன்னேற்ற வாசல்

- மாணவச் சமுதாயம் பிளவுபட்டால் மாணவர்களின் முன்னேற்ற வாசல்கள் அடைபட்டுவிடும்.''

### எண்ணிச் செயல்படு...

- எந்தக் காரியத்தையும் செம்மையாகச் செயல்படுத்த வேண்டும் என்றால் வாழ்க்கையை எண்ணிப்பார்த்துச் செயல்பட வேண்டும்.

### கணக்கிட்டுப் பார்த்துச் செயல்படு

- தனக்காக வாழும்போதும், பிறருக்காகச் செயல்படும்போதும் கணக்கிட்டுப் பார்த்துச் செயல்பட வேண்டும்.

### கணக்கு

- தொழில், திட்டம், வாழ்க்கை ஆகியவற்றிற்கு முறையாக அமைய வேண்டியது கணக்கே.அவயவங்களின் அசைவு, மூச்சு விடுவதில் கணக்கு; ஒரு மைல் நடப்பதற்கு எவ்வளவு அடி காலை எடுத்துவைத்தால் குறிப்பிட்ட நேரத்தில் நடக்க முடியும் என்பதற்கும் கணக்கு இருக்கிறது.

### புகழ் என்பது...

- பதவியும் பணமும் வரும், போகும்; எப்போது வரும், எப்போது போகும் என்று யாருக்கும் தெரியாது. ஆனால் மக்களின் நல்லெண்ணம் ஒன்றுதான் நிலைத்து நிற்கும். அதைத்தான் புகழ் என்று சொல்கிறோம்.

### அன்பே நிலையானது

- அன்பு என்று குறிப்பிடுகிறோம். அன்பு ஒன்று மட்டும்தான், நீண்ட காலத்துக்கு நிரந்தரமாக, உண்மையாக, நிலைத்து நிற்கும்! அன்பை, விலை கொடுத்து வாங்க முடியாது அன்பைப் பெறுவதற்கு தியாகம் செய்ய வேண்டும்.

### ஜாதிக்கு நினைவுச் சின்னமா ?

- கலப்புத் திருமணம் என்று சொல்லுகிறார்கள். இனிமேல் அப்படிச் சொல்லிக் கொள்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும். ஜாதி ஒழிய வேண்டும்,

ஜாதியே கூடாது என்று சொல்லுவதன் மூலம் ஜாதிக்கு நினைவுச் சின்னம் வைத்தாற்போல் நிலை ஏற்படுகிறது. அந்த நிலையைப் போக்க வேண்டும்.

## நாட்டின் முன்னேற்றம்

- ❖ மாணவர்கள் நன்கு படித்து ஒளிமயமான அறிவியல் துறையில் வளர்ந்தால் எத்தனை மகத்தான உயர்வை இந்த நாடு அடைய முடியும் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். நம்முடைய இளைஞர்களின் முன்னேற்றத்தில் இருக்கிறது இந்த நாட்டின் முன்னேற்றம்.

## மாணவர்களின் பொறுப்பு

- ❖ நாட்டின் கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றைப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் தங்களுக்கு இருக்கிறது என்பதை, உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் படிக்கின்ற மாணவ, மாணவியர்கள் உணர்ந்து கொண்டு செயல்பட வேண்டும்.

## இரக்க உணர்ச்சி

- ❖ மனிதர்களிடம் இயல்பாக இரக்க உணர்ச்சி அமைந்திருக்க வேண்டும். எதிர்கால நன்மைகளுக்காக ஒவ்வொருவரும் இரக்க உணர்ச்சியைப் பெற்றிருக்க வேண்டும்.

## சமுதாயத் தொண்டு

- ❖ தீயதைச் சந்திக்கும் வாய்ப்பைக் குழந்தைகளுக்கு இல்லாது செய்தால் அதுவே நாம் சமுதாயத்திற்குச் செய்யும் பெரிய தொண்டாக இருக்கும்.

## வருங்கால நலன்

- ❖ தென்னை மரத்தை நட்டுப் பயிராக்கி வளர்க்கிறவர்கள், எப்படிப் பிற்காலச் சந்ததியின் நலனுக்காகச் செயல்படுகிறார்களோ, அதுபோல தமிழக அரசு வருங்கால நலனை மனத்தில் கொண்டு திட்டம் தீட்டிச் செயல்படுகிறது.

## நிச்சயம் புகழ் கிடைக்க...

- ❖ புகழ் பெற வேண்டும் என்பதற்காக எந்த ஒரு காரியத்தையும் செய்யக்கூடாது. நாம் செய்கின்ற ஒவ்வொரு காரியத்திற்கும் புகழ் கிடைத்தே தீரும் என்கின்ற அகந்தை உணர்வும் கூடாது. நல்லதோர்

இலட்சியத்திற்காகக் கடமையுணர்வோடு மேற்கொள்ளப்படும் எந்த ஒரு செயலுக்கும் நிச்சயம் புகழ் கிடைக்கும்.

### வெற்றி நிச்சயம்

❖ ஒரு நல்ல காரியத்தைச் செய்ய வேண்டும் என்ற இலட்சியத்துடன் நல்லவர்கள் பலர் சேர்ந்து, நல்ல தியாக உணர்வோடு, நல்ல முறையில் மேற்கொள்கின்ற எந்த ஓர் உழைப்பும், முயற்சியும் பொதுமக்களின் ஒத்துழைப்புடன்—ஆதரவுடன் வெற்றி அடையும் என்பது நிச்சயம்.

### சமுதாயச் சீரழிவுகளைத் தடுப்போம்

❖ நாகரிகம் என்ற பெயரால் சமுதாயச் சீரழிவுக்கு வழி வகுக்கப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். முன்னேறுகிறோம் என்று எண்ணிப் பின்னோக்கித் தள்ளப்படுகிற நிலைமையை அனுமதிக்கக்கூடாது.

### பகுத்தறிவு

❖ மனத்தைச் சுத்தப்படுத்திக் கொள்ள மனத்தால்தான் முடியும், புறத்தைக் கழுவ வேண்டுமானால் பணம் இருக்கலாம். அகத்தைக் கழுவ பகுத்தறிவுதான் வேண்டும்.

❖ அகமும் புறமும் ஒன்றுபட்டு இயங்க பகுத்தறிவு ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும். ஆனால், அதைப் பயன்படுத்தத் தவறுவதானாலேயே மக்களிடையே மாறுபட்ட தன்மைகள் இடம் பெறுகின்றன.

### பண்பாட்டை இழந்திடாதே!

❖ நாகரிகம் என்ற பெயரில் நமது பண்பாட்டினை இழந்துவிடக் கூடாது. தாய்மார்கள் உடை அணிவதில் கூட இந்தப் பண்பாட்டை இழந்துவிடக் கூடாது. வேட்டி, சட்டை அணிவதை அவமானம் என்று கருதக்கூடாது. அப்படிக் கருதுவது நாகரிகம் அல்ல. தேசிய உணர்வை விட்டுவிடக் கூடாது.

### மக்கள் ஆதரவு

❖ எந்த ஒரு மனிதரும் எவ்வளவுதான் படித்திருந்தாலும், அனுபவம் பெற்றிருந்தாலும் சரி, மக்கள் அவரை ஆதரிக்காவிட்டால், மக்கள் அவருக்கு ஒத்துழைப்புத் தராவிட்டால், சமுதாயத்தில் நிற்க முடியாது.

## சேவை

❖ பணம் இருந்தால் மனம் இருப்பதில்லை; மனம் இருந்தால் பணம் இருப்பதில்லை. இரண்டும் இருந்து உதவி செய்யச் செலவு செய்தால் சட்டம் இடம் அளிப்பதில்லை. அப்படியிருந்தும் சேவை செய்ய முன்வருகிறவர்களைப் பாராட்ட வேண்டும்.

## தியாகம்

❖ தியாகம் செய்கிறவர்களுக்குப் பாதுகாப்புத் தந்தாக வேண்டும். அவர்களுக்கு எதிர்கால உத்தரவாதம் கொடுத்தாக வேண்டும்.

## நல்ல உணர்வு

❖ நல்ல உணர்வுகளைச் சட்டத்தின் மூலம் மட்டும் ஏற்படுத்த முடியாது.

## மனதைத் தூய்மை கொள்

❖ மனத்தைத் தூய்மையாக வைத்திருப்பதன் மூலம் பண்புக்கும், பாங்குக்கும் நாம் சொந்தக்காரர்கள் ஆகவேண்டும்.

## மனம் மாறக் கூடாது

❖ பதவி வரும்போது அந்தச் சூழ்நிலைக்கேற்ப மனநிலை மாறும், அப்படி மாறக் கூடாது என்பதை அமரர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதைத்தான் இந்த அரசும் கடைபிடிக்கிறது.

## உண்மை பேசும் துணிச்சல்

❖ உண்மையைப் பேசுகின்ற மனப்பக்குவம்–துணிச்சல் உள்ளவர்கள் எந்த இடத்திலும், யாருக்கும் பயந்து நடக்க மாட்டார்கள்.

## சமுதாய அமைப்பு மாற வேண்டும்

❖ ஏழைகளைக் கடவுள் உருவாக்கவில்லை இந்தச் சமுதாயம்தான் உருவாக்குகிறது. நாம்தான் உருவாக்குகிறோம். இந்தச் சமுதாய அமைப்பை மாற்றியமைக்க நாம் வழிகாணவேண்டும். ஏழைகள் என்று ஒரு பிரிவும், அவர்களுக்கு இரக்கம் காட்டச் சிலரும் இருக்கும் சமுதாயம் தேவையா ? இந்த அமைப்பு மாறியாக வேண்டும்!

## விலை கொடுத்து வாங்க முடியாது

❖ பணத்தைக் கொடுத்து எதையும் பெற்றுவிடலாம்; அதிகாரத்தைப் பயன்படுத்தி எதையும் சாதிக்கலாம்—ஒன்றே ஒன்றைத் தவிர! ஆம்! அன்பை விலை கொடுத்து வாங்க முடியாது. அன்பைக் கொடுத்துத்தான் அன்பை வாங்க முடியும்!

## கடமையாற்றத் தயாராவோம்

❖ உழைப்பவர்களே உயர்ந்தவர்கள் என்று சொல்கிறோம்; எழுதுகிறோம். இது இப்பொழுது வெறும் நியதியாகத் தான் இருக்கிறது. இதுவே சட்டமாகிற காலம் வரத்தான் போகிறது. உழைப்பவர்களே உரிமை பெறவேண்டிய— எல்லாம் அனுபவிக்க வேண்டிய காலம் நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. அது விரைந்து வருவதற்குள் நாம் கருவிகளை ஏந்தி — உழைக்க—கடமையாற்றத் தயாராவோம்!.

## ஈரமண்ணும் குழந்தைகளும்

❖ நாம் எந்த உருவத்தை, எந்தப் பொருளை உருவாக்கிட விரும்புகிறோமோ அதற்கேற்றாற்போல் அமைவதே ஈரமண். அதுபோலத்தான் குழந்தைகளும். இந்தப் பருவத்தில் நாம் எப்படி உருவாக்குகிறோமோ, அதன்படிதான் எதிர்காலத்தில் குழந்தைகள் இருக்கும்!

## விபரீத விளைவு

❖ குழந்தைகள் பெரியவர்கள் போல் நடந்தால் அதன் விளைவு நல்லதாகவே இருக்கும். குழந்தைகளின் சுட்டித்தனம் சமுதாயத்தை ஒருபோதும் பாதிக்காது. ஆனால், பெரியவர்களாக இருப்பவர்கள் இன்னும் குழந்தைகளாகவே இருந்து கொண்டு செய்யும் செயல்கள் விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தி விடக்கூடும்.

## உழைப்பு

❖ உழைப்புக்குச் சரியான ஊதியம் கிடைக்கிறதா என்பது ஒருபுறம் கேட்கப்பட்டாலும், உழைப்பு என்பது அத்தியாவசியமானது. அதில் உயர்வு தாழ்வு கிடையாது — உயர்வு தாழ்வு கூடாது!

## சட்டங்கள்

❖ சட்டம் என்பது தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொள்ளவும், அறிவாற்றல் பெறவும் உறுதுணையாக இருக்கவேண்டும் யாரையாவது எதற்காவது கட்டுப்படுத்தி, சுதந்திரத்தைப் பறித்து, ஆடும் பொம்மையாக மாற்றுவதற்கு ஒரு கருவி என்ற வகையில் சட்டங்கள் இருக்கக்கூடாது! சட்டங்கள், காலத்திற்கு ஏற்ற வகையில் இருக்கு வேண்டும்!

## நல்ல நண்பர்கள்

❖ யார் எதிர்த்தாலும், தாக்கினாலும் அதுவும் நம் நன்மைக்கே என்று எடுத்துக் கொள்ள வேண்டும். சிரித்து சிரித்துப் பேசுபவர்களை விட, நமது முன்னேற்றத்திற்காகவும், நல்வாழ்விற்காகவும் இடித்துக் கூறுபவர்களே நல்ல நண்பர்கள்!

## என்றும் வெற்றி

❖ சில நேரங்களில் எந்தத் தொழிலாக இருந்தாலும் தொடர்ந்து சோதனைகள் வருவதுண்டு. அவற்றை அச்சத்தோடு சந்திக்கக்கூடாது. அதிர்ச்சியடையக் கூடாது. சிலர் ஒன்று சேர்ந்து தாக்கும் நிலை ஏன் ஏற்பட்டது? எதற்காக அவர்கள் நம்மைத் தாக்குகிறார்கள்? என்று ஆராய்ச்சி செய்ய வேண்டும். பதட்டத்தோடு எந்த முடிவுக்கும் வராமல், ஆராய்ச்சி அறிவோடு ஆழ்ந்து அமைதியாகச் சிந்தித்தால் என்றும் வெற்றி கிட்டும்!

## அன்பால் கட்டுப்படுத்துவோம்

❖ அன்பினால் ஒருவரோடு ஒருவர் கட்டுப்பட வேண்டும். அதிகாரத்தினாலும், பயமுறுத்தலாலும் கட்டுப்படுத்த முடியாது. சட்டத்தின் மூலம் தண்டனை தரமுடியுமே தவிர திருத்த முடியாது!

## நல்ல மனிதன்

❖ நடிகர்கள், வாழ்க்கையிலும் நடிக்க வேண்டுமா என்ற கேள்வி எழலாம். நல்ல மனிதனாக நடிப்பவர்கள் நல்லவிதமாக நடந்து கொள்ளவும் வேண்டும். அதைத் தெளிவாகச் செய்து காட்டும்போதுதான் நல்ல மனிதன் என்ற பெயரும் புகழும் வந்து சேருகிறது.

## தொழிலாளர்களை வழிநடத்துவோர்

❖ அரசியல்வாதிகள், தொழிலாளர்களைத் தனியாகப் பிரித்து இலாபம் சம்பாதிக்கத் தொழிலாளர்கள் அனுமதிக்கக் கூடாது தொழிலாளர்களை வழி நடத்திச் செல்பவர், தொழிலாளர்களில் ஒருவராகவே இருக்க வேண்டும்.

## மனித ஒழுக்கம்

❖ சட்டத்திற்கு உணர்ச்சி இல்லை; அதைப் பயன்படுத்துகிறவர்களுக்கும், அதை இயற்றியவர்களுக்கும் தான் உணர்ச்சி உள்ளது அப்படிப்பட்ட சட்டம் மனிதனை மனிதனாக வாழச் செய்கிறது. ஒழுக்கம் மனிதனை நேர்மைக்குச் சொந்தக்காரனாக்குகிறது.

## நமது வேலைகளை நாமே செய்ய வெட்கம் எதற்கு ?

❖ ‘‘வீட்டில் எவ்வளவு செல்வச் சூழ்நிலை இருந்தாலும் வீட்டில் நமது வேலைகளை நாமே செய்து நம்மை உயர்த்திக் கொள்ள வேண்டும். நம்முடைய வேலைகளை நாமே செய்வதில் வெட்கப்பட வேண்டிய தேவையே இல்லை.

## பண்பாட்டிற்கு ஒவ்வாத குடிப்பழக்கம்

❖ குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி விட்ட மனிதனைப் பார்த்துக் ‘‘குடிகாரன்’’ என்று குறிப்பிட்டால் அவனுக்குக் கோபம் வருவதில் இருந்து ஒரு பகிரங்க உண்மை வெளிப்படுகிறது. அதாவது, மது அருந்துவது பொதுப் பண்பாட்டிற்கு ஒவ்வாத ஒன்று என்பதைக் குடிகாரனும் ஒப்புக்கொள்கிறான்; உணர்கிறான். இது ஒன்றே போதும் குடிப் பழக்கத் தீமையை விளக்கிட, மதுவிலக்கின் அத்தியாவசியத்தை உணர்த்திட !

## சாதி உணர்வுகளை அகற்றுவோம்

❖ ‘‘எனக்கு’’ என்ற எண்ணம் வராமல் ‘‘நமக்கு’’ என்ற எண்ணம் வரவேண்டும். அப்படிப்பட்ட எண்ணம் வளர்ந்தால் நாட்டில் ஒற்றுமை வளரும். சாதி, கொள்கை ஒற்றுமையை ஏற்படுத்தாது. மதத்தின் பெயரால் தூய்மை தெரியவில்லை, தாழ்வுதான் தெரிகிறது. சாதி உணர்வுகளை அகற்ற இந்த விடுதலை நாளில் சூளுரை எடுப்போம்.

## பிறரை மதிக்கின்ற பண்பு

❖ 150 பவுண்டு அல்லது 200 பவுண்டு உள்ள மனிதன் தன் உடலைத் தூக்கிக் கொண்டு தானே நடந்து செல்ல வேண்டும்! அப்படி இருக்க, சிறு பெட்டியை நாம் தூக்கிச் செல்ல வெட்கப்படத் தேவையில்லை. சிலருக்கு சமுதாயத்தில் அப்படிப்பட்ட எண்ணம் இருப்பதால் இந்தக் கருத்தைக் கூறுகிறேன். பிறரை மதிக்கின்ற பண்பை உள்ளத்தில் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

## மக்கள் வரிப்பணம்

❖ மக்கள் தரும் வரிப்பணம் சரியான வழியில் மக்களுக்குப் பயன்படவேண்டும். மக்களை ஏமாற்றி, அதற்கு அதிகாரிகள் உடந்தையாய் இருந்து, திட்டங்களைப் பாழாக்குவது எங்கள் நோக்கமல்ல, நாங்கள் அதை பின்பற்றத் தயாரில்லை.

## அண்ணா காட்டிய பாதை

❖ இந்த அரசு தனித் தன்மை கொண்டு செயல்படுகிறது. அந்த இலட்சியத்தைத் திட்டமாக்கி, சமதர்ம சமத்துவத் திட்டத்தை அமரர் அண்ணாவின் திட்டத்தை இந்த அரசு நிறைவேற்றியே தீரும். அண்ணா காட்டிய பாதையிலிருந்து வழுவமாட்டோம்!

## தேவர் பிறந்த நாள் விழா

❖ ‘‘ஆத்மீக நெறியில் நம்பிக்கை கொண்டு ஆத்மீக வழியில் செயல்பட்டு வந்த பெருமான், தேவர். ஆத்மீகத்துக்கும் – அரசியலுக்கும் ஒரு பாலம் அமைத்து இறுதிவரை நேர்மையாகவும் நாணயமாகவும் வாழ்ந்தவர், முத்துராமலிங்கத் தேவர் அப்படிப்பட்டவருக்குத் தமிழக அரசு விழா எடுப்பதைத் தவிர வேறு எதை அரசு விழாவாகக் கொண்டாட முடியும்? தேவர் பிறந்த நாளுக்கு விழா எடுப்பது எங்களின் கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்’’.

## மிகப் பெரிய தவறு

❖ புகழ், பாராட்டு வரும்போது தகுதி தெரியாமல் சிலர் மிகப் பெரிய தவறுக்கு ஆளாகி விடுகிறார்கள்!

## எது தியாகம் ?

❖ ஏழ்மை, வறுமையில் எளிமையாக இருப்பது தியாகம் இல்லை; வசதி இருக்கும்போது எளிமையாக இருப்பதுதான் தியாகம்!

## பத்திரிகை தர்மம்

❖ உண்மையை எப்படிச் சொன்னால் புரியும் – புரிந்து கொண்டு மக்கள் செயல்படுவார்கள் என்பதை உணர்ந்து நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையில் பத்திரிகைகள் செய்தி வெளியிட வேண்டும். வேறுவகையில் வெளியிட்டால், அது நாட்டுக்கு நன்மை பயக்காது!

## ஒருமைப்பாடு

❖ ஒருமைப்பாடு என்பது ஒவ்வொருவருடைய உள்ளத்திலிருந்தும் தானாக உருவாக வேண்டிய எண்ணமாகும்!

## உழைக்கும் வர்க்கம்

❖ உழைக்கும் வர்க்கம், எடுத்துக் கொள்ளும் நிலைக்கு வந்தால் தடுக்க முடியாது. ஆனால், அதற்கு முன்பு நாமே கொடுக்கக் கூடிய நிலையை உருவாக்கிக் கொள்ள வேண்டும்!

## நாட்டில் நல்லவை நடக்க...

❖ ஒரு மனிதனின் எண்ணமும், நோக்கமும் மட்டுமே நல்லதாக இருந்தால் மட்டும் போதாது. செயலும், பண்பாட்டுடன் இருக்க வேண்டும். இதை ஒவ்வொருவரும் உணர்ந்தால் நாட்டில் நல்லவை நடக்கும்.

## தமிழ் கற்றோர் நலம் காப்போம்

❖ தமிழ் கற்ற – தமிழைப் பரப்புகிற–புலவர்கள் ஏழ்மையில் வாழ்ந்துதான் தீர வேண்டும் என்ற சமுதாய அமைப்பு இருக்குமானால் அதை மாற்றி அமைக்க இந்த அரசு பாடுபடும். தமிழ் கற்ற புலவர்களின் குடும்பமும்– சுற்றுச் சார்பும்–மகிழ்ச்சியோடு இருக்க நாங்கள் பாடுபடுவோம்.

## வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே இலட்சியம்

❖ எத்தனை தான் இடர்ப்பாடுகள் குறுக்கிட்டாலும், தடைகள் பல நேரிட்டாலும், நாங்கள் அரசுப் பொறுப்பேற்ற பொழுது மக்கள் மன்றத்தின் முன்னால் அளித்த உறுதிமொழியை, வாக்குறுதிகளை நிறைவேற்றியே தீருவோம் என்பதை உறுதியுடன் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். பணியாற்றும்பொழுது வேண்டுமானால் சிற்சில சமயங்களில், தாமதம் ஏற்பட்டிருக்கக்கூடும். ஆனால், நாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றி வைப்பதுதான் எங்களுடைய இலட்சியம், அதற்காக முழுமூச்சுடன் தொடர்ந்து இந்த அரசு பாடுபடும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கடமையைச் செய்வதே பெருமை

❖ எதிர்ப்பைத் தாங்குவது என்பது எளிதானது அல்ல; அத்தகைய எதிர்ப்பின் நடுவிலும் கடமையைச் செய்வதே, பெருமை சேர்ப்பதாகும்!

## வினோபா பாவே

❖ வினோபாவின் மறைவு, நாட்டுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். வன்முறையற்ற சமத்துவ சமுதாயத்தை, அன்பு, அறவழிகளில் உருவாக்க வாழ்நாள் எல்லாம் பாடுபட்ட தூயவர் வினோபா பாவே அவர்கள், அவரது மறைவு, காந்தியுக மாமேதையின் மறைவு ஆகும்.

❖ சுற்றுச் சூழலில் வன்முறையும், வெறியும் கோர நர்த்தனம் புரிவதைக் கண்டு, வினோபா பதறினார். அன்பு வழியில் மக்களை மாற்ற முடியும், எவரும் கெட்டவர் அல்ல, என்ற நம்பிக்கையோடு அவர் செயலில் இறங்கினார்.

❖ கால்கடுக்க நடந்து, நாட்டை வலம் வந்து, ஏழைகளின் நிலப்பசியைப் போக்க இருப்பவர்களிடம் இருந்து பூமிதானம் பெற்றார். இந்த அமைதிப் புரட்சிக்கு ஈடான ஒன்று உலக வரலாற்றில் இருந்தது இல்லை.

❖ “வினோபாவைச் சந்தித்து உரையாடிய, பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியது போல, “சர்க்காரின் துணை இன்றி சாந்தம், சீலம் எனும் அருங்குணத்தின் துணை கொண்டு மட்டுமே ஏழைகளுக்காக நிலம் பெற்ற வினோபா இந்த நூற்றாண்டின் இணையற்ற சமுதாயச் சிற்பி”.

## நல்லவர்களின் சக்தி

❖ மனிதனின் நல்ல செய்கைகள் இயற்கையைக்கூட மாற்றி அமைத்துவிடும். நாலு நல்லவர்களின் சக்தியால் நாடு முழுவதற்கும் நல்ல பலன் கிடைக்கும். இது வரலாற்று உண்மை!

## குறை கூறுவோர் செய்தது என்ன ?

❖ எதையும் குறை கூறுவதும் குற்றம் காண்பதும் எளிதானது. ஆனால் அப்படிக் குறை கூறுபவர்கள் நாட்டுக்காக எதைச் செய்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்!

## பொருளாதார நிபுணர்களின் பிரச்சினை

❖ பொருளாதார நிபுணர்களுடைய கண்ணோட்டம் வேறு; பாமர மனிதர்களுடைய வாழ்க்கைக் கண்ணோட்டம் வேறு என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதிலும் இந்தியத் துணைக் கண்டத்தில் என்னுடைய அனுபவத்தை வைத்துச் சொல்லுகின்றேன். எந்தப் பொருளாதார நிபுணர்கள் பேசினாலும் உச்சக் கட்டத்தில் நின்று கொண்டு பார்க்கின்றார்கள், சொல்லுகின்றார்களே தவிர, அடிமட்ட மக்களுடைய உள்ளுணர்வினுடைய பிரதிபலிப்பாக, எதிரொலியாக அது அமையாததன் காரணம்தான், இன்றைய தினம், இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பொருளாதாரப் பிரச்சினை என்பதை நான் திட்டவட்டமாகக் கூற விரும்புகின்றேன்.

## தேசியம்

❖ தேசியம் என்பது ஒரு தனி ஜாதிக்கோ, ஒரு மொழியினருக்கோ சொந்தமல்ல, இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கின்ற அத்தனை பேருக்கும் சொந்தம்.

## பிள்ளைச்செல்வம்

❖ நெஞ்சிலே முள் தைத்தால் கூட அது குழந்தையின் நகமாக இருந்தால் அந்தக் காயம் பட்ட இடத்தில் வலியேற்படுவதில்லை, சிரித்துக் கொண்டிருப்போம்.

## சமூகம்

❖ சமூகம் என்று வரும்போது அது பரவலாக இருக்க வேண்டும். அனைத்துப் பிரிவிலே வாழும் மக்களுக்கும் அது வழிகாட்டுவதாக இருக்கவேண்டும். அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்வதாக இருக்க வேண்டும்.

## என் வாழ்வு

❖ நாட்டு மக்களே, நீங்கள் வாழ்ந்தால்தான் நானும் வாழ்வேன்; உங்கள் வாழ்வோடு இணைந்தது தான் என் வாழ்வு!

## தமிழ் தேசியம்

❖ தேசிய ஒருமைப்பாடு – தேசிய ஒருமைப்பாடு என்று சொல்கின்றார்களே இந்த "தேசியம்" என்பதற்கு ஒட்டுமொத்தமாக உள்ள பொருளை நன்றாகப் பேசக்கூடியவர்கள் கூடப் புரிந்து கொள்கிறார்கள் என்று சொல்ல முடியாது. "தமிழ் தேசியம்" என்று இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம், தமிழ்நாடு, தமிழ் மக்கள், தமிழ் மொழி, தமிழருடைய வளர்ச்சி, தமிழருடைய வாழ்வு, தமிழருக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கிற நிலம் இவைகளைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்து, அதற்காக ஒருவன் பாடுபடுகிறான்; உழைக்கிறான் – என்றால் அவன் தேசியவாதி இல்லையா? பல தேசியவாதிகள் ஒன்று கூடினால்தான் அனைத்திந்திய தேசியம் ஆக முடியும். பல மாநிலங்களுடைய தேசிய உணர்வுகள் ஒன்றுபடும்போதுதான் ஒருமைப்பாடு வரும்.

## உள்ளத்தில் மாற்றம் வேண்டும்

❖ ஒருமைப்பாடு என்பது அகத்தைப் பொறுத்ததே தவிர, புறத்தைப் பொறுத்ததேயல்ல. உள்ளத்தில் மாற்றம் இருந்தாக வேண்டும். அந்த உள்ளமாகிய மாற்றம் வரும்போது தான் மனிதனுக்கு மனிதன் ஏற்றத்தாழ்வு இருக்க முடியாதென்று நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். உள்ளத்தில் மாற்றம் வேண்டுமானால் வாழ்க்கையிலே சமத்துவம் இருந்தாக வேண்டும்.

## தடைகளை அப்புறப்படுத்துவோம்

❖ அண்ணா அவர்களின் அணுகுமுறையைத்தான் தமிழக அரசு கடைபிடித்துச் செயல்பட்டு வருகிறது. பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும்

காண விரும்பி, சமத்துவ சமுதாயத்தை காண்பதில் ஏற்படுகின்ற தடை எதுவானாலும் அதை அப்புறப்படுத்திச் செயல்படத் தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது.

### நம்பிக்கையுடன் செயல்படு

❖ நனவினிலே இருங்கள், கனவு காணாதீர்கள்; நம்பிக்கையுடன் எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் அது கைகூடும்!

### உழைப்பவரே உயர்ந்தவர்

❖ பிளவுபடுத்தும் சுயநல சக்திகளைப் புறம் தள்ளி, உழைப்பவரே உயர்ந்தவர் என்ற தத்துவத்தை நிலைநாட்ட உழைக்கும் மக்கள் ஒன்று சேர வேண்டும்!

### காற்றடைத்த பலூன்

❖ எதேச்சதிகாரமும் சர்வாதிகாரமும் காற்றடைத்த பலூனைப் போன்றவை; எந்த நேரத்திலும் உடைந்துவிடும்!

### உழைப்பும், அறிவும்

❖ பெண்ணில்லாமல் ஆணில்லை என்று கூறும்போது, ஆணில்லாமல் பெண் இல்லை என்றும் வந்துவிடுகிறது. இப்படித்தான் உழைப்பும், அறிவும் இருக்க வேண்டும்!

### குணம் – எண்ணம் – அன்பு

❖ வாழ்வு வளம்பெற வேண்டுமானால் எதிலும் பதட்டம் காணாத குணமும், பரபரப்பில்லாத எண்ணமும், வெறுப்பில்லாத அன்பும் வேண்டும்.

### திரு.வி.க.

❖ தமிழகத்தில் எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் திரு.வி.க. போன்றவர்களின் சிலைகள் தோன்ற வேண்டும். அரசு மட்டும் செய்யாமல் வசதி படைத்தவர்களும் இந்தப் பணியைச் செய்ய வேண்டும். தமிழைக் காத்து, வளர்த்து, பெருமை சேர்த்து – மொழியால் தமிழினத்தை ஒன்றுபடுத்த முடியும் எனக் கூறும் நாள் இது.

## ஒவ்வொருவரின் கடமை

❖ நாட்டின் தற்காப்புக்காக உயிரையும் பணயம் வைத்துப் போராடவேண்டியது நம் ஒவ்வொருவரது கடமையுமாகும்!.

## பிரிவினை சக்திகளை எதிர்ப்போம்

❖ நமக்குள் பல்வேறு பிரச்சினைகள் இருக்கலாம்; ஆனால், அந்த நேரத்தில் இந்தியாவைப் பிரிக்க எந்த சக்தி வந்தாலும், அதை எதிர்த்தே ஆகவேண்டும்!

## நேர்மை

❖ அரசியல் கட்சிகளில் சேருபவர்கள் எந்தத் தொழிலும் செய்யக்கூடாது என்பதல்ல. அவர்கள் செய்யும் தொழிலில் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும்.

## யாரிடம் வீரம் காட்டுவது ?

❖ சக்தி குறைந்தவர்களிடம் வீரத்தைக் காட்டுவது சரியல்ல.

## போகும் வழி புரியாமல் போகும்

❖ நாம் வந்த வழியை மறந்து விட்டோமானால், போகும் வழி நமக்குப் புரியாமல் போய்விடும்.

## கட்சி பார்த்து பணி செய்வதில்லை

❖ நாங்கள் திட்டங்களை—பணிகளைச் செய்யும்போது இவர் எந்தக் கட்சி, யார் என்று பிரித்துப் பார்த்து செய்வதில்லை; அனைவரையும் ஒன்றாகவே கருதிச் செயல்படுகிறோம்.

## சரித்திரம் நமக்குத் தந்துள்ள பொறுப்பு

❖ வலிமை மிக்க இந்தியாவில், வளம்மிக்க தமிழகத்தை உருவாக்கி, நமது சந்ததிகளுக்கு ஒளிமிக்க எதிர்காலத்தைப் படைத்திடும் அரியதோர் பொறுப்பைச் சரித்திரம் நமது தோள்களில் சுமத்தியிருக்கிறது.

## தொழிலாளர் தனி இயக்கம்

- தொழிலாளர்கள் தாங்களே ஓர் அமைப்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்; தொழிலாளர் இயக்கங்கள் தனி இயக்கமாக இருக்க வேண்டும்; அரசியல் இருக்கக் கூடாது!

## சத்துணவைக் குறை கூறுபவர்

- குழந்தைகளுக்குச் சத்துணவு போடுகிறோம்; இது பற்றிச் சிலர் குறை கூறுகிறார்கள். பசித்த குழந்தைகள், அரசு வழங்கும் உணவைச் சாப்பிடுவது கேவலமா ?

## மக்களின் தேவையறிந்து செயல்படுகிறோம்

- ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தால், அவர்கள் மக்கள் தொண்டர்கள் என்றார் பேரறிஞர் அண்ணா. அந்த வகையில்தான் நாங்கள் எங்கள் பணிகளைச் செய்து வருகிறோம், அரசியல்–சாதி–மதம் பார்த்து நாங்கள் எங்கள் பணியைச் செய்யவில்லை; மக்கள் தேவையறிந்தே செயல்படுகிறோம்.

## தகுதியானவர்களுக்கு தகுதியான இடம்

- இப்போது நுழைவுத் தேர்வை எதிர்க்கிறார்கள். இதனால் யாருக்கு என்ன நன்மை ?

  ஆயிரம்–பத்தாயிரம்–இலட்சம் ரூபாய் என்று லஞ்சம் வாங்கினார்கள் என்றார்கள். இப்போது அதற்கு வழியே இல்லையே. நுழைவுத் தேர்வில் பதில்கள்தான் கொடுக்கப்படுகின்றன. கேள்விகள் இல்லை. அதில் சரியான பதிலை ‘டிக்’ செய்ய வேண்டும். அதாவது கோடு போட வேண்டும். அவன் போடுகிற கோடு அவன் தனக்கே போட்டுக்கொள்கிற கோடு. யாரும் இதில் தலையிட முடியாது, சிபாரிசு பண்ண முடியாது. இதைத் தவறு என்று சொல்பவர்களும் நாட்டில் இருக்கின்றார்கள். இதை எதிர்த்தால் ஏழைகளுக்கு எப்படி விமோசனம் கிடைக்கும் ? இந்த அரசைப் பொறுத்தவரை தகுதியான வர்களுக்குத் தகுதியான இடம் இருக்கும்.

## மக்கள் தொகைப் பெருக்கம்

- “மக்கள் தொகைப் பெருக்கம் மதுவைப் போலக் கேடு பயக்கும்”.

## மக்களின் நம்பிக்கை

❖ மக்கள், நான் நல்லவன் என்று நம்பித்தான் என்னைப் பெரிய பொறுப்புக்குத் தேர்ந்து எடுத்து இருக்கிறார்கள். எனக்கு வேறு எந்தத் தகுதியும் இருப்பதாக நான் கருதவில்லை. நான் நல்லவனா இல்லையா என்பதைப் பற்றிக்கூட நானாக ஒன்றும் சொல்ல முடியாது. வருங்காலச் சந்ததியினர்தான் அதைப் பற்றி அபிப்பிராயம் சொல்ல முடியும். ஆனால் என்மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்ள என்னாலான எல்லா முயற்சிகளையும் செய்வேன் என்று மட்டும் என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். ஆகவேதான், என்னுடைய ஒவ்வொரு நடவடிக்கையிலும் நான் மிகுந்த கண்காணிப்புடனும் விழிப்புடனும் இருக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

## மாற்றமின்றி முன்னேற்றமில்லை

❖ மாற்றங்களின்றி முன்னேற்றமில்லை. முன்னேற்ற மில்லையேல் வரலாறு இல்லை. மாறுதல் என்பது சிறப்பாக அமையும்போதுதான் அதுவே முன்னேற்றத்திற்கான சீரான பாதையினையும் அமைத்துக் கொடுத்துவிடுகிறது.

## முன்னேற்றத்தின் பலன் ஏழைக்கு கிடைக்க வேண்டும்

❖ சமூக முன்னேற்றமும் பொருளாதார வளர்ச்சியும் ஒரு நாட்டின் இன்றியமையாத தேவை என்றாலும், அதன் பலன்கள் ஏழை எளிய மக்களுக்குக் கிடைப்பது அவசியம்.

## எம் கடன் பணி செய்து கிடப்பதே

❖ எங்கள் அடி ஒவ்வொன்றும் அமரர் அண்ணா அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டது போல அளவான ஸ்திரமாக முறையில் வைக்கப்படுவதாகும் என்பதை அடக்கத்தோடு சொல்லிக் கொள்வதிலே நான் பெருமைப்படுகிறேன். பதவிச் சுவை எங்களுக்குப் பெரிதல்ல. எம் கடன் பணி செய்து கிடப்பதே என்பதைச் சொல்லிக் கொள்வதில் நான் பெருமிதம் அடைகிறேன்.

## நிர்வாக இயந்திரம் இயங்க வேண்டிய வகை

❖ "நமது சமுதாயத்தின் அனைத்துப் பகுதி மக்களும் நல்லிணக்கமான முறையில் சீரான முன்னேற்றம் பெற உத்தரவாதம் தரப்பட வேண்டும். சமநிலைக்குப் பங்கம் ஏற்படாத வகையில் வளர்ச்சிகள் அமைய வேண்டும். அமைதியான சூழ்நிலையில்—சட்டம் ஒழுங்குக்கு எவ்வித பாதகமும் நேராத வகையில் மக்களின் நல்வாழ்வையே இலக்காகக் கொண்டு நிர்வாக இயந்திரம் இயங்க வேண்டும். இதுவே எங்களுடைய அரசியல் சமுதாய தத்துவமாகும்.

## இலட்சியப் பயணம்

❖ நாங்கள் இதுவரை சாதித்த சாதனைகளைக் காட்டி மெத்தனமாக இருந்துவிடப் போவதில்லை. புதியதோர் சமுதாய அமைப்பு எனும் இலட்சியபுரியை நோக்கி நாங்கள் தொடர்ந்து முன்னேறி வருவோம். மக்களுக்கு மகத்தான முறையில் தொண்டாற்ற வேண்டுவதற்காக ஈடு இணையற்ற விசுவாசத்துடன், கடமைப்பற்றுடன் தமிழக மாந்தரின் மாபெரும் ஆதரவுடன் எங்களது இலட்சியப் பயணம் இடையறாது தொடர்ந்து தொய்வின்றி நடந்துகொண்டிருக்கும்".

## சமதர்ம இன்பவாழ்வு

❖ ஒருமித்த ஐக்கிய உணர்வோடு அரசியல் வண்டி இழுக்கப்பட்டால்தான் அந்த வண்டி சமதர்ம இன்ப வாழ்வு என்கிற எல்லைக் கோட்டினை எட்டிப்பிடிக்க முடியும்.

## அரசியல் வியாதி

❖ தன் பக்கம் நியாயம் இல்லை என்று அறிந்தும் ஓர் அரசியல்வாதி தன் கட்சிக்கு வெற்றி தேட முயல்வாரானால், அவர் அரசியல்வாதி அல்ல; அரசியல் வியாதி ஆகிவிடுவார்!

## ஏமாற்றம்

❖ புறத்தில் உள்ள நிலைமைக்கேற்ப அகத்தில் ஆசை அரும்ப வேண்டும். இயலாத ஒன்றை மனம் விரும்பினால் விளைவது ஏமாற்றமாகத்தான் இருக்கும்.

## பொதுநலம்

❖ தன்னலம் தேவைதான்; அது பொதுநலமாகப் பரிணமிக்க வேண்டும்.

## தன்னை அறிவது

❖ தன்னை அறிவது என்பதில் இரண்டு வகை உண்டு. ஒன்று தனது நிலை, சக்தி, அறிவு முதலியவை. மற்றொன்று—பிறர் நம்மைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது!

## சட்டம் வெற்றி பெற...

❖ புறத்தில் உள்ள சட்டம் வெற்றி பெற வேண்டுமாயின் மக்களின் அகநிலை, அதற்கு முழுமையான ஆதரவை அளிக்க வேண்டும்.

## ஜவஹர்லால் நேரு

❖ "இந்தியத் துணைக்கண்டத்தை ஒன்றாக இணைத்து அதன் வாழ்வுக்காகவும், வளர்ச்சிக்காகவும் ஓயாது உழைத்துக்கொண்டு இருந்த ஈடு இணையற்ற மகத்தான சக்தி நேரு."

❖ மக்களின் குரலுக்கு மதிப்பு அளித்து, மக்கள் ஆட்சியின் மாண்பினை விளக்கிக் கொண்டு இருந்த ஜனநாயகவாதி அவர்.

## ஆற்றலுக்கு முதலிடம்

❖ அறிவியல் துறையில் போட்டி வேண்டும். ஆற்றலுக்கு முதலிடம் தரப்பட வேண்டும். ஆற்றல் இல்லாதவர்களுக்கு அது கிடைக்க வழி செய்யப்பட வேண்டும்.

## சமுதாயத்தின் அங்கங்கள்

❖ சமுதாய உணர்வோடு நாம் பிரச்சினைகளை அணுக வேண்டும். நாம் தனி மனிதர்கள் என்பது எவ்வளவு முக்கியமோ, அதை விட முக்கியமானது நாம் ஒரு சமுதாயத்தின் அங்கங்கள் என்பது!

## செயல் ஒழுங்கு

❖ வயிற்றுப்பசியைத் தீர்த்துக் கொண்டால் மட்டும் போதாது! விலங்கினங்கள் கூடத்தான் வயிற்றுப் பசியைத் தீர்த்துக் கொள்கின்றன. அவற்றினின்றும் மேம்பட்ட நிலையை மனிதன் அடைவதற்குத் தன்னுடைய ஒவ்வொரு செயலிலும் ஓர் ஒழுங்கினை வரையறுத்துக் கொள்ள வேண்டும்.

## வன்முறைக்கு பரிசு தோல்வியே

❖ வன்முறை தான் போராட்டமுறை என்றால் தோல்வி தான் அதற்குப் பரிசாகக் கிடைக்கும் என்பது நிச்சயம்.

## எழுத்தாளர்களின் திறமை

❖ எழுத்தாளர்களின் திறமை என்பது காலப்போக்கில் மாறுவது என்றாலும் அந்த எழுத்தாளர்களின் எழுத்துகள் எதிர்காலச் சந்ததிகளின் தலையெழுத்தை நிர்ணயிக்கின்றவைகள்

## எழுத்துக்களின் வகைகள்

❖ எழுத்துகள் என்பதில் பல்வேறு வகை இருக்கின்றன. பிறரைச் சிந்திக்க வைக்கிற மாதிரி எழுதுவது ஒரு வகை, பிறரைப் புண்படுத்தாமல் எழுதுவது ஒரு வகை, பிறரை வைத்துச் சிந்திக்க வைப்பது ஒரு வகை. அப்படிச் சிந்திக்க மறுப்பவர்களைச் சந்திக்கு இழுப்பது என்பது ஒரு வகை.

## சீரான முன்னேற்றம்

❖ நமது சமுதாயத்தின் அனைத்துப் பகுதி மக்களும் நல்லிணக்கமான முறையில் சீராக முன்னேற்றம் பெற உத்தரவாதம் தரப்பட வேண்டும். சமநிலைக்குப் பங்கம் ஏற்படாத வகையில் வளர்ச்சிகள் அமைய வேண்டும்.

## இன்றியமையாத் தேவையின் பலன்கள்

❖ சமூக முன்னேற்றமும், பொருளாதார வளர்ச்சியும் ஒரு நாட்டின் இன்றியமையாத தேவை என்றாலும், அதன் பலன்கள் ஏழை, எளிய மக்களுக்குக் கிடைப்பது அவசியம்.

## தமிழ் நலனே நம் நோக்கம்

❖ தமிழ் நலன், தமிழின் பண்பாடு, தமிழ்ச்சமுதாயம் தமிழ்க் கலாச்சாரம் வளர வேண்டும் என்பது நமது நோக்கமாக இருத்தல் வேண்டும்.

## செயலில் பண்பாடு

❖ ஒரு மனிதனின் எண்ணமும், நோக்கமும் மட்டுமே நல்லதாக இருந்தால் மட்டும் போதாது. செயலும் பண்பாட்டுடன் இருக்க வேண்டும். இதை ஒவ்வொருவரும் உணர்ந்தால் நாட்டில் நல்லவை நடக்கும்.

## சமுதாயக் கேடு

❖ மது அருந்துவது மக்கள் அறியாமலேயே எத்தகைய கேடுகளை அவர்களுக்கு உண்டாக்குமோ, அது போல மக்கள் தொகைப் பெருக்கமும் நாம் அறியாமலேயே சமுதாயத்திற்குக் கேடு உண்டாக்கக் கூடியவை.

## இசைக்கும் உண்டு கோபதாபம்

❖ கோபதாபம் மனிதர்களுக்கு மட்டுமல்ல இசைக்கும் உண்டு. இசையின் மூலம் அமைதியைக் காட்ட முடியும். கோபதாபத்தைக் காட்ட முடியும்.

## இசையும் தவமும்

❖ கடவுளை இரண்டு வழிகளில் அணுக முடியும். ஒன்று இசையால், மற்றொன்று கடுமையான தவத்தால்.

## ஆடலும் பாடலும்

❖ பாடல் முதலில் தனக்காகப் பாடப்பட வேண்டும். தான் ரசிப்பதற்காகப் பாட வேண்டும். பிறர் ரசிப்பதற்காக அல்ல! ஆடலும் அது போலத்தான். ஆடுபவர்கள் தமக்காகத்தான் ஆட வேண்டும். பிறர் மகிழ்வதற்காக அல்ல.

## அடிப்படை மூலதனம்

❖ கூட்டுறவு என்பது மனிதனுக்கு மனிதன் தகுதியை உணர்வது மட்டுமல்ல. தரத்தை மட்டுமல்ல, அவர்களை மதிக்கக் கூடிய பணியைப் பெறுவது மட்டுமல்ல, தங்களுக்கு முடிவதைப் பிறர் இயலாமையை எண்ணி அவர்களுக்கு உதவி செய்யக் கூடிய அந்த எண்ணமே கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படை மூலதனமாகும்.

## குழந்தையின் விருப்பம்

❖ குழந்தை எந்தத் தொழிலை விரும்புகிறதோ அதையே நாம் கற்றுக் கொடுக்க வேண்டும்.

### கலை நிரந்தரம்

❖ கலை எப்போதும் நிரந்தரமாய் இருக்கும். ஆனால் கலைஞர்கள் நிரந்தரமாய் இருக்கமாட்டார்கள்.

### நமது கடமை

❖ இன்றைக்கு வாழ்கின்ற நாம் நமது கடமையைச் சரியாக செய்தால் தான் எதிர்காலத்தில் வரும் நமது சந்ததியினர் நல்வாழ்வு வாழமுடியும்.

### மக்கள் ஏமாளிகள் அல்லர்

❖ சிலர் மக்களை ஏமாளிகள் என்று கருதுகிறார்கள். அவர்கள் இன்னும் மக்களைப் புரிந்து கொள்ளாததே இதற்குக் காரணம்.

### ஒரு கட்சி ஆட்சி ஒத்து வராது இந்தியாவுக்கு !

❖ ஒரே கட்சி ஆட்சி தான் இந்தியாவில் இருக்க வேண்டுமென்று யார் விரும்பினாலும் சரி, இது இந்த நாட்டிற்கு நல்லதல்ல, அது இந்த நாட்டிற்கு ஒத்து வராது என்பதை நான் கண்டிப்பாக கூற விரும்புகிறேன்.

### தன்னலம் என்பது...

❖ நம்முடைய குழந்தை மூக்கு வடித்துக் கொண்டு நின்றால் நாம் அதைத் துடைக்கிறோம். ஆனால் அடுத்தவர்களின் குழந்தை அவ்வாறு இருந்தால் நாம் துடைப்பதில்லை.

### சிரஞ்சீவி

❖ கலைஞர்கள் நாட்டுக்காகப் பாடுபட வேண்டும்; அப்போது தான் அவர்கள் சிரஞ்சீவியாக இருப்பார்கள்.

### அரசியலும் இளைஞர்களும்

❖ இளைஞர்கள் அரசியலைத் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் அரசியல்வாதிகளாக இருக்கக் கூடாது.

### நீதியில் அரசியல் வந்தால்...

❖ நீதித்துறையில் அரசியல் கட்சி வரக்கூடாது. வந்து விட்டால் நீதி செத்துவிடும்.

## சொந்தக் காலில் நிற்பது

- ❖ சொந்தக் காலில் நிற்பது நல்லது மட்டுமல்ல. நடைமுறைக்குத் தேவையானதும் ஆகும்.

## உழைக்கும் வர்க்கத்திற்கே பாதகம்

- ❖ நம்மை நாமே ஆண்டு கொள்கிற மக்களாட்சியின் வேலை நிறுத்தங்களால் ஏற்படும் இழப்புகள் இறுதியில் உழைக்கும் வர்க்கத்திற்கே பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

## அரசு அலுவலர் சிந்திக்க...

- ❖ மக்கள் தரும் வரிப்பணத்திலிருந்து நமக்குச் சம்பளம் கொடுக்கிறார்கள். ஆகவே மக்களுக்குத் தொண்டு செய்கிறோமே தவிர எஜமானர்கள் அல்ல என்ற வகையில் அரசு அலுவலர்களும், மற்றவர்களும் அந்தப் பணியைச் செய்தால் தான் நிலைமை சீர்படும்; எந்தத் திட்டமும் நிறைவேறும்.

## மாணவர்களின் கடமை

- ❖ உடலைப் பேணிக் காப்பது, தேகப் பயிற்சி செய்வது, உண்மைக்கு மட்டுமே மதிப்பளிப்பது, உள்ளத் தூய்மையைப் பெறுவது, எவ்வளவு அதிகமாக விஞ்ஞானத்தையும், உலக வரலாற்றையும் கற்க முடியுமோ அத்தனையையும் கற்பது; தற்காப்புக்கேற்ற ஒரு கலையைக் கற்பது இவை எல்லாமே மாணவர்களின் கடமை ஆகும்.

## விமர்சியுங்கள்...

- ❖ எதையும் உண்மையின் அடிப்படையில் விமர்சியுங்கள். முடிவில் உண்மை தான் நிலைக்கும் என்பதை மனதில் கொண்டு விமர்சியுங்கள்.

## கலைஞர்கள் மக்களிடமிருந்து ஒதுங்கினால்...

- ❖ மக்களையே மகிழ்விக்கவே நடிக்கிறோம். அவர்களால் தான் கலைஞர்களின் வாழ்க்கைச் சக்கரமே சுழல்கிறது. அவர்களிடமிருந்து ஒதுங்கி வாழ்ந்தால் அவர்கள் ஒதுக்கிவிடுவார்கள்.

## பயங்கர விஷ வாயு – வதந்தி

❖ வதந்தி எந்த நேரத்திலும் பரப்பக்கூடாத ஒரு ஆபத்தான, பயங்கர விஷவாயு ஆகும்.

## ஜனநாயகம் அனுமதிக்காது

❖ ஜனநாயகத்தின் அடிப்படையே சிந்திப்பதும், பேசுவதும், எழுதுவதும் ஆகும். ஆனால் ஜனநாயகத்திற்கு ஆபத்து ஏற்படுத்துவதற்குச் சிந்திக்கவும், பேசவும், எழுதவும் உள்ள உரிமையைப் பயன்படுத்த அதே ஜனநாயகம் அனுமதிக்காது.

## கலைஞர்கள் உலகத்திற்கே சொந்தம்

❖ அரசியல்வாதிகள் ஒரு நாட்டுக்குத் தான் சொந்தம்; கலைஞர்கள் உலகத்திற்கே சொந்தமானவர்கள்.

## பெற்றோரைத் துன்புறுத்தலாகாது

❖ மாணவர்களே உங்களுடைய தேவைகளுக்காகப் பெற்றோரைத் துன்பப்படுத்தக் கூடாது. உங்கள் ஆசைகளுக்காக அவர்கள் கஷ்டப் படக்கூடாது. நீங்களே உழைத்து உங்களது விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்.

## சோதனைக்கு பின்னே சுகம் வரும்

❖ சோதனைகள் வந்தால் பின்னாலேயே சுகம் தேடிவரும். சிரமங்களைக் கண்டு மனம் இடிந்துவிடக்கூடாது. தைரியமாக இரு. எதுவாக இருந்தாலும், என்ன நடந்தாலும் கவலைப்படாதே. நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று நினைத்துக்கொள்.

## நிதி இருந்து பயன் என்ன ?

❖ கருணையே இல்லாத இடத்தில் எவ்வளவு நிதி இருந்தாலும் பயனில்லை.

## திருமணம் – நிம்மதிக்கு அஸ்திவாரம்

❖ திருமணம் என்பது சாதாரண வாழ்வில் நடக்கும் ஒரு நிகழ்ச்சி என்று அலட்சியமாக இருந்துவிடாதே. எதிர்காலத்தில் உனது நிம்மதிக்கு அது தான் அஸ்திவாரம்.

## நாடு மறவாது போற்ற வேண்டும்

❖ ஒரு மனிதன் மறைந்த பிறகு அவனை அந்த நாடு மறக்காமல் போற்றினால் தான் அவன் புகழ் பெற்றவனாகின்றான்.

## உழைத்து உண்பதே சிறப்பு

❖ நீங்கள் உண்பவற்றில் மிகச்சிறந்தது நீங்கள் உழைத்து உண்பதே ஆகும்.

## கணவன், மனைவி உள்ளன்பான நேசம் வேண்டும்

❖ கணவன் – மனைவி ஒருவருக்கொருவர் உள்ளன்போடு நேசிக்க வேண்டும். அவர்கள் இருவர் இதயமும் அன்பு நிறைந்திருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் பாச உணர்வு கொண்டிருக்க வேண்டும். இவைகளை எல்லாம் பண்பாட்டினால் தான் பெற முடியுமே தவிர, பணத்தினால் அல்ல.

## யாரை, எங்கே வைக்கவேண்டும் ?

❖ எல்லோரும் நமக்கு வேண்டியவர்கள் தான்; ஆனால் எங்கே யாரை வைக்க வேண்டும் என்று பார்க்க வேண்டும். குடும்பத்தில் கலகம் விளைவிப்பவர்களோடு தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது.

## நல்ல நண்பர்கள்

❖ நல்ல நண்பர்களைப் பெற வேண்டும். எவ்வளவு சொத்து இருக்கிறது அவருக்கு என்று பார்த்து நண்பனைத் தேடினால் அது நட்பைத் தேடுவதாக அமையாது.

## அடிப்படை நியாயம்

❖ கோபம் வருவதற்கு அடிப்படை நியாயத்தை வைத்துக் கொள்ளல் வேண்டும்.

## தீர்க்கதரிசனம் படைத்தவர்கள்

❖ சரித்திரத்தில் திருப்பு முனைகளை முன்கூட்டியே ஊகித்துச் சொல்வது எல்லோராலும் இயலாத காரியம். தீர்க்க தரிசனம் படைத்தவர்கள் என்று யாரைக் கூறுகிறோம் என்றால் வருங்காலத் தலைமுறைகளுக்கும் பயன்படுகிற நெறிமுறைகளை வாழ்வாலும், வாக்காலும் உணர்த்திவிட்டுச் செல்கிறவர்களைத் தான் அப்படிக் குறிப்பிடுகிறோம்.

## மக்கள் ஆட்சியின் வெற்றி

❖ மக்களுக்கும் அரசுக்கும் இடையே நெருக்கமான தொடர்பு அமைவதை பொறுத்தே மக்கள் ஆட்சியின் வெற்றியும் அமைந்திடும்.

## மொழி கட்டாயப்படுத்தக்கூடாது

❖ ஒரு மொழியை நாம் புரிந்து கொள்ள முடியாதபோது அந்த மொழியை கட்டாயப்படுத்தக்கூடாது.

## மனிதனால் உருவாக்கப்பட்டது ஜாதி

❖ ஜாதி என்பது மனிதரால் உருவாக்கப்பட்டது. கடவுளால் உருவாக்கப்பட்டது அல்ல.

## பெண்களே ஜாதி ஒழிப்பாளர்கள்

❖ இன்றைக்கு ஆண்களின் பெயருக்குப் பின்னால் ஜாதிப்பட்டம் இருக்கிறது. ஆனால் பெண்களின் பெயருக்குப் பின்னால் இல்லை. பெண்கள் தான் ஜாதி ஒழிப்பில் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

## எனது கடவுள் கொள்கை

❖ என்னைப் பொறுத்த வரையில் ஜாதி கிடையாது. மதம் கிடையாது. ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்பது தான் எனது கடவுள் கொள்கை. நாமே நம்மவர்களைப் பார்த்து, தொடக்கூடாது என்றால் என்ன அர்த்தம் ?

## அரசியல்வாதி

❖ அரசியலை ஒதுக்கிவிட்டு வாழ முடியாது. வாக்குரிமை எப்போது தரப்படுகிறதோ அப்போதே ஒவ்வொருவரும் அரசியல்வாதி ஆகிவிடுகிறார்கள்.

## சமுதாயத்தின் கட்டுப்பாடுகள்

❖ சமுதாயத்தின் கட்டுப்பாடுகள் ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்தின் கட்டுப்பாடுகளாக அமைய வேண்டும்.

## எண்ணுவதில் வேண்டும் ஓர் எல்லைக்கோடு

❖ எண்ணிச் செயல்பட வேண்டும், ஆனால் எண்ணுவதில் ஓர் எல்லைக் கோட்டை வகுத்துச் செயல்பட வேண்டும்.

## நம்பிக்கை

❖ எந்த நம்பிக்கையும் பயன் தரும் நம்பிக்கையாக அமைய வேண்டும் என்று உள்ளம் உறுதி கொண்டால் பயன் உண்டாவது திண்ணம்.

## கேள்வி எழுந்தால்தான் பதில்

❖ குழப்பம் தோன்றினால்தான் தெளிவு பிறக்கிறது. கேள்வி எழுந்தால்தான் பதில் கிடைக்கிறது.

## பணிவும் துணிவும்

❖ பதவி வரும்போது பணிவு வர வேண்டும். அதோடு துணிவும் வர வேண்டும்.

## வலிமை வேண்டும்

❖ மனதில் நல்லெண்ணம் இருந்துவிட்டால் மட்டும் போதாது. அதை நிறைவேற்றும் வலிவும் வேண்டும்.

## எல்லா மதத்திலும் அறநெறிகள்

❖ எல்லா மதத்திலும் தலைச்சிறந்த அறநெறிகள் இருக்கின்றன. அதை அனைவரும் படிக்க வேண்டும். புரிந்து கொண்டு பின்பற்றி வாழ வேண்டும்.

## அண்ணாவின் எழுத்து

❖ ''அண்ணாவின் எழுத்து மனித உள்ளத்தைப் பண்படுத்தும்! அண்ணாவின் பேச்சு! மனிதனை மனிதனாக்கும்! அண்ணாவின் சிந்தனை! நாட்டின் நலிவைப் போக்கும்!''

## மரங்களின் உதவி

❖ 15 ஆண்டுகளுக்குப் பிறகு 1 கோடி மரம் வளர்க்கப்பட்டு விட்டால் திருச்சி மாவட்டம் எப்படி இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நான் ஒரு ஓவியனாக இருந்தால் படம் தீட்டியும் காட்ட முடியும். அந்த மரங்களின் உதவியினால் எவ்வளவு மழை கிடைக்கும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

## தமிழ் படித்தவர்களுக்கு எதிலும் முதலிடம்

❖ தமிழில் அக்கறை எடுத்துப் படிப்போர் எதிர்காலத்தில் என்ன செய்வது என்ற கவலையில்லாமல் இருக்கச் செய்ய வேண்டும். தமிழ் படித்தவர்களுக்கு –தமிழர்களுக்கு–எதிலும் முதலிடம் தரப்பட்டாக வேண்டும்.

## தமிழ் பண்பாட்டை வளர்ப்போம்

❖ எல்லோருடைய கருத்தும் எல்லோருக்குமே ஏற்றதாக இருப்பதில்லை. உங்கள் கருத்து சிலருக்கு வெறுப்பானதாகக்கூட இருக்கலாம். தவறு செய்யும் சூழ்நிலைகள் அனுமதிக்கப்பட்டிருக்கிற இந்த நாட்டில், உங்களின் நல்ல கருத்துக்கள் சிலருக்கு வெறுப்பையூட்டலாம். அது குறித்து நீங்கள் கவலைப்படாமல் தமிழ்ப் பண்பாட்டை நீங்கள் வளர்த்து, மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## மக்களின் வாழ்வைப் பற்றி கவலைப்படுபவன்

❖ நான் அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திப்பவன் கிடையாது. மக்களின் வாழ்வைப்பற்றிக் கவலைப்படுகிறவன்!

## நாதஸ்வரக் கலையைக் காப்போம்!

❖ நெஞ்சில் தொடங்கி, நாக்கில் தவழ்ந்து மூச்சை அடக்கி வெளிப்படும் நாதம்தான் நாதஸ்வரம், தங்கள் உயிர் மூச்சைத் தந்து மக்களை மகிழ்விக்கிற நாதஸ்வரக் கலையைக் காப்பாற்ற தமிழக அரசு விரும்புகிறது.

## கோயில்கள் தோறும் தமிழ் என்ற இனிமையான ஒலி கேட்க வேண்டும்

❖ கோயில்களில் ஓதுவார்கள் தமிழ் இசைமூலம் பக்தியைப் பரப்பினாலும் சரி எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் நிறை 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற கருத்தைப் பரப்பினாலும் சரி மக்கள் கோயில்களுக்குச் செல்லும்போது 'தமிழ், தமிழ் என்ற இனிமையான ஒலி கேட்க வேண்டும்!' என்ற ஆசை–பேரவா இந்த அரசுக்கு உண்டு!

## இசை மட்டுமே கற்பது ஏற்புடையதன்று

❖ இசைக் கலையை பயில்கிறவர்கள் கல்வி பயிலாமல், இசைக் கலையை மட்டும் கற்பது என்றால் அதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். இசையைக்

கற்கின்ற அதே நேரத்தில், மொழியை–அறிவியலை–வரலாற்றை–இலக்கியத்தைக் கற்க வேண்டும். இரண்டையும் சேர்த்து கற்கச் செய்யப் பெற்றோர்கள் அக்கறை காட்ட வேண்டும்.

### மொழி என்பது இரத்தத்தில் கலந்த உணர்வு

❖ எந்த நாட்டிலாவது, மொழிப்பற்று இல்லாதவர்கள் முன்னுக்கு வந்ததாக வரலாறு உண்டா? மொழி என்பது இரத்தத்தோடு இரத்தமாகக் கலந்த உணர்வாகும்.

### மொழி காக்க சோதனைகளை வெல்வோம்

❖ மொழியைக் காப்பாற்றும் பணியில் நமக்கு எத்தனை எத்தனையோ சோதனைகள் ஏற்படலாம்!

### நாட்டுக்குப் பேரிழப்பு

❖ நாட்டுக்கு, மொழிக்கு, எது நல்லது என்பதைப் பெரியவர்கள் சொல்லாமல் இருப்பார்களேயானால், அது, இந்த நாட்டுக்குப் பேரிழப்பாகும்.

### தமிழ் இசை வளரப் போராடுவோம்!

❖ தமிழ் இசை வளர வேண்டும். அதன் தனித் தன்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்று நீங்கள் பாடுபடுவீர்களேயானால்–போராடுவீர்களேயானால் உங்கள் பக்கம் தமிழக அரசு நிற்கும்.

### தமிழ் மொழி காப்பது நம் கடமை

❖ தமிழ் மொழியை அழியவிட மாட்டோம். அதைப் பாதுகாப்போம். இது நம் அனைவரது கடமையாகும். இந்த உணர்வு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகிறது. இதை நாம் தடுத்து நிறுத்தியாக வேண்டும்.

### திருக்குறளின் பெருமையைப் பரப்புவோம்

❖ தமிழகம் எல்லாம், தமிழர்கள் வாழும் இடமெல்லாம் திருவள்ளுவர் திருநாளை நடத்தி, அதில் அறிஞர் பெருமக்களைப் பங்கு பெறச்செய்து, திருக்குறளின் பெருமையைப் பரப்ப வேண்டும் என்பதுதான் எங்களது பேரவா.

## வள்ளுவருக்கு விழா

❖ அமெரிக்காவில் உள்ள தமிழர்கள் பாரிசில் உள்ள தமிழர்கள், அல்ஜீரியாவில் உள்ள தமிழர்கள் வள்ளுவர் திருநாளைக் கொண்டாட முடியும். திருவள்ளுவரைத் தமிழர்கள் உரிமை கொண்டாடினாலும், உலகம் முழுவதிலும் உள்ள நன் மக்கள் அனைவருக்கும் வள்ளுவருக்கு விழா எடுக்க உரிமை உண்டு.

## காணிக்கை

❖ அறிஞர் பெருமக்கள்—கலைஞர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது. புலவர் பெருமக்களுக்கும் உதவித்தொகை வழங்கப்பட்டது. அதை உதவித்தொகை என்று சொல்ல மாட்டேன் காணிக்கை என்றுதான் சொல்வேன்.

## தமிழ் கற்றோரை அரசு கைவிடாது

❖ தமிழ் கற்ற புலவர்களை தமிழக அரசு கைவிடாது. அவர்கள் வறுமையில் வாழ, இந்த அரசு இடம் கொடுக்காது என்பதையும் உறுதியோடு சொல்லிக் கொள்கிறேன்.

## நிறைந்திருக்கும் தமிழ் இலக்கியம்

❖ தமிழ் இலக்கியங்களை – நூல்களை – ஒரு மாணவன் நூறு ஆண்டுக் காலம் படித்தாலும் படித்து முடிக்க முடியாது. அந்த அளவிற்கு தமிழ் இலக்கியம் நம்மிடம் நிறைந்திருக்கிறது.

## நிம்மதி

❖ எனக்கு 20 வயதிருந்தபோது, நான் இராணுவத்தில் சேருவதற்கு ஆசைப்பட்டேன். எனக்கு அந்த வாய்ப்புக் கிடைக்காமல் போய்விட்டது; எனக்கு வாய்ப்புக் கிடைத்திருந்தால் நான் எப்படியிருந்திருப்பேனோ எனக்குத் தெரியாது – இன்று உயிருடன் இருந்திருப்பேனோ என்னவோ! ஆனால் நான் நிம்மதியாக இருந்திருப்பேன் என்பது மட்டும் உறுதி.

## ஒழுங்கு—நேர்மை—பகுத்தறிவு

❖ குழந்தைகளுக்குப் புத்தகக் கல்வியோடு ஒழுங்கையும், நேர்மையையும், பகுத்தறிவையும் போதிக்க வேண்டும்.

**காமராசர்**

❖ மக்களுக்காகத்தான் சட்டமே ஒழிய, சட்டத்துக்காக மக்கள் அல்ல என்பதைச் செயலில் காட்டியவர் காமராசர்.

## உயர்வையும் புகழையும் காப்பாற்றிக் கொள்வது கடினம்

❖ ஒரு மனிதன் வாழ்க்கையில் உயர்வது என்பதும், புகழ் பெறுவது என்பதும், மற்றவர்களுடைய நம்பிக்கையைப் பெறுவது என்பதும் எளிதல்ல, அதைவிடக் கடினம் அவைகளைக் காப்பாற்றிக்கொள்வது.

## பழிவாங்கும் செயல் நாம் பழகாத ஒன்று

❖ அமரர் அண்ணாவின் மீது ஆணையிட்டுச் சொல்லிக்கொள்கிறேன். உண்மை என்று இருந்தால்தான், நியாயமாக காரியங்கள் நடக்கிறது என்று இருந்தால்தான் இந்த அரசு ஈடுபடுமே ஒழிய பழிவாங்கும் காரியங்களில் தவறான செய்கையில் இந்த அரசு ஈடுபடாது.

## தந்தை பெரியாருக்கு அஞ்சல் தலை

❖ தந்தை பெரியாரின் அஞ்சல் தலையைப் பார்க்கும்போது என் உள்ளத்தில் தோன்றியது என்னவென்றால், 100 ஆண்டுகள் கழித்து அந்த அஞ்சல் தலையைப் பார்க்கும் சமுதாயத்தினர் என்ன பேசுவார்கள் என்று சிந்தித்தேன். அய்யாவின் அஞ்சல் தலையை வெளியிட்டது வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாகும். இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் 50 இலட்சம் அஞ்சல் தலை வெளியிடப்பட்டுள்ளது. இதைக் காண்பவர்கள் உள்ளத்தில் ரவீந்திரநாத் தாகூர் போன்றுள்ள இவர் யார் என்ற கேள்வி எழாமல் இருக்காது.

## குழந்தையின் வளர்ச்சியில் இருக்கிறது நாட்டின் எதிர்காலம்

❖ குழந்தைகள் தொடக்கத்தில் எப்படி வளர்க்கப்படுகிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான் அவர்கள் வாழ்வு அமைகிறது. அந்தக் குழந்தைகளின் வளர்ச்சியிலிருந்துதான் நாட்டின் எதிர்காலம் அடங்கியிருக்கிறது. தொடக்கப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் பண்பட்டவர்களாக வெளிவர வேண்டும்.

## கல்விச் செலவு சமுதாயத் தொண்டு

❖ எத்தனை கோடி ரூபாய் கல்விக்கு அரசு செலவழித்தாலும் அது நமது சமுதாயத்திற்குச் செய்யும் தொண்டு.

## சகாப்தம்

❖ கலைவாணர் ஒரு சகாப்தம். ஆனால் அது முடிந்து விட்ட சகாப்தம். இன்று அவர் இருந்திருந்தால் எனக்கு இந்தக் கஷ்டமில்லை. அவர்தான் முதலமைச்சராக இருந்திருப்பார். அவருக்கு நான் உதவியாக இருந்திருப்பேன்.

## பண்பாடு – பண் பாடு !

❖ ‘கலாச்சாரம்’ என்ற சொல்லைத் தமிழில் ‘பண்பாடு’ என்பார்கள். ‘பண்பாடு’ என்னும் சொல் பண்–பாடு என்று பிரிந்து அழகான மற்றொரு பொருளையும் தருகிறது. அந்தப் பண்பாட்டைக் கடைப்பிடிக்கின்ற நான் பண்–பாடுவோரோடு கலந்து பெருமைப்படுகிறது.

## அனுமதிக்க முடியாது

❖ ஒரு மனிதன், தான் வாழ்வதற்காக ஏதாவது ஒரு வகையில் தொழில் செய்வது அவனது உரிமை. அதைத் தடுக்க முடியாது. ஆனால் மற்றவர்களுக்குக் கிடைக்க வேண்டியதைத் தான் ஒருவனே எடுத்துக் கொள்வதை அனுமதிக்க முடியாது.

## பெரியவர்களைத் திருத்து

❖ குழந்தைகள் கெடுவதே பெரியவர்களால்தான். எனவே, குழந்தைகளைத் திருத்துவது பெரியவர்களை திருத்துவதற்குச் சமமானதாகும். குழந்தைகளைத் திருத்துவது என்பதைவிட, காப்பது என்று சொல்வதே பொருத்தமானதாக இருக்கும்.

## குழந்தைகளைக் காப்பாற்றுவோம்

❖ குழந்தைகளை நாம் காப்பாற்றியாக வேண்டும். நல்லது எது ? கெட்டது எது ? என்று பிரித்துப் பார்க்கத் தெரியாத காலம் குழந்தைப் பருவமாகும். நல்லனவற்றைக் குழந்தைகளுக்கு சொல்லித்தர வேண்டும். அதே

நேரத்தில் கெட்டனவற்றைக் குழந்தைகளுக்குத் தெரியாமலேயே மறைத்துவிட வேண்டும். கெட்டது என்பது என்ன என்றே தெரியாமல் அல்லது கெட்டது பற்றியவற்றை குழந்தைகள் சந்திக்க வாய்ப்பே இல்லாமல் செய்திட வேண்டும். இப்படிச் செய்தால் அது மாபெரும் தொண்டு என்பதில் சந்தேகமில்லை.

## சாதி மத பேதம் பற்றிய கருத்து குழந்தைகளின் காதுகளிலேயே படக்கூடாது

- ❖ அரசியல் கூட்டங்களுக்குக் குழந்தைகளை அழைத்து வராதீர் என்று நான் அடிக்கடி சொல்வதுண்டு.
- ❖ சாதிமத தாழ்வு பேதம் பற்றிய கருத்துகள் குழந்தைகளின் காதுகளிலே கேட்கப்படக் கூடாது என்பது என் எண்ணம்.

## கலைஞர்களுக்கு சிறப்பு

- ❖ கலைஞர்கள் வாழ்ந்தாக வேண்டும். ரஷ்யாவில் முதிய கலைஞர்களின் வாழ்வுக்கு உதவி செய்கிறது அரசு. அங்கே விஞ்ஞானிகளுக்கு முதல் மரியாதை கிடைக்கிறது. அடுத்ததாக, கலைஞர்களுக்குத்தான் சிறப்பு செய்யப்படுகிறது.

## கலைஞர்களுக்கு சிறப்பு செய்யும் அரசு

- ❖ கலைஞர்கள் அச்சம் தவிர்க்க வேண்டும்! உண்மையை வெளியிடுகின்ற துணிச்சல் வேண்டும்! ஆய்ந்து பார்க்க வேண்டும்—ஆழமாக ஆய்ந்து பார்க்க வேண்டும்—இந்த அரசு கலைஞர்களுக்குத் தேவையான உதவிகளை செய்யும்.

## மொழியால் விடுதலை

- ❖ அயர்லாந்து விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள் எத்தனையோ முறைகளைக் கையாண்டும் மக்களை ஒருங்குகூட்டி விடுதலை பெற முடியாமல் போனபின் அயர்லாந்து மொழியை முன்நிறுத்தி அந்த மொழிக்குத் தனி உரிமை வேண்டும் என்று போராடிய பின்னரே அந்த நாடு இன்றையதினம் விடுதலை பெற்ற நாடாக விளங்குகின்றது.

## அயர்லாந்தும் மதுரையும்

❖ மதுரையை எத்தனையோ மொழிகள் முற்றுகையிட்டன. வேற்றரசர்கள் மதுரை மீது படையெடுத்தார்கள். அப்போதெல்லாம் மதுரை மாநகரம் தலைவணங்காமல் தலை நிமிர்ந்து நின்று தமிழால் நிலைபெற்றது. இவ்வகையில் அயர்லாந்து வரலாறும் மதுரை வரலாறும் ஒற்றுமையாக அமைந்திருப்பதனைக் காணலாம்.

## மறுமலர்ச்சிக்கு வழி தேடித்தரும் தமிழ் மொழி

❖ தமிழ் வெறும் வழக்குமொழியாக, பேச்சுமொழியாக, மேடைப்பேச்சு மொழியாக, இருந்துவிடாமல் கருத்துக்கும், இந்த நாட்டின் வாழ்வுக்கும், இந்த நாட்டு மக்களின் மறுமலர்ச்சிக்கும் வழிதேடித்தருகின்ற ஒரு மொழியாக அமைந்தாக வேண்டும். அந்தத் திறமையும் தகுதியும் தமிழ் மொழிக்கு உண்டு என்பதனை நான் இங்கே பெருமையுடன் சொல்ல விரும்புகின்றேன்.

## உயிர் மூச்சு தமிழ்

❖ தமிழைப் பற்றி பேசுவதால் மட்டும் தமிழ் பாதுகாக்கப்பட்டு விடும் என்று யாரும் தயவுசெய்து எண்ணி ஏமாந்து விடாதீர்கள். நம்முடைய உயிர் மூச்சாகத் தமிழ் கலந்திருக்க வேண்டும். தமிழ் என்ற சிந்தனை நம் உள்ளத்தில் ஊற வேண்டும். இதுவே என் வேண்டுகோள்.

## இதுதான் ஜனநாயகம்

❖ ஒருவர் உழைப்பு பலர் வாழ்க்கைக்கு உத்திரவாதம் தந்தாக வேண்டும். இதுதான் ஜனநாயகம். அதைத் தியாகத்துக்கு விலை என்று கருதாமல் மற்றவர்கள் தரும் காணிக்கையாக எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர மற்றவர்களைத் துன்பப்படுத்தி, வருத்தி வேதனைப்படுத்தி காரியம் ஆற்றுபவர்கள் தமிழகத்தில் இருக்க மாட்டார்கள். இந்தியத் துணைக்கண்டத்திலும் இருக்க மாட்டார்கள்.

## சமாதானம், சமத்துவம் – சகோதரத்துவம்

❖ சமாதானம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய அடிப்படைகளின் பேரில் புதியதொரு சமுதாயத்தைப் படைக்கும் பணியின் முன்னோடியாக, அந்த

உணர்வுகளை முதலில் மக்களின் உள்ளத்தில் எழுப்பி, நிலைநிறுத்த வேண்டும் என்பது மனித சமுதாயத்தின் நலனில் நாட்டம் கொண்ட அனைவரின் ஒருமித்த கருத்தாகும்.

## தமிழ் மக்கள் உயர்வடைய வழி காட்டியவர்

❖ தமிழ் மொழியில் பேரார்வமும், நீங்காத பற்றும் கொண்டு தமிழ் மக்கள் உயர்வடைய வழி காட்டியவர் எங்கள் தலைவர் அண்ணா. தமிழ் அன்பையும், தமிழ் உணர்வையும் அவர் நாட்டுக்குக் காணிக்கையாக்கி அதிகாரப் பொறுப்பை ஏற்றவர். அவர் வழியில் நாங்கள் நடக்கின்றோம் என்று சொல்வதில் பெருமை கொள்கின்றோம். இன்று இந்த அரசு செயல்படுத்தி வரும் முற்போக்கான திட்டங்கள் அண்ணா எங்களுக்கு வகுத்துத் தந்தவை. அண்ணா காட்டிய பாதையில் நாங்கள் உறுதியாக நின்று, மக்கள் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டு வருகிறோம்.

## செப்டம்பர் மாதம் மிக நல்ல மாதம்

❖ செப்டம்பர் மாதம் மிகவும் நல்ல மாதம். நல்லவர்களின் பிறந்த தினங்கள் இந்த மாதத்தில் வருகிறது. பெரியார் பிறந்தது செப்டம்பர் 17இல், அமரர் அண்ணா பிறந்தது செப்டம்பர் 15இல், ராஜா அண்ணாமலைச் செட்டியார் பிறந்தது செப்டம்பர் 30இல். ஒருவர் அண்ணா. இன்னொருவர் அண்ணாமலை. இடையில் பெரியார். இத்தகைய ஒற்றுமையைக் கண்டு நான் வியக்கிறேன்.

## ஒன்றுபட்டு வாழவேண்டும்

❖ ஏழ்மை, வறுமை, வேலையின்மை ஆகிய எந்தச் சங்கடங்கள் இருந்தாலும், நாட்டு மக்கள் ஒன்றுபட்டு வாழ வேண்டும். மனிதனின் உடலில் ஏதாவது ஒரு பகுதியில் வலி ஏற்பட்டாலும், காயம் ஏற்பட்டாலும் அது எப்படி இந்த உடலின் ஊனமாகவே கருதப்படுகிறதோ அதேபோல் – ஒரு நாட்டில் எங்கே வன்முறை ஏற்பட்டாலும் அதை உடனடியாகக் கவனித்தாக வேண்டும். அப்படிக் கவனிக்காத வரையில் ஒருமைப்பாட்டுக்கு வழியே இல்லை.

## காவல்துறையினரை சந்தேகிப்பது கேவலம்

❖ என்னுடைய தாயை நான் சந்தேகிப்பது எவ்வளவு அவமானகரமானதாக இருக்குமோ அதுபோல காவல்துறையினரைச் சந்தேகிப்பது அவ்வளவு

கேவலம் என்ற நினைவு நமக்கு ஏற்படுகின்ற வேளை தமிழகத்தில் உருவாக வேண்டுமென்று நான் எண்ணுகிறேன்.

### தாய்க்கு ஈடான காவல்துறை

❖ நான் எங்கே வைத்து காவல்துறையினரைப் பேசுகிறேன் என்பதை ஒவ்வொருவரும் நினைத்துப் பார்க்க வேண்டும். ஒரு தாய்த் தன்மைக்கு ஈடாக, என்னைப் பெற்றெடுத்த தாய்க்கு ஈடாக வைத்து எண்ணுகிறேன். இந்த நாட்டைக் காக்கின்றவர்கள், நாட்டின் பண்பைக் காக்கின்றவர்கள், பெண்மையைக் காப்பாற்றுகிறவர்கள், தன்மானத்தைக் காப்பாற்றுகின்றவர்கள், பொருளைக் காப்பாற்றுகின்றவர்கள், ஒழுக்கத்தைக் காப்பாற்றுகின்றவர்கள், ஒழுங்கை நிலை நாட்டுகின்றவர்கள், இந்த நாட்டின் ஆண்மையைக் காப்பாற்றுகின்றவர்கள் காவல்துறையினர். ஒரு தாய்த் தன்மைக்கு இலக்கணம் வேறு என்ன வேண்டும் ?

### ஒன்றுபட்டு ஒரு முடிவு எடுத்தால்...

❖ அறிஞர்கள், அதிகாரிகள், இளைஞர்கள், பொறுப்புமிகுந்த கட்சிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு முடிவு எடுத்தால் எதையும் எங்கேயும் எப்படியும் நடத்திக்காட்ட முடியும் என்பதைத்தான் 5ஆவது உலகத்தமிழ் மாநாட்டின் தொடக்க விழா எடுத்துக்காட்டுகின்றது.

### நியாயமான நம்பிக்கை

❖ அமரர் அண்ணா அவர்கள் நம்மிடையே இல்லை; ஆனால் அவர் எனது இதயத்தில் இருந்து எனக்கு ஊக்கத்தையும் நல்ல கருத்தையும் தந்து என்னை வழிநடத்திச் செல்கிறார் என்பதை நான் மறுக்க முடியாது. இது மூடநம்பிக்கை என சொல்லலாம். என்னைப் பொறுத்தவரை இது நியாயமான நம்பிக்கை ஆகும்.

### ஒன்றுபடுத்தும் மிகப் பெரும் பணி

❖ தமிழ் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்று சிலர் குறிப்பிட்டார்கள். இராமநாதபுரத்தில் ஒருவகையாக–மதுரை மாவட்டத்தில் ஒரு விதமாக– நெல்லை மாவட்டத்தில் ஒரு விதமாக கோவையில் ஒரு விதமாகத் தமிழ் பேசப்படுகிறது. இவற்றை ஒன்றுபடுத்த வேண்டும் என்றால் மிகப் பெரும் பணி செய்யவேண்டும். தமிழக அரசு இதனைத் தக்க வகையில் செய்யும்.

## நீதிமன்றத்தில் தமிழ்

- ❖ தமிழ் ஆட்சி மொழியில் அரசு அக்கறை கொண்டுள்ளது என்பது எல்லாருக்கும் புரிந்திருக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. தமிழ் வழக்கு மொழியாக வழக்கத்தில் உள்ள மொழியாக மட்டுமல்ல வழக்குமன்றத்தில் நீதிமன்றத்தில் தீவிரமாக்கப்பட முயற்சி நடைபெறும்.

## நமக்குள் நாமே நடத்தவேண்டிய போராட்டம்

- ❖ நாம் ஒரு போராட்டத்திற்குத் தயாராக வேண்டும். அந்தப் போராட்டம் யாரையும் எதிர்த்தல்ல—எந்த மொழியையும் எதிர்த்தல்ல—யாரையும் சிறையில் தள்ளுவதல்ல—அந்தப் போராட்டம் யாரையும் அழிவுப்பாதைக்கு அனுப்புவதல்ல அந்தப் போராட்டம் நாமே நமக்குள் நடத்திக்கொள்ள வேண்டிய போராட்டம் அது. தமிழில்தான் பேசுவேன் என்று நமது உள்ளத்து உணர்வுடன் போராட வேண்டும் நாம்.

## இலங்கை தமிழர் கலாச்சார தொடர்பு

- ❖ இலங்கையில் உள்ள தமிழர்களுக்கும் நமக்கும் கலாச்சாரத் தொடர்பு உண்டே தவிர அரசியல் தொடர்பு கிடையாது.

## பிரிவினைக்கும் வன்முறைக்கும்<br>இடம் கொடாது தமிழகம்

- ❖ எந்தக் காலத்திலும் பிரிவினைக்கும் வன்முறைக்கும் தமிழ்நாடு இடம் கொடுக்காது.

## திருக்குறள் தேசிய நூலாக வேண்டும்

- ❖ ஒரு மதத்தினருக்கோ குறிப்பிட்ட சாதியினருக்கோ என்று இல்லாமல் மனித சமுதாய முழுமைக்குமாக எழுதப்பட்ட நூல் திருக்குறள். அப்படிப்பட்ட நூல் இந்தியாவின் தேசிய நூலாக ஆக்கப்படுவதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்கவே முடியாது.

## கோடி ரூபாயினும் மேலான மகிழ்ச்சி

- ❖ கலைஞர்கள் தாங்கள் பாராட்டப்படும்போது அவர்களுக்குக் கிடைக்கின்ற மகிழ்ச்சிக்கு ஈடுஇணை கிடையாது. ஒரு கோடி ரூபாய்

கொடுக்கும்போது கூட ஏற்படாத அந்த மகிழ்ச்சி பாராட்டப்படும்போது அவர்களுக்கு உண்டாகிறது. பாராட்டுப் பெறும்போது அது அவர்களை உற்சாகப்படுத்தி நம்பிக்கையை அவர்களுக்கு அளித்து மேலும் மேலும் உழைக்க வைக்கிறது. கலைஞர்களை மேலும் உழைக்கத் தூண்டும் மகிழ்ச்சி.

**கட்டுப்பாடு, ஒழுங்கு, நேர்மை, பண்பாடு**
**அதன் பெயர்தான் கலை**

- கலை உணர்வுக்குச் சொந்தக்காரர்களாக இருப்பவர்களிடத்தில் ஏற்றத்தாழ்வு உணர்ச்சி தோன்ற முடியாது. ஜாதி மதபேதங்கள் தலை காட்ட முடியாது. கட்டுப்பாடு, ஒழுங்கு, நேர்மை, பண்பாடு ஆகியவற்றுடன் நடந்து கொள்வதும் கலைதான்.

**சாதி மதம் என்ற எண்ணமே வரக்கூடாது**

- சாதி மதம் என்ற எண்ணமே இங்கு வரக்கூடாது. வந்தால் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியும் கெட்டுப்போகும். தமிழர்களின் வாழ்வும் பாழ்பட்டு போகும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**புனிதமான தமிழகக் கோயில்**

- ஜாதி, மதம், அரசியல் ஆகிய மூன்றையும் உள்ளே நுழைய விடாதீர்கள், மதம் வந்தால் ஜாதி வந்துவிடும். இரண்டும் வந்தால் அரசியல் தானாக வந்துவிடும். ஆனால், இதைப் போன்ற புனிதமான தமிழகக் கோயில் என்று சொல்லக்கூடிய பல்கலைக்கழகத்தில் எதையுமே நுழைய விடாதீர்கள்.

**நாட்டுக்கு நல்லதை நாளும் செய்வோம்**

- இந்த அரசை யார் யாரோ பாராட்டுகிறார்கள் என்றால் அது நாங்கள் செய்யும் நல்ல பணிகளைப் பாராட்டித்தான். நல்லதை நாட்டுக்குத் தேவையானதை நாளும் செய்வதில் நாங்கள் முன்னணியில் இருப்போம். அண்ணாவின் கொள்கைகளைத் தொடர்ந்து நிறைவேற்றுவோம்.

## இளைஞர் சமுதாயமே! நாட்டுக்கு தொண்டு செய்க!

❖ இளைஞர் சமுதாயம் வளர வேண்டும். வாழவேண்டும். அவர்கள் கற்று தாங்களும் வளர்ந்து நாட்டுக்குத் தொண்டாற்ற வேண்டும். ஏதோ வழி தெரியாமல் வேறு பாதைக்குச் சென்றுவிடாமல் உண்மை தெரிந்து திருந்தி வாழவேண்டும்.

## காவல்துறை – சமுதாயத்தின் உரைகல்

❖ நல்ல மாணவர்களை உருவாக்குவது, நல்ல ஆசிரியர்களின் பொறுப்பு. அதுபோல நாட்டில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இருப்பதற்குச் சமுதாயத்தில் உரைகல்லாகக் காவலர் இருக்க வேண்டும். காவல்துறையினர் நியாயமாக நேர்மையாக, கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன், அன்பு பாசம் பரிவுக்குச் சொந்தக்காரர்களாக இருக்க வேண்டும்.

## புரட்சிமனம் கொண்ட பாரதி

❖ சமதர்ம சமுதாயம் வேண்டும் என்கிறார் புரட்சிமனம் கொண்ட பாரதி. இந்தியா முழுமையும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியவர் பாரதி. அதனால், பாரதி பிறந்த நாளை இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டு நாளாகக் கொண்டாடவேண்டும்.

## பொறுப்புகள்

❖ காதலியுடன் வாழ்வது மட்டும் ஒருவருக்குக் கடமையாகாது. வாழ்க்கையில் அவனுக்கென்று சில பொறுப்புகள் இருக்கும். அதை நிறைவேற்றியே தீர வேண்டும்.

## கண்ணீர் விட்டதே இல்லை

❖ எந்த ஏழையும் என்னால் கண்ணீர் விட்டதே கிடையாது. திருட்டு சொத்தினால் வாழவேண்டும் என்று விரும்பி இருந்தால் இந்த வீடு மாளிகையாய் மாறியிருக்கும்.

## நான் ஒரு சேவை செய்கிறவன்

❖ இதே சமூகம் தான் உங்க மேலே பழி சுமத்தியது. இதே சமூகம்தான் உங்களை பாராட்டுகிறது. இதற்கெல்லாம் நாம் கவலைப்படக்கூடாது. நம்ம மனசாட்சிப்படி நாம் நடக்கவேண்டும். நான் ஒரு சேவை செய்கிறவன். அவ்வளவுதான்.

## பைத்தியக்காரன்

❖ பைத்தியக்காரன் கண்களுக்கு உலகமே பைத்தியக்காரத்தனமாகத்தான் தெரியும்.

## இந்திய தேசத்தின் தருமம்

❖ பிற பெண்களைத் தாயாகவும் தங்கையாகவும் கருதுவதுதான் இந்திய தேசத்தின் தருமம்.

## மனித இயல்பு

❖ மனசாட்சி இல்லாத மன்னிப்பை மண்ணாக மதிப்பதுதான் மனித இயல்பு.

## மானம்

❖ நான்கு பேர் எதிரே மானம் இழந்து சாவதைவிட தன் உயிரைத் தானே மாய்த்துக் கொள்வது தவறில்லை.

## நெஞ்சிலே உரம் கையிலே வலு

❖ நெஞ்சிலே உரமும், கையிலே வலுவும் உள்ளவர்களுக்கு கத்தி, கடப்பாரை தேவையில்லை.

## உண்மை இருட்டில் இருந்தால்...

❖ உண்மை இருட்டில் இருப்பதனால்தான் அறிவு குருடாகிறது.

## போக்கிரித்தனத்திற்கு பதில்

❖ போக்கிரித் தனத்துக்கு பதில் போக்கிரித்தனம் தான்.

## இரும்பு

❖ இரும்புக்கு மனம் இல்லை என்றாலும் இழுத்துக் கொள்கிறது காந்தம்.

## தூண்டிலுக்கு வேலை

❖ தூண்டிலுக்கு வேலை மீனைப் பிடிப்பது தானே தவிர, கருணை காட்டுவதற்காக அல்ல.

## பெண்கள் இந்த நாட்டின் கண்கள்

❖ பெண்கள்தான் இந்நாட்டின் கண்கள். உலகத்திலே தனக்கொரு தங்கை இல்லையென்று வருந்துபவர்கள் எவ்வளவு பேர்.

## எழுத்து சுதந்திரத்தை ஏலம் விடக்கூடாது

❖ பேசுவது தேசியம், எழுதுவது ஏழையின் துயரம், விரட்டியடிப்பது ஏழைத் தொழிலாளர்களின் வாழ்க்கை, பணத்துக்காக எழுத்து சுதந்திரத்தை ஏலம் விடக்கூடாது.

## உதவி செய்தவர்களை மறப்பவர்கள்

❖ உயர்ந்த அந்தஸ்து உள்ளவர்கள், உதவி செய்தவர்களை உடனே மறந்து விடுவார்கள்.

❖ ஓர் இமையில் உறங்க முடியாது. அதுபோலத்தான் பிறர் உதவி இல்லாமல் வாழ முடியாது.

## தாயும் மகனும்

❖ தாயின் துன்பத்தைப் போக்காத மகன் இந்த உலகத்தில் இருந்து பயன் இல்லை.

❖ தாயைக் காக்க மகன் தவறினாலும் மகனைக் காக்க தாய் தவறுவதில்லை.

## சாதனை என்பது...

❖ வேதனையும் சோதனையும் இல்லை என்றால் உலகத்தில் சாதனை என்பது இல்லை.

## மானம்

❖ ரொம்ப நாட்களுக்கு இந்த உலகம் ஏமாறாது. ஏச்சிப் பிழைக்கும் கூட்டம், ஏமாற்றி வாழும் கும்பல் இவை யாவும் ஒருநாள் உண்மை முன்பு தலைவணங்கியே ஆகவேண்டும். ஈனத் தொழில் புரியாமல் மானத்தோடு வாழ கற்றுக்கொள்ள வேண்டும்.

## ரோஜாவை பாதுகாக்கும் முள்

❖ வேலி இல்லாவிட்டாலும் ரோஜாவைப் பாதுகாக்க முள் இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

## எல்லோருக்கும் மேலான தலைவன்

❖ எல்லோருக்கும் மேலான தலைவன் ஒருவன் இருக்கிறான். அவனுடைய கட்டளைக்கு நாம் எல்லோரும் தலை வணங்கியே ஆக வேண்டும்.

## பயமும் துணிச்சலும்

❖ இருப்பவன் பயந்து சாவான், இல்லாதவன் துணிந்து சாவான்.

## பணத்தால் பறிபோகும்

❖ இளகிய இதயத்தை இரும்பாக்கி, இன்பத்தைக் கசப்பாகி வரும் பணம் மூலம் மனிதனின் அமைதி போய்விடும், அன்பு போய்விடும், பாசம் போய்விடும், காதல் போய்விடும்.

## ஞானம் பிறக்கும் நேரம்

❖ சாகும்போது தான் சில மனிதர்களுக்கு ஞானம் பிறக்கும்.

## திட்டம்–சிந்தனை

❖ திட்டம் இல்லாத போக்கும், சிந்தனை இல்லாத உயர்ச்சியும் இருந்தால் அது இலட்சியத்தைப் பாழாக்கி விடும்.

## பதவியால் பறிக்க முடியாது

❖ பணத்தாலும் பதவியாலும் பகுத்தறிவை எவராலும் பறிக்க முடியாது.

## வாழ்வுக்கு முடிவுதரும் போராட்டம்

❖ உயிரைத் துச்சமாக மதிக்கும் போராட்டம்தான் நம் வாழ்வுக்கு முடிவு தரும் போராட்டம் ஆகும்.

## கடமை உணர்வு

❖ கடமை உணர்வோர் எதற்கும் பயப்படத் தேவையில்லை.

## கணவன்–மனைவி

❖ கணவன் போகும் பாதையில் கல்லும் முள்ளும் இருந்தால், மனைவிக்கும் அதுதான் பாதையாக அமையும். கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்ற பழமொழி இதற்காகத்தான் சொன்னார்கள்.

## நாட்டு நலன்

❖ நாட்டின் நலனுக்காக பாடுபடுபவர்களுக்கு ஆபத்து விளைவிப்பதற்கு எப்போதும் ஒரு கூட்டம் இருந்து கொண்டே இருக்கும். கோழைத்தனமான செயலுக்குப் பயம் இருக்கக்கூடாது.

## வீரர்களின் இன்பம்

❖ ஆபத்தான விளையாட்டு விளையாடுவதில் தான் வீரர்களுக்கு இன்பம் இருக்கிறது. வீரர்கள் பிறக்கும் போதே அச்சம் செத்து விடுகிறது.

## திட்டமும் செயலும்

❖ திட்டம் இடாத செயலும் செயல்படுத்த முடியாத திட்டமும் ஒருநாளும் நிறைவேற்ற முடியாது.

## பதவியின் பலம்

❖ நல்லவர்கள் பதவிக்கு வரும்போதுதான் அவசியமான நல்ல காரியங்கள் நடக்கின்றன. அந்தப் பதவியின் பலமும் வலுவடைகிறது.

## மனிதன் எப்படி இருக்கவேண்டும் ?

❖ மனிதன் நெருப்பைப் போல் இருக்க வேண்டும். அப்போதுதான் சுடும் என்று தொடமாட்டான். புலியைப் போல இருக்க வேண்டும். அப்போதுதான் பாயும் என்று பயப்படுவான்.

## விரோதம்

❖ மனிதனுக்கு மனிதன் யாரும் விரோதம் இல்லை, அவனவன் கொள்கைதான் அவனுக்கு விரோதம். அதைத்தான் நாம் போக்க வேண்டும்.

## தாயும்–தாரமும்

❖ தாயை மறந்தவன் மனிதத் தன்மையை மறந்தவன், தாரத்தை மறந்தவன் தன்னையே மறந்தவன். தாய் ஆணையிட்டால் தான் தாரமும் ஆதரிக்கும். உள்ளம் என்ற கோயிலில் தாய் தெய்வம்,தாரம் தீபம். சேவை செய்ய தாயும் வேண்டும், சேவை செய்யப்பட தாரமும் வேண்டும். இரண்டு கண்களில் ஒன்று தாய், ஒன்று தாரம். இதில் எதை இழந்தாலும் குருடன் என்றுதான் கூறுவர். வாழ்வு என்ற நதிக்கு தாய் ஒரு கரை, தாரம் ஒரு கரை.

## தாய்க்குப்பின் தாரம்

❖ மனிதனின் வாழ்வில் முற்பகுதியில் வரம் பெறச் செய்பவள் தாய். பிற்பகுதியில் கடமையால் அகம் பெறச் செய்பவள் தாரம். தாய்க்குப் பின் தாரம்.

## உள்ளம்

❖ ஒரு காலத்தில் பகை இருந்தாலும் வேறு ஒரு காலத்தில் கூடியிருக்கத்தான் வேண்டும். உடலைத்தான் சிறைப்படுத்த முடியும். உள்ளத்தை சிறைப்படுத்த முடியாது.

## தலைவன் மீது நம்பிக்கை கொள்

❖ தொண்டனின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருப்பவனே தலைவன். தலைவன் மீது நம்பிக்கை இல்லை என்றால் பதவியும் பலன் அற்று போய்விடும்.

## வெற்றி தோல்வி

❖ வாழ்க்கையில் வெற்றியும் தோல்வியும் ஏற்படுவது ஒரு சந்தர்ப்பம் தான். தந்திரத்தை தெரிந்து கொண்டு போட்டியில் வெற்றி பெறுவது வீரர்களுக்கு அழகில்லை.

## மனித திமிங்கலம்

❖ திமிங்கலம் கடலில் மட்டுமல்ல, நாட்டிலே உண்டு மனித உருவத்தில். மனித திமிங்கலம் கடலை மட்டுமல்ல, தேசத்தையே கவிழ்த்து விடும்.

## ஆராயத் திட்டம் தேவை

❖ நாம் ஆழம் தெரியாமல் கால் வைக்கக் கூடாது. நயவஞ்சகர்களைக் கண்டு ஆத்திரம் கூடாது. ஆராயத் திட்டம் தான் தேவை.

## கெட்ட மனிதரின் ஆசை ஒருநாளும் நிறைவேறாது

❖ உள்ளத்தைக் குருடாக்கி, ஆத்திரத்தைப் பொருளாக்கி, வேதனையை இழிவாக்கி கெடும் மனிதனின் ஆசை ஒருநாளும் நிறைவேறாது.

## செய்த தவறுக்கு பரிகாரம் கண்ணீர்

❖ கள்ளத்தால் வென்ற நாடு கபடத்தில் பெற்ற வாழ்வு ஆகும். தவறு செய்தவர்களின் கண்ணீர்தான் தவறுக்குப் பரிகாரம்.

## பணம்

❖ பணம் வந்ததற்கு பிறகு அன்பு குறைகிறது, அமைதி குறைகிறது, வேதனையும் பயமும்தான் மிஞ்சுகிறது. எவ்வளவு பாவம் செய்து பணம் சேர்க்கிறோமோ மீண்டும் அதே பாவத்துக்காக பணம் செலவு செய்கிறோம்.

## சாவைப் பற்றி அஞ்சுவது கோழைத்தனம்

❖ சாக்ரடீஸ் என்ன சொல்கிறார் தெரியுமா ? மரணம் வந்தபின் நாம் இருப்பது இல்லை. நாம் இருக்கும் போது மரணம் வருவதில்லை. பேரறிஞர்களே அப்படிச் சொல்லும் போது சாவைப் பற்றிப் பயப்படுவது கோழைத்தனமாகும்.

## மனம் சாந்தமாகும்

❖ ஒரு நோயாளியிடம் இன்னொரு நோயாளியின் துன்பத்தைச் சொல்வதனால் இரண்டு பேர் மனமும் சாந்தமாகும்.

## அமைதி

❖ இன்பம் இருக்கிறதே, அது மனதில் தேங்கி இருக்கவேண்டும். ஆனால் துன்பம் இருக்கிறதே, அது பல கிளைகளாகப் பிரிந்து இருக்கவேண்டும். அப்போதுதான் மனம் அமைதி பெறும்.

## அன்பு–அமைதி

❖ மனைவியைப் பற்றி கணவனுக்குத் தெரியவில்லை என்றாலும், மாதாவைப் பற்றி மகனுக்குத் தெரியும். கணவனுக்கு மனைவி ஒரு சேவை. ஆனால் மகனுக்கு மாதா ஒரு பாசக் கோயில். அந்தக் கோயிலில் அன்பும் அமைதியும் என்றும் தேங்கி இருக்கும்.

## உயிரைக் காப்பாற்றுவது மருத்துவர் கடமை

❖ டாக்டருக்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள், விரோதிகள், நண்பர்கள் என்பது வித்தியாசம் இல்லை. டாக்டரின் கடமை உயிரைக் காப்பாற்றுவது மட்டும் தான்.

## மறப்பது–மன்னிப்பது

❖ நமக்கு துரோகம் செய்றவங்களுக்கு நாம் செய்யும் கடமை அவர்களை மறப்பது, மன்னிப்பது ஆகும்.

## நட்பின் அடையாளம்

❖ ஒரு நாட்டுக்குச் செய்ய வேண்டிய மரியாதையை இன்னொரு நாடு செய்ய வேண்டும். அதுதான் நட்பின் அடையாளம்.

## தீய எண்ணத்தை தூக்கி எறி

❖ மாலை சூடிய மலரை காலையில் தூக்கி எறிவது போல தீய எண்ணங்களை மனதில் இருந்து எறிய வேண்டும்.

## சிந்தனை

❖ செடியிலே இருக்கிற புஷ்பத்தை எடுத்து பூஜை அறையில் வைக்க சிந்தனை செய்ய வேண்டியது இல்லை.

## சில கடமைகள்

❖ இந்த உலகத்தில் உற்றார் உறவினர் இல்லாத அனாதையாக இருக்கின்ற நாம் வாழ்வது, நமக்கென்று சில கடமைகள் இருப்பதனால் தான்.

## நல்ல விஷயமும் கெட்ட விஷயமும்

❖ நல்ல விஷயத்தைப் பற்றிப் பல தடவை பேசலாம். கெட்ட விஷயத்தைப் பற்றி ஒரு தடவை கூட பேசக்கூடாது.

## வெற்றிக்கு முதல்படி

❖ மனிதனின் வெற்றிக்கு முதல்படி தைரியம்தான்.

## நியாயம்

❖ நியாயம் நமது பக்கம் இருக்கும்போது நாம் யாருக்கும் பயப்படத் தேவையில்லை.

## குழந்தையும் தெய்வமும் ஒன்று

❖ கடவுளும் குழந்தைகளும் ஒன்றுதான். அன்பே கடவுள். குழந்தைகளிடம் அன்பாகத்தான் பழகவேண்டும்.

## மறக்க... மன்னிக்க...

❖ தெரியாமல் செய்வது தவறல்ல. தெரிந்து தவறு செய்து இருந்தாலும், அதை மறக்கவும் வேண்டும். மன்னிக்கவும் வேண்டும்.

## நீதியின் அருள்

❖ குற்றவாளி என்று சந்தேகப்படுகிறவர்களை நீதியின் கையில் ஒப்படைப்பதுதான் நமது கடமை. உண்மையில் நிரபராதி என்றால் நீதியின் அருள் நிச்சயம் கிடைக்கும்.

## பொறுமை காக்க

❖ நாம் குற்றம் செய்யாமல் இருந்திருக்கலாம். ஆனால் உண்மை மற்றவர்கள் கண்ணுக்கு மறைந்திருக்கும். நாம் ஆத்திரப்படாமல் பொறுமையாக இருக்க வேண்டும்.

## கடமையைச் செய்

❖ நாம் செய்கின்ற நல்லது கூட சில சமயம் மற்றவர்கள் கண்களுக்கு கெடுதலாகத் தெரியும். அதற்காக நமது கடமையைச் செய்யாமல் இருக்கக்கூடாது.

## அறிவின் வெளிச்சம்

❖ மனிதர்களுக்கு அறிவு அதிகம். சோதனை ஏற்படும்போது தான் அறிவின் வெளிச்சம் வெளிப்படும்.

## நல்ல சொல்–நல்ல செயல்

❖ துன்பத்தைப் போக்க வழி உண்டு. துன்பத்தில் இருப்பவர்களுக்கு மேலும் துன்பம் கொடுக்காமல் நாட்டில் நிறைய நல்ல சொல், நல்ல செயல் இருக்கும்.

## துன்பத்தைத் தீர்ப்பதற்கான வழியைக் காண்க

❖ ஒரு மனிதன் துன்பத்தில் இருக்கும் போது அவனுக்கு ஆறுதல் சொல்வதைவிட அதைத் தீர்ப்பதற்கான வழியைக் காண வேண்டும். ஆறுதல் சொல்லுவதினால் மேலும் துன்பம் அதிகரிப்பது போல் தோன்றும்.

## உண்மை

❖ உண்மை என்ன என்று தெரியாமலே நாம் எந்த முடிவுக்கும் வரக்கூடாது.

## வயிற்றுப் பசிக்கு உழைப்பு
## அறிவுப் பசிக்கு படிப்பு

❖ வயிற்றுப் பசிக்கு உழைப்பும், அறிவுப் பசிக்குப் படிப்பும் இரண்டும் சேர்ந்திருந்தால் தான் மனிதன் மனிதனாக இருக்க முடியும்.

## தாய் அன்பு

❖ எல்லா வசதியும் இருந்தும் தாய் அன்பு இல்லாமல் தவிக்கிற பெரிய லட்சாதிபதிகளைவிட, தன்னைப் பெற்ற தாய் உயிரோடு இருந்து ஒவ்வொரு நாளும் அவர்களைக் கும்பிட்டு கூலிவேலை செய்கின்ற ஏழை தொழிலாளிகள் எவ்வளவோ உயர்ந்தவர்கள். அம்மாவை மனதில் நினைத்துக்கொண்டால் போதும், பெரிய மலையைக்கூட மடுவாக்கி விடலாம்.

## தொழிலாளி

❖ பல இடங்களில் இருந்து பல தாய் வயிற்று மக்களாக வாழுகிற நாம், தொழில் நிறுவனத்துக்குள் நுழையும்போது, தொழிலாளி என்கிற ஒரே தாய் மக்களாக ஒன்று சேர்ந்து உண்மைக்கும், நேர்மைக்கும் உழைக்கவேண்டும். நான் காணும் தொழிலாளி அப்படித்தான் இருக்கவேண்டும்.

## நியாயம் ஆகாது

❖ மற்றவர்கள் விருப்பத்தை தெரிந்து கொள்ளாமல் தானே ஒரு முடிவுக்கு வருவது, அதற்காகப் போராடுவது, பிறரை பலவந்தப்படுத்துவது, பிறகு பலியாக்குவது, இது எப்படியும் நியாயம் ஆகாது.

## ஆபத்துகள்

❖ நல்ல காரியங்கள் சாதிக்கும் போதும், உண்மைகள் நிலைநாட்டும் போதும் ஆபத்துகள் வரத்தான் செய்யும்.

## அம்மா

❖ பெண்களை 'அம்மா' என்று அழைப்பதுதான் நம் நாட்டு நாகரீகம். படித்த பெண்கள் பண்போடு நடந்து கொள்ள வேண்டும்.

## மகனின் புகழ்

❖ பெற்றோர்களுக்கு மகனின் புகழைவிட வேறு எதுவும் சிறந்தது இல்லை.

## வெற்றி தன்னால் வரும்

❖ நம் பாதை நேர்மையானது என்கிற உறுதி இருக்கும் வரைக்கும் வெற்றி தன்னாலே வரும்.

## துணிவு

❖ வாழ்க்கையிலே ஏற்படுகிற துன்பங்களை எதிர்த்து போராடக் கூடிய துணிவு நமக்கு இருக்கணும்.

## சேவை

❖ மனைவியா இருந்து மகிழ்ச்சியாக வாழ்வதைவிட தாயாக இருந்து சேவை செய்வதுதான் உலகத்திலே சிறந்தது.

## சமாதானம்

- வலுவுள்ளவனால் தான் சமாதானத்தைப் பற்றிப் பேச முடியும்.
- சண்டை சச்சரவு மறந்து சமாதானமாகப் போனால் நமக்கு வேண்டியது எல்லாமே கிடைக்கும். நாம் ஒத்துப் போனால்தான் உறுதியும் உத்தரவாதமும் அமையும்.

## நல்லவன்

- கெட்டவன் கெட்டதையே சிந்திக்கிறான். நல்லவன் நியாயத்துக்கு பயப்படுகிறான்.

## துன்பம்

- துன்பம் ஒருவருக்கு மட்டும் சொந்தம் இல்லை. அது ஒரு பொதுச் சொத்து. யாருகிட்டயாவது சொன்னாதான் மனது ஆறுதல் அடையும்.

## தாய்ப்பாசம்

- தாயின் காலடியில்தான் சொர்க்கம் இருக்கிறது. இயந்திரத்தைவிட தாய்ப்பாசத்துக்குத் தான் பலம் அதிகம்.

## குடி கெடுக்கும் குடி

- உடலைக் கெடுத்து, பொருளைக் கெடுத்து, மானத்தையும் கெடுத்து, வாழ்க்கையைக் கெடுக்கும் ஒரே பொருள் குடி கெடுக்கும் குடி ஆகும்.

## தண்ணீரின் கடமை

- யாருடைய தாகமாக இருந்தாலும் அதைத் தீர்த்து வைப்பதுதான் தண்ணீரின் கடமையாகும். அதுபோலத்தான் மருத்துவமும்.

## நெருப்பை நெருப்பால் அணைக்க முடியுமா ?

- அதர்மத்தை, அதர்மத்தைக் கொண்டு அடக்க நினைப்பது தவறாகும். நெருப்பை நெருப்பால் அணைக்க முடியாது.

## சிந்திக்காமல் எடுக்கும் முடிவு சிதைந்து போகும்

❖ உணர்ச்சிவசப்பட்டால் உள்ளம் குருடாகி விடும். சிந்திக்காமல் எடுக்கும் முடிவும் சிதைந்துவிடும்.

## மனத்தைக் கட்டுப்படுத்து

❖ மனதை அதன் போக்குக்கே விட்டுவிட்டால் அதற்கு மதயானை பலம் வந்துவிடும். அதை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தினால் அதை நமது ஏவலாளாக மாறிவிடும்.

## வாழ்வை அர்ப்பணி

❖ தனக்கெனச் சேர்த்து வைக்கிற ஆசையை வளர்த்துக் கொண்டால் பிறருக்காக எதையும் செய்ய முடியாது. நமது தேவையே பிறரது நன்மையாகும். மக்களுக்காக நமது வாழ்வை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

## குழம்பிய குட்டை குழப்பமான உள்ளம்

❖ குழம்பிய குட்டையில் முகம் தெரியாது. குழப்பமான உள்ளத்தில் நியாயம் தெரியாது.

## வாழ்க்கை வாழ்வதற்கே

❖ வாழ்வதற்குத்தான் வாழ்க்கை. சிலபேர் அதை மறந்து விட்டு சாக நினைப்பது ஆபத்தான ஆசை, பெரிய குற்றமாகும்.

## முல்லை

❖ இப்போது தொல்லையாக தெரிகின்ற வாழ்க்கை, பின்னாளில் முல்லையாக இருக்கும்.

## பயம்

❖ பயம் என்பது சுவரில் பட்ட சுண்ணாம்பு போல பட்டுன்னு தட்டினா பொட்டுன்னு விழுந்திடும்.

## எதிர்பார்க்காதது

❖ இந்த உலகத்திலே நாம் எதிர்பார்க்காததுதான் அதிகமாக நடக்கின்றது. தடியால் அடித்து தண்ணீரைப் பிரிக்க முடியாது.

## நல்ல குடும்பம்

❖ கணவன் சொல்றதை மனைவி கேட்கணும். உண்மையான மனைவிக்கு அதுதான் இலட்சணம். நல்ல குடும்பத்துக்கு அதுதான் இலட்சியம்.

## மனிதனின் பலவீனம்

❖ நாம் எதை நினைக்கக் கூடாது என்று நம்மைக் கட்டுப்படுத்த நினைக்கிறோமோ அந்த நினைவே திரும்ப வரும். அது மனிதனின் பலவீனம் ஆகும்.

## வாழ்க்கையும் வழக்கும்

❖ வாழ்க்கை கூட ஒரு வழக்கு போலத்தான். அதிலே வாதாடக் கூடிய வக்கீல்தான் மனிதனின் நல்ல எண்ணங்கள். தீர்ப்பு அளிக்கும் நீதிபதி மனசாட்சி. குற்றவாளி ஆபத்தான ஆசைகள்.

## பாதுகாப்பு

❖ பழுத்துக் குலுங்குகின்ற மரமும் பருவப் பெண்ணும் பாதுகாப்பு இல்லாமல் வாழ முடியாது. சமூகத்தில் இப்படி நடப்பது இயல்பு ஆகும்.

## நல்லகாரியம்

❖ நல்லது செய்யவேண்டும் என்றால் பல தொல்லைகள் வரத்தான் செய்யும். அதற்கெல்லாம் பயந்தால் எந்த நல்ல காரியமும் செய்ய முடியாது.

## அழியாத செல்வம் கல்வி

❖ இடம் மாறினால் மனம் மாறும். கல்வி அழியாத செல்வம். ஒருத்தரைக் கெடுத்து நாம் வாழக் கூடாது.

## புத்திசாலித்தனத்தை மூடி மறைக்க முடியாது

❖ முட்டாள்தனத்தை எப்படி மூடி மறைக்க முடியாதோ, அதுபோலத்தான் புத்திசாலித்தனத்தையும் மூடி மறைக்க முடியாது.

## தலைமறைவு

❖ பகிரங்கமாக வாழ முடியாத நிலை ஏற்படும்போதுதான் ஒரு மனிதனுக்கு தலைமறைவு தேவைப்படுகிறது.

## விசித்திர உலகம்

❖ என்ன விசித்திரமான உலகம் இது. திருடன் கூட தான் திருடிய பணத்தை தனக்குத்தானே சொந்தம்னு சொல்றான்.

## பயணம்

❖ போகிற வழியில் நிழல் இல்லையென யாரும் பயணத்தை நிறுத்துவதில்லை.

## போதும்...

❖ போதும் என்ற வார்த்தை வயிற்றுக்குத்தான் தவிர, மனதுக்கு அல்ல.

## அறிவுரை

❖ வயது அதனுடைய உழைப்பை காட்டித்தான் தீரும். அனுபவப்பட்டவன் அறிவுரை சொல்லத்தான் செய்வான்.

## ஒரு நிமிட நேரம்

❖ இந்த உலகத்திலே கெட்டது, நல்லது நடக்கிறது எல்லாம் ஒரே ஒரு நிமிட நேரம்தான். அந்த நேரம் நமது கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டுமே தவிர, அதற்கு நாம் கட்டுப்படக் கூடாது.

## அன்பு எனும் ஆயுதம்

❖ மை கண்ணுக்கு மட்டும்தான் உரிமை. ஆனால் அன்பு உயிருக்கே ஆயுதம் ஆகும்.

## இன்னொரு மனிதன் வாழ்வை இழிவு செய்யாதே!

❖ மிருக இனத்துக்கும், பறவை இனத்துக்கும் ஒன்று போல் இன்னொரு உருவம் உண்டு. மனித இனத்தில் மட்டும் அப்படியல்ல. ஏன் என்றால் மனித இனத்தில் கெட்ட குணம் உண்டு. அதன்மூலம் ஒரு மனிதனை வைத்து இன்னொரு மனிதனின் வாழ்க்கையை இழிவுபடுத்தக் கூடாது.

## இயந்திரமாய் இருக்காதே!

❖ மனிதன் ஏழையாகக் கூட இருக்கலாம். ஆனால் இயந்திரமாக இருக்கக் கூடாது.

## நல்ல நிருவாகம்

❖ நல்ல நிருவாகம் உள்ள ஸ்தாபனம் உரிமையாளர் இல்லாமலே தானே நல்லா நடக்கும்.

## திறமை

❖ ஒரு வியாபாரியின் திறமையைத்தான் கவனிக்கணுமே தவிர, அவன் விற்கின்ற பொருளைப் பற்றிக் கவலைப்படவே கூடாது.

## ஆக்கல்

❖ ஒரு பொருளை உடைப்பது சுலபம், உருவாக்குவது கடினம். எதையும் ஆக்க நினையுங்கள். அழிக்க நினைக்காதீர்கள்.

## வாழ்க்கை நம் கையில்

❖ எல்லாருக்குமே எல்லாமே எப்போதும் கிடைப்பது இல்லை. இருக்கிறதை வைத்துத்தான் ஆசைப்படவேண்டும். வாழ்க்கையைத் தெளிவாக அமைத்துக் கொள்வது நம்முடைய கையிலேதான் இருக்கிறது.

## எப்படி கற்பது?

❖ சொல்லிக் கொடுக்கிறவர்களே அரைகுறையாக இருந்தால் கற்றுக்கொள்பவர்கள் எப்படி முழுமையாக கற்றுக் கொள்ள முடியும்.

## ஓய்வு

❖ உழைக்கத் தெரிந்தால் மட்டும் போதாது, ஓய்வெடுக்கவும் தெரியவேண்டும்.

## உள்ளம் திருந்த வேண்டும்

❖ உள்ளம் திருந்தினால் உலகமே திருந்தும். சூழ்நிலையினால் இருள் சூழ்ந்து கிடந்த வாழ்வில் அறிவுக் கரங்களால் தூண்டிவிடப்பட்ட உண்மை விளக்கு, அறியாமை எண்ணத்தில் அணைந்துவிடக்கூடாது.

## குற்றம் குற்றம்தான்

❖ கொள்ளையடிப்பதும் கொலை செய்வதும் குற்றம்தான். அதற்கான காரணம் கூறுவது நியாயம்தான். அதனால் அந்தக் காரணம் நியாயம் ஆகாது.

## தீமைக்குத் தீமை பரிகாரமில்லை

❖ தீங்கு செய்பவர்களை பழி வாங்குவது நமக்கு நியாயமாகப் படலாம். ஆனால் தீமைக்கு தீமை பரிகாரமாகாது. நாம் மற்றவர்களைப் பழிவாங்குவதாக நினைத்தால் தானும் கெட்டு தன்னைச் சேர்ந்தவர்களையும் கெட நினைப்பது எந்த வகையிலும் நியாயம் ஆகாது.

## உண்மை ஒரு குழந்தை

❖ உண்மை ஒரு குழந்தை மாதிரி. குழந்தைக்கு பயம் உண்டா, கூச்சம் உண்டா ?

## சத்தியசோதனை

❖ இலட்சியத்தை நிறைவேற்ற வேண்டும் என்றால் சத்தியசோதனைக்கு ஆளாகித்தான் தீரவேண்டும்.

## அஸ்திவாரம்

❖ அஸ்திவாரம் பலமாக இருந்தால்தான் சுவர் எழுப்ப முடியும். உறவை உருவாக்குவதே உலோகம்தான்.

## உள்ளங்களை சுத்தப்படுத்த

❖ அன்பு நிறைந்த உள்ளங்களை சுத்தப்படுத்துவதற்கு கோபமும் வருத்தமும் இருக்கத்தான் செய்யும்.

## சமூகத்திற்கு துரோகம் செய்தால்

❖ சமூகத்துக்கு நாம் துரோகம் செய்தால் மீண்டும் அதே சமூகத்தால் நாம் பழிவாங்கப்படுகிறோம்.

## குற்றவாளி திருந்தும் இடம்

❖ குற்றவாளிகளைப் பழி வாங்குவதற்காக சிறைச்சாலை அமைக்கப்படவில்லை. குற்றவாளிகள் தவறை உணர்ந்து திருந்துவதற்கு ஒரு வாய்ப்புத் தரும் இடம்தான் ஜெயில். ஜெயிலுக்கு மற்றொரு பெயர் குற்றவாளிகள் திருந்தும் இடம்.

## நீதிக்குத் தலைவணங்கு

❖ நாம் எல்லோரும் நம் குற்றத்துக்காகவும் தீய செயலுக்காகவும் வருந்தவேண்டும். நீதிக்குத் தலைவணங்கியே ஆகவேண்டும்.

## நல்ல சூழ்நிலை
## திருந்துவதற்கு வாய்ப்பு

❖ நல்ல சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தால் திருந்தாத குற்றவாளியும் திருந்துவதற்கு வாய்ப்பாக அமையும்.

## மனிதனின் கடமை

❖ எந்த நேரத்தில் எதைச் செய்யவேண்டுமோ அந்த நேரத்திலே அதைச் செய்திடவேண்டும். அதுதான் மனிதனின் கடமை.

## சத்தியம்

❖ சத்தியம் என்றைக்குமே தோற்றதில்லை. அது என்றைக்குமே வெற்றியை மட்டும்தான் பெறும்.

## வெற்றி நிச்சயம்

❖ பொறுப்பும் கடமை உணர்ச்சியும் இருந்தால் எந்த நேரத்திலும் யாரும் முயற்சிக்கலாம், வெற்றி பெறலாம்.

## சிக்கனமே நல்லது

❖ காலம் இருக்கின்ற நிலைமையில் சிக்கனமாக இருப்பதுதான் நல்லது.

## பாசத்தை விட பெரிது கடமை

- ❖ கடமை பாசத்தைவிடப் பெரியது என்று இந்த உலகத்திற்கு நன்றாகத் தெரியும்.

## பாசத்திற்கு அப்பாற்பட்டது சட்டம்

- ❖ சட்டம் என்பது அண்ணன் தம்பி பாசத்திற்கு அப்பாற்பட்ட நெருப்பு மாதிரி. அதற்கு நிழலும் வெயிலும் ஒன்றுதான்.

## தோல்வி என்பது முடிவு அல்ல

- ❖ தோல்வி என்பது வாழ்க்கையின் முடிவு அல்ல. அது ஒரு சம்பவம்.

## தற்கொலை கூடாது

- ❖ நாட்டிலே எவ்வளவுதான் அறிவு வளர்ச்சி ஏற்பட்டாலும் தற்கொலைக்கு மட்டும் பஞ்சமில்லை. வாழ்க்கையிலே போராடி வெற்றி பெறவேண்டும். அதை விட்டு தற்கொலை கூடாது.

## அனுபவம்

- ❖ படித்தவர்கள் எல்லாரும் புத்திசாலியாகலாம். ஆனால் எல்லோரும் அறிவாளியாக முடியாது. அனுபவம்தான் அதைத் தரவேண்டும்.

## உயர்ந்தவர் யார் ? தாழ்ந்தவர் யார் ?

- ❖ எல்லோரும் தாயின் வயிற்றில் உதயமாகி இந்த மண்ணோடு வயிற்றில்தான் மறைகிறார்கள். இதிலே உயர்ந்தவர் யார் ? தாழ்ந்தவர் யார் ?

## துன்பம் மனதை பலப்படுத்தும்

- ❖ துன்பத்தைக் கண்டு மனிதன் கண்ணீர் விடக்கூடாது. உழைப்பது உடலைத்தான் பலப்படுத்தும், துன்பம் மனதையே பலப்படுத்தும்.

## கடவுள் தனியொரு பிரிவுக்கு மட்டும் சொந்தமானவரல்லர் !

- ❖ நீர், நெருப்பு, பூமி, கடல் இதெல்லாம் பொதுவாக இருக்கும்போது, அவற்றைப் படைத்த கடவுளை மட்டும் தனியொரு பிரிவுக்குச் சொந்தமாக்கிவிடக் கூடாது.

## பாக்கியசாலி

❖ கண்கள் இருக்கின்றவர்களைவிட கண்கள் இல்லாதவர்கள் பாக்கியசாலிகள் தெரியுமா ? சில கண்றாவிகளைப் பார்க்க முடியாது.

## குழந்தை

❖ இந்த உலக ஆரவாரத்துக்கு இடையில் ஒரு குழந்தையினால் மட்டும்தான் நிம்மதியாகத் தூங்க முடியும்.

## பிறவி எடுத்து என்ன பயன் ?

❖ மனிதன் பிறருக்காக எதையும் செய்யவில்லை என்றால் பிறவி எடுத்து எந்தப் பயனும் இல்லை.

## நிழல்

❖ மற்றவர்களுக்கு நிழல் கொடுக்கவேண்டும் என்றால், மரம் வெயிலில் காய்ந்துதான் ஆகவேண்டும்.

## வெற்றி—நல்ல மனசு

❖ வெற்றிக்கும் நல்ல மனசுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

## உண்மை

❖ உடனடியாக நம்பவைக்கிற சக்தி உண்மைக்குக் கிடையாது.

## தற்கொலை கேவலமானது

❖ தற்கொலை கேவலமானது, பலவீனமானது, கோழைத்தனமானது.

## நீதியின் பார்வை

❖ அநீதியின் போர்வையில் கொஞ்சநாள் மறைந்திருக்கலாம். நீதியின் பார்வையில் எப்பவும் தப்பிக்க முடியாது.

## துன்பத்தை வெல்ல...

❖ வீட்டுக்கூரையிலேஒட்டடைபடியவேண்டும்என்றுயாரும்விரும்புவதில்லை. அது தானாகத்தான் படியும். அதுபோலத்தான் நமது வாழ்க்கையில் வரும் துன்பமும். அதை மன உறுதியால்தான் போக்கவேண்டும்.

## குறுக்குவழியில் கோபுரம் ஏறாதே!

- ❖ வாழ்க்கையில் முன்னுக்கு வரவேண்டும் என்று முயற்சி பண்ணுவதில் தப்பில்லை. அதற்காகக் குறுக்கு வழியில் கோபுரம் ஏறக் கூடாது.

## பெண்ணுரிமை

- ❖ நாட்டிலே பெண்களுக்குப் பஞ்சம் இல்லை, பெண்களின் உரிமைக்குத்தான் பஞ்சம். அதை ஒப்புக்கொள்ள மனம் இல்லாத ஆண்களின் அறிவுக்குத்தான் பஞ்சம்.

## பணத்துக்காக...

- ❖ கேவலம் பணத்துக்காக பண்பை, பகுத்தறிவை, மனிதாபிமானத்தை முறிக்கக் கூடாது.

## மனித உருவில் புலி

- ❖ கூண்டுக்குள் போர்வையில் இருக்கிற புலி எவ்வளவோ மேலானது. வெளியே மனித உருவில் ஆயிரக்கணக்கான புலிகள் இருக்கின்றன. அவர்கள் இதயத்தைப் போர்வையாக்கி இருக்கிறார்கள்.

## காரணம் நல்லதாக இருந்தால்...

- ❖ என்னதான் கருப்பாக இருந்தாலும் காகம் குயிலாக மாறாது. காரணம் நல்லதாக இருந்தால் பொய்யைக்கூட அனுமதிக்கலாம் என்று வள்ளுவரே கூறியிருக்கிறார்.

## நான்கு சுவர்கள்

- ❖ பெண்கள் முட்டைக்குள் இருக்கிற மஞ்சள் கரு மாதிரி. என்ன நடந்தாலும் நாலு சுவர்களுக்குள்தான் இருக்கணும். நான்கு சுவர்கள் என்பது அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு பண்புகள்தான்.

## இதயம்

- ❖ மனிதனுடைய முகம் இருக்கின்ற அதே இடத்தில் இதயம் இருந்திருந்தால் உலகத்திலே குற்றவாளிகளே இருக்க மாட்டார்கள். என்ன செய்வது? கண்ணுக்குத் தெரியாத இடத்திலே இருக்கிறதனால்தான் உலகத்திலே இத்தனை அக்கிரமம் நடக்கின்றது.

## கருத்துக்கள்

❖ இந்த நாட்டுல இருக்கிற ஒவ்வொரு பெண்ணும் யாராவது ஒருவருக்குத் தாயாகவோ, மனைவியாகவோ, மகளாகவோ இருக்கிறார்கள் என்கிற கருத்துகள் நமக்குள் இருக்கவேண்டும்.

## நிரபராதி

❖ ஆண்டவன் நிரபராதிகளைக் கை விடுவதில்லை. குறைந்த அறிவுள்ள கோழிகூட தன் குஞ்சுகளை அடைகாத்து வளர்க்கிறது.

## பெருமை தானாக வந்து சேரும்

❖ பெற்றவங்களுக்கு பக்தி செலுத்தும் மகன்களுக்கு எல்லாப் பெருமையும் தானாக வந்து சேரும்.

## திட்டம்

❖ சட்டத்தை சரியாகப் புரிந்துகொண்டவர்கள் திட்டத்துக்கு தடையா இருக்க மாட்டார்கள்.

## சர்வாதிகாரம்

❖ பணமும் பதவியும் ஒரே இடத்தில் இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் சர்வாதிகாரம்தான் தோன்றும்.

## சுயமரியாதை

❖ வயதில் மூத்தவர்கள் என்பதற்காக சுயமரியாதையை இழக்கக் கூடாது.

## வாழ்க்கைத் தத்துவம்

❖ கடிகாரம் நேரத்தை மட்டும் காட்டவில்லை, வாழ்க்கையின் தத்துவத்தையும் காட்டுகிறது. சின்ன முள் பெண்ணின் பொறுமையையும், பெரிய முள் ஆணின் சுறுசுறுப்பையும், சின்ன முள்ளைச் சுற்றி எப்படி பெரிய முள் வருகிறதோ அது போல்தான் பெண்ணை சுற்றித்தான் ஆணின் வாழ்க்கை அமைகிறது.

## ஆத்திரம்

❖ பெத்த மனம் பித்து, பொண்ணு மனசு கல்லு. ஆத்திரம் தனக்கே ஆபத்தை கொடுக்கும்.

## மனதைத் தேற்று

❖ தாங்க முடியாத துக்கம் வந்தாலும் நாம்தான் சிறிது சிறிதாக மனதை தேற்றிக் கொள்ள வேண்டும்.

## வீண் கவலை வேண்டாம்

❖ வீணான கவலை இல்லாமல் இருந்தாலே போதும், உடம்புல நோய் நெருங்காது.

## போட்டி இருக்கலாம்

❖ தொழிலிலே போட்டி இருக்கலாம். பொறாமை இருக்கக் கூடாது.

## காலம் தரும் தண்டனை

❖ குற்றம் செய்தவங்க எப்பவும் தப்ப முடியாது. காலம் அவர்களுக்குத் தகுந்த தண்டனை கொடுக்கும்.

## உதவி செய்

❖ கெட்ட காரியத்துக்கு உதவி செய்கின்றவர்கள், ஆபத்து வந்ததும் பட்டமா பறந்துவிடுவார்கள். நல்ல காரியத்துக்கு உதவி செய்கின்றவர்கள்தான் கடைசிவரை நம்மோடு நீடித்து நிற்பார்கள்.

## பாசத்திற்கு கட்டுப்படவேண்டும் ஆசை

❖ பாசத்துக்குக் கட்டுப்பட்டுத்தான் ஆசை இருக்கணுமே தவிர, ஆசைக்காக பாசத்தை விட்டுவிடக் கூடாது.

## ஆண்டவனின் இருப்பிடம்

❖ யாருடைய மனம் சுத்தமாக இருக்கிறதோ அவன் மனதில்தான் ஆண்டவன் இருப்பான்.

## விளம்பரம் வேண்டாம்

- உதவினால், காப்பாற்றினால், விளம்பரப்படுத்தக் கூடாது. ஏன் என்றால் கடமை உணர்ச்சி போய் விளம்பரம் தான் முன்னே இருக்கும்.

## குழந்தைப் பாசம்

- பாசம் பாசம் என்று சொல்கிறார்களே, அது ஒரு குழந்தையை வைத்துத்தான் சொன்னார்கள்.

## வேலை

- கண்ணும் கருத்துமாக வேலை செய்யும் போது காது கேட்காது. இதயம் என்கிற காரில், எண்ணம் என்கிற பிரேக் பிடிக்காது.

## பெரியவனாகும் சாதாரண மனிதன்

- காரியம் என்று வரும்போது சாதாரண மனுசன் கூட ரொம்ப பெரியவனா கருதப்படுகிறான்.

## தாய்க்குத் தலைமகன்

- ஒவ்வொரு பெண்ணின் வாழ்க்கையிலும் ஒரு கண்டம் உண்டு. அதுதான் தலைப்பிரசவம். அதிலே சுகப்பிரசவம் ஏற்பட்டு நல்லபடியாகக் குழந்தை பெற்றுவிட்டால் அதுதான் அவளுக்கு மறுபிறவி. அப்படி உயிருக்குப் போராடி நொந்து பெற்று எடுக்கும் போது ஏற்படுகிற வலிதான் பிள்ளைமேல் தாய்க்கு அளவுக்குமேல் பாசத்தை வளர்க்கிறது. அதனால் மூத்த பிள்ளை எந்த தப்பு செய்தாலும் எவ்வளவு கெட்டவனாக இருந்தாலும் அவன் மேல் பாசம் அதிகமாக இருக்கும். அதனால் தான் தாய்க்குத் தலைமகன் என்று மூத்த பிள்ளையைச் சொல்கிறார்கள்.

## பெற்ற தாயை மாற்றிட முடியுமா ?

- பார்த்துப் பார்த்து சலித்து விட்டது என்பதற்காக பெற்ற தாயை மாற்றிவிட முடியுமா ?

## கடமைவாதிகள் முதல்படி

- கல்லடியும் சொல்லடியும் கடமைவாதிகளின் முதல் அரசியல் படியாகும்.

## மனித இனமே அழிந்திருக்குமே!

❖ தோல்வி அடைந்தவர்கள் அனைவரும் சாவை விரும்புவது என்றால், இந்த உலகத்தில் மனித இனமே அழிந்திருக்கும்.

## கொள்கையும் குணமும் மாறாது

❖ சுட்டிக் காட்டுவதனால், குறை கூறுவதனால் கொள்கையும் மாறாது, குணமும் மாறாது.

## கரும்பின் சுவை மாறாது

❖ கட்டிக் கரும்பை எட்டிக் கனியின் நடுவில் வைத்தாலும் கரும்பின் சுவை மாறாது.

## கள்ளம் கபடம் அற்ற மனிதர்கள்

❖ இந்த உலகத்தில் யார் யாரோ வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பட்டம் பதவிக்காக உறவையே வெட்டிக் கொள்பவர்கள், பணம் காசுக்காகப் பாசத்தையே அறுத்துக் கொள்பவர்கள், பொன்னுக்கும் பொருளுக்கும் போலிப் புகழுக்கும் தன்னையே அடகு வைத்துக் கொள்வார்கள். இவர்கள் எல்லாம் வாழும் போது கள்ளம் கபடம் அற்ற மனிதர்கள் ஏன் வாழக் கூடாது?

## உயிருக்கு பயந்தால்...

❖ உயிருக்கு பயந்தால் எந்த நல்ல காரியமும் செய்ய முடியாது.

## வேலையே கிடைக்காது

❖ முதலாளி நல்லவனா எனத் தெரிந்த பிறகு வேலைக்குப் போகவேண்டும் என்றால் இந்த உலகத்தில் ரொம்பப் பேருக்கு வேலையே கிடைக்காது.

## வீரன்—உயிர்

❖ வீரனாக வாழத்தான் வேண்டும். அதே நேரத்தில் உயிரையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

## மரியாதை

❖ மரியாதை பெற வேண்டும் என்றால் மரியாதை கொடுத்து வாங்கணும்.

## கோரிக்கை

❖ கோரிக்கை நிறைவேறவில்லை என்பதற்காகக் கல் எறியக் கூடாது.

## தவறைத் திருத்திக்கணும்

❖ பிறரைத் தண்டிப்பதைவிட தன்னிடம் உள்ள தவறைத் திருத்திக்கொள்ள வேண்டும். அதுதான் நல்லது.

## ஆபத்து

❖ எல்லோரும் ஒருவிதமாக இருக்கும் போது நாம் மட்டும் தனிவிதமாக இருந்தால் நமக்குத்தான் ஆபத்து.

## அண்ணன்–தம்பி

❖ நமக்கு அறிவுதான் அண்ணன், பண்புதான் தம்பி, இதிலே பலாத்காரம் கூடாது.

## காரணம்

❖ படித்தவர்கள்,மற்றவர்கள்திருந்துவதற்குக்காரணமாகஇருக்கவேண்டுமே தவிர, கெட்டுப் போவதற்குக் காரணமாக இருக்கக்கூடாது!

## குற்றம்

❖ குற்றம் யார் செய்தாலும் தடுக்க வேண்டியதுதான். அது நம்மிடமும் இல்லாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

## நியாயமான விலை

❖ ஒவ்வொரு தொழிலிலும் உற்பத்தி செய்யறவங்க எல்லாமே தனக்குப் போக மீதியை அதிக விலைக்குத்தான் விற்கணும்னு முடிவு செய்தா நாம் கட்டியிருக்கிற வேட்டி கூட நியாயமான விலைக்குக் கிடைக்காது.

## சுயநல வாழ்க்கை

❖ பலபேர் தனது தனிப்பட்ட விரோதத்தைத் தீர்ப்பதற்காக அப்பாவி ஏழைகளிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு அவர்களுக்குள் மோதவிட்டு இவர்கள் மட்டும் சுயநல வாழ்க்கை நடத்துகிறார்கள்.

## வேட்டை ரகசியம்

❖ ஆட்டைக் காட்டித்தான் புலியைப் பிடிக்கவேண்டும். அதுதான் வேட்டையின் ரகசியம்.

## நிழல்

❖ ஓர் உருவத்துக்கு இரண்டு நிழல் இருக்க முடியாது.

## நெருக்கம்

❖ அதிகமான நெருக்கம் பெரிய பிரிவுக்குக் காரணமாகிறது.

## நேர்மை

❖ வாழ்க்கையிலே நேர்மையானவராக இருக்க வேண்டும். பிறர் செய்கின்ற தவறைக் கண்டிக்க வேண்டியதும் கடமைதான்.

## மனிதப் பண்பு

❖ பிறரை வாழ வைப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமானால் அதைச் செய்வதுதான் மனிதப் பண்பு ஆகும்.

## சிந்தனை

❖ ஒரு வார்த்தை சொல்வதற்கு முன்னால் பல தடவை சிந்திக்கவேண்டும்.

## காலத்தின் கட்டாயம்

❖ நாம் எல்லோரும் காலத்தின் கட்டாயத்திற்குத் தலைவணங்கியே ஆகவேண்டும்.

## பந்தமும்–சொந்தமும்

❖ பசிக்கும் நோய்க்கும் பந்தமும் கிடையாது, சொந்தமும் கிடையாது வந்தவர்கள் அனுபவிக்க வேண்டியதுதான்.

## தாய்க்கு, பிள்ளை மருந்தாவான்!

❖ பால் பருவத்தில் பிள்ளைக்குத் தாய் மருந்தாவாள். தள்ளாத வயதில் தாய்க்கு, பிள்ளை மருந்தாவான்!

## பூந்தோட்டம்

❖ பாமர மக்கள் வாழும் கிராமம் ஒரு பூந்தோட்டம் போல.

## அச்சம் என்பது மடமையடா!

❖ கடலுக்கு பயந்தா முத்து எடுக்க முடியாது. வீணான பயம் எந்த நல்ல காரியமும் செய்ய விடாது. மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டை இடிக்கலாமா? ஆபத்துக்கு பயந்தா ஆபத்தில் இருப்பவர்களையும் காப்பாற்ற முடியாது.

## டாக்டரின் லட்சியம்

❖ ஒரு டாக்டரின் லட்சியமே உயிரைக் காப்பாற்றுவதுதான். தவிர அவன் குற்றவாளியா, நிரபராதியா என்று பார்ப்பதில்லை.

## தாயின் ஆசியும் தந்தையின் அன்பும்

❖ தாயின் ஆசீர்வாதமும் தந்தையின் அன்பும்தான் மகன் கடமையைத் தவறாமல் காக்கிறது.

## குடும்பம் ஒரு கோயில்

❖ குடும்பம் என்பது கூட்டல் கழித்தல் அல்ல. கணக்குத் தீர்ப்பதற்கு. அது ஒரு கோயில்.

## சொல்லிப் புரியாத மனிதர்கள்

❖ சில குழந்தைகளுக்கு நெருப்பு சுடும் என்று சொன்னால் கேட்காது. தொட்டுப் பார்த்த பிறகுதான் அதன் அனுபவத்தை உணரும். அதுபோல்தான் சிலரக மனிதர்கள் இருக்கிறார்கள்.

## நல்லவர்களுக்கு சோதனை உண்மை தூங்கும்வரை

❖ நல்லவங்களுக்கும் சோதனை வரும். அது எப்போது என்றால் உண்மை தூங்கும் போது. அது முழிக்கிற வரைக்கும் தான் சோதனையும்.

## தொண்டு

- ❖ டாக்டருக்கும் தொண்டு செய்பவர்களுக்கும் நேரம் காலம் கிடையாது. எப்பொழுதெல்லாம் வாய்ப்புக் கிடைக்கிறதோ அப்பொழுதெல்லாம் தொண்டு செய்யலாம்.

## வாழ்த்தும் உள்ளம்

- ❖ பொல்லாதவர்கள் சாப்பிட்டால் உடல்தான் வாழ்த்தும். இல்லாதவர்கள் சாப்பிட்டால் உள்ளம் வாழ்த்தும்.

## அறிவாளிகள்

- ❖ வாழ்க்கையில் பல தோல்விகளைச் சந்தித்தவர்கள் தான் முடிவில் சிறப்பான வெற்றியைப் பெறுகிறார்கள். அதேபோல் பரீட்சையில் பல தடவை தோல்வி கண்டவர்கள் தான் கடைசியில் சிறந்த அறிவாளியாகத் திகழ்கிறார்கள்.

## உழைப்புக்கு மதிப்பு

- ❖ பணத்தை மட்டும் நம்பி வாழணும்னு நினைக்கிறார்களே, அது பைத்தியக்காரத்தனம். உழைப்பையும் நம்பவேண்டும், உழைப்புக்கு மதிப்பும் கொடுக்கவேண்டும்.

## மனிதன் சொல்

- ❖ உயிர் இல்லாத படத்தை நம்புகிறார்கள், உயிர் உள்ள மனிதன் சொல்லை நம்ப மாட்டேன் என்கிறார்கள்.

## நியாயம்

- ❖ நியாயம் நமது பக்கம் இருக்கிற வரைக்கும் எந்த ஆபத்தும் நம்மை நெருங்காது.

## நாட்டுக்கு தேவையானவர்கள்

- ❖ இருட்டுக்குள்ளே உட்கார்ந்துகொண்டு மற்றவங்களைத் திட்டுவதைவிட, அந்த இருளைப் போக்குவதற்கு தீபத்தை ஏற்றி வைக்கிறார்களே, அவர்கள்தான் நாட்டுக்குத் தேவையானவர்கள்.

## உண்மை நாடகம்

❖ உண்மையைப் பார்த்தால் நாடகம் போலத்தான் தெரியும்.

## நேர்மை

❖ நேர்மை என்பது உள்ளத்தோடும் உடலோடும் ஒட்டிப் பிறந்ததாகும்.

## தலைவணங்கல்

❖ தவறாக இருந்தால் நேர்மையான பிச்சைக்காரங்களுக்குத் தலை வணங்கலாம். அநியாயமான பணக்காரங்களுக்குத் தலைவணங்கவே கூடாது.

## எது பெருமை ?

❖ பாவிகளுக்கு துணை போவது பெருமை அல்ல. தியாகிகளின் வழிநடப்பது தான் பெருமை.

## கடவுளின் இருப்பிடம்

❖ கடவுள் உண்மையில் ஏழைகளின் அன்பில்தான் இருக்கிறார்.

## அன்பும் நாணயமுமே எனது முதலீடு

❖ எனக்கு உள்ள முதலீடு எது தெரியுமா ? மக்களின் அன்பும், எனது நாணயமும் தான். அது என்றைக்குமே மோசம் போகாது.

## சமூகக் கேடு

❖ பிறக்கும்போதே குழந்தை கையை மூடிக்கொண்டு பிறக்கிறதே, ஏன் தெரியுமா ? யாரிடமும் எதையும் வாங்கக் கூடாது என்பதற்காகத்தான். ஆனால் சில பாவிகளால் சமூகம் கெட்டுப்போவதினால் கண்டதற்கெல்லாம் கையை நீட்டுகிறது.

## சாகாது சத்தியம்

❖ சத்தியம் சில சமயம் தூங்குவது போல இருக்கும். ஆனால் அது என்றைக்குமே சாகாவரம் பெற்றது.

## நீதியும் நேர்மையும்

❖ நீதியும் நேர்மையும் எங்கு இருக்கிறதோ, அங்குதான் கடவுளும் இருக்கிறார். முன்பெல்லாம் மக்கள் மனதிலே கடவுளை வைத்து இருந்தார்கள். அதனால் மனசாட்சிக்கு பயந்து இருந்தார்கள். இப்போது நீதியும் இல்லை, நியாயமும் இல்லை, அதனால் மக்கள் தங்கள் மனதில் இருந்து தூக்கி வெளியே வைத்து கடவுளை சிலையாக்கி விட்டார்கள்.

## கோர்ட்–சுலபமும் கஷ்டமும்

❖ கோர்ட்டுக்குள் நுழைவது சுலபம், வெளியே வருவது கஷ்டம்.

## வெளிப்படை

❖ பணம் இருந்தா பயமும் இருக்கும், அதற்கு மீறின தைரியமும் இருக்கும். எதுவும் ஒப்பனா(வெளிப்படை) இருக்காது.

## இதயத்தால் சொல்ல வேண்டும்

❖ சில விஷயங்களை நேரிடையாகச் சொல்ல வேண்டும். சில விஷயங்களை இதயத்தால் தான் சொல்ல வேண்டும்.

## பத்து மடங்கு பலம்

❖ ஒரு உயிரைக் காப்பாற்றுவதற்காகச் சொல்லுகிற சொல்லுக்கு உண்மையைவிடப் பத்து மடங்கு பலம் அதிகம்.

## சம்பாத்தியம்

❖ பணத்தையும் புகழையும் சம்பாதித்து விடலாம். ஆனால் பெற்ற தாயைச் சம்பாதிக்க முடியாது.

## பட்டமும் படிப்பும்

❖ இந்தக் காலத்திலே பட்டம் வாங்கிய பிறகுதான் நிறையப் படிக்க வேண்டி இருக்கிறது.

❖ படித்துப் பட்டம் வாங்கித்தான் உண்மை சொல்லத் தேவையில்லை. நம் வாழ்க்கையிலே பட்ட அடிகளே போதும்.

### படித்து வருவதல்ல பண்பு

❖ பண்பு என்பது படித்து வருவது இல்லை, அது பிறவியிலே வரவேண்டும்.

### ஆண்டவன்

❖ ஆண்டவன், கோயிலில் சிலையாகவும் கல்லூரியிலே புத்தகமாகவும் இருக்கிறார்!

### துளி விஷம்

❖ குடம் பாலைத் துளி விஷம் கெடுத்து விடும். துளி விஷத்தால் பல குடம் பாலைக் கூடத் தூய்மையாக்க முடியாது.

### அநீதி

❖ அநீதியை அநீதியால் அழிக்க முடியாது.

### தாலிக்கயிற்றின் பலம்

❖ இரும்புச் சங்கிலியை விட தாலிக்கயிறுக்குத் தான் பலம் அதிகம்.

### கோர்ட்

❖ கோர்ட்டுக்கு கால்கள் தான் இருக்கும். கண் இல்லை.

### ஆசைக்கு வேண்டும் அளவு

❖ பாசத்துக்கு அளவே கிடையாது. ஆனால் ஆசைக்கு அளவு வேண்டும்.

### முயற்சியால் முடியாதது இல்லை

❖ முயற்சி பண்ணினால் முடியாதது என்பது இந்த உலகத்தில் இல்லை.

### வித்தியாசம்

❖ வீரத்திற்கும் ரோஷத்திற்கும் வித்தியாசம் உண்டு.

### மரம்

❖ முறிந்து விழும்போது தான் மரம் முறிந்தவனுக்கு உதவியா இருக்கும்.

## ஞானிகள் கண்டுப்பிடித்த அதிசயங்கள்

❖ விஞ்ஞானம் வளர்ந்திருக்கும் இந்தக் கால் நூற்றாண்டு கண்டுபிடிக்காத அதிசயங்கள் எந்த வசதியும் இல்லாத அந்தக் காலத்தில் ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர் என்பது அதிசயமாகும்.

## பல்லும் நாக்கும்

❖ சில சமயம் சாப்பிடும் போது நம்ம நாக்கை நாமே கடித்து விடுகிறோம். அதற்காகப் பல்லை உடைத்திட முடியுமா. கண்டித்திடுவோமா ?

## அபாயகரமான ஆயுதம்

❖ நாக்கு ஒரு அபாயகரமான ஆயுதம். அதனால்தான் வாய் என்னும் ‘லாக்கப்பில்’ வைத்து அடைத்து வைத்திருக்கிறான் ஆண்டவன்.

## உதவி

❖ உதவி செய்பவர்களுக்கு நன்றியை வார்த்தையினால் கூறினால் போதும். லஞ்சமா கொடுக்கக் கூடாது. ஏன் என்றால் அப்புறம் யாரும் உதவி செய்ய மாட்டார்கள், உதவியை விற்பார்கள்.

## பணம் அழிவின் மறுஉருவம்

❖ பணம், பணத்தின் அடையாளம் மட்டும் அல்ல, அவை அழிவின் மறுஉருவம். மாமா உடைத்தால் மண்குடம், மருமகன் உடைத்தால் பொன்குடமா ?

## எதிலும் உண்டு ஆபத்து

❖ ஆபத்து என்பது எதிலும் உண்டு. சாப்பிடும் போது தொண்டை அடைத்து செத்து விடுகிறோம். அதற்காகச் சாப்பிடாமல் இருக்க முடியுமா ?

## நிம்மதியாக வாழ...

❖ ஒருவருக்கு ஒருவர் நம்பிக்கை வைத்தால்தான் நிம்மதியாக வாழ முடியும்.

## வயிறு வாழ்த்த வேண்டும்

❖ வாயால வாழ்த்துகிறார்களே, அதை நம்ப முடியாது. வயிறு வாழ்த்த வேண்டும்.

## செல்லுபடி ஆகுமா சாமர்த்தியம் ?

❖ சாமர்த்தியமாக நெருப்பை மூடி மறைக்கலாம். ஆனால் புகையை மறைக்க முடியாது.

## அரிச்சுவடி

❖ இலக்கணம் தெரிந்தால் மட்டும் போதாது. அடுத்தவர்களை மதிக்கவேண்டும். அதுதான் வாழக்கையின் அரிச்சுவடி.

## கௌரவம்

❖ முறைப்படி நடக்கிற தொழிலுக்குத் தான் கௌரவம் இருக்கும். தொழிலுக்கு கௌரவம் இருந்தால்தான் எல்லோரும் ஈடுபட முன்வருவார்கள்.

## மதிப்பு

❖ குடிசைகள் எல்லாம் எப்போது கட்டடங்களாக மாறுகிறதோ அப்போதுதான் மனிதனின் தரம்கூட உயரும். எல்லோரும் மதிப்பார்கள்.

## உண்மை

❖ உண்மைக்கு சாட்சி மனசாட்சி. யாரிடம் என்ன கேள்வி கேட்பது என்கிற வரைமுறை இல்லாததினால்தான், உண்மை தெரிந்து இருக்கும் நல்லவர்கள் கூட சாட்சி சொல்ல பயப்படுகிறார்கள்.

## சராசரி மனிதன்

❖ எல்லோரும் மகாத்மா அளவுக்கு உயராமல் இருக்கலாம். ஆனால் சராசரி மனிதனாக இருக்கலாம் இல்லையா ?

## சுதந்திரம்

❖ ஒரு பெண்பிள்ளை நிம்மதியாக வாழமுடியும் என்ற நம்பிக்கை எப்போது வருகிறதோ அப்போதுதான் சுதந்திரம் கிடைத்ததாக அர்த்தம்.

## குடும்பம் உடைந்தால்...

❖ கல் உடைந்தால் படியாகும். வில் உடைந்தால் விறகாகும். குடும்பம் உடைந்தால் குப்பைகூட ஆகாது.

## மனசாட்சி

❖ மனசாட்சி போல கண்டிப்பான நீதிபதியைப் பார்க்கவே முடியாது.

## உடல் உழைப்பு–அறிவு

❖ உடல் உழைப்பும் அறிவும் சேர்ந்து செயல்பட்டால் தான் எந்தத் தொழிலுக்கும் மதிப்புக் கூடும். அப்பத்தான் நாடு நாடாக இருக்கும். இல்லையென்றால் நாடு என்று போர்டு போட்டால்தான் தெரியும்.

## உண்மைக்கு அழிவில்லை

❖ என்னதான் நம்ம பக்கம் நியாயம் இருந்தாலும் மற்றவங்க உணரும்படி எடுத்துக் கூறினால்தான் எந்த நியாயமும் எடுபடும். உண்மைக்கு என்றைக்குமே அழிவில்லை.

## பெண்ணின் வாழ்க்கை லட்சியம்

❖ ஒரு பெண்ணுடைய வாழ்க்கை லட்சியமே ஒன்று நல்ல மனைவியா இருக்கணும். மற்றொன்று நல்ல தாயா இருக்கணும். இதுதான்.

## முதல் எதிரி

❖ சோம்பேறித்தனம் தான் மனிதனுக்கு முதல் எதிரி.

## நட்பு பரிமாற்றம்

❖ மாணவப் பருவத்தில் எவ்வளவோ அபிப்பிராயம் இருக்கும். ஆனால் பிரிந்து போகும்போது நண்பர்களைத்தான் பிரிந்து போகணும். ஏனென்றால் நாளை எங்கேயாவது சந்திக்க நேரும் போது ஒருத்தருக்கு ஒருத்தர் நட்பை பரிமாறிக் கொள்ளலாம்.

## சிரிப்பு

❖ மனுசனுக்கும் மிருகத்துக்கும் சிரிப்பு ஒன்றுதான் வித்தியாசம் காட்டும்.

## ஓவியன்

❖ சந்திரனை எழுதற ஓவியன் சந்திரன் கிட்ட அனுமதி கேட்பதில்லை. அதுபோல அழகு எங்கு இருந்தாலும் அதை எழுத ஓவியனுக்கு உரிமை உண்டு.

## அதுவும் போதைதான்

❖ பணம், புகழ், பதவி மேல் மோகம் வந்தால் அதுவும் ஒருவகை போதையாகிவிடும்.

## பொய்

❖ பொய்யை உரக்கச் சொல்வதினால் உண்மையாகிவிடாது.

## விடுதலை

❖ மரண வாசலிலே இருக்கிற ஒரு உயிருக்கு விடுதலை கொடுப்பது பாவம் இல்லை.

## நடமாடும் தேர்

❖ பெண்களை நடமாடும் தேர் என்பார்கள். சோம்பேறிகள், வேலை செய்யாதவர்களையும், வேலை செய்பவர்களைத் தடுப்பவர்களையும் சோம்பேறி என்றுதான் சொல்வார்கள்.

## இதயம் கெட்டுப்போனால்...

❖ எந்திரம் கெட்டுப் போனால் சீர் செய்யலாம். இதயம் கெட்டுப் போனால் ஒன்றும் செய்ய முடியாது.

## விவசாயிகளின் பிறந்தநாள்

❖ வயிற்றை நம்பியிருக்கும் விவசாயிகளுக்கு அறுவடை செய்யும் நாள்தான் பிறந்தநாள் விழா!

## பண மயக்கம் பொல்லாதது

❖ மதுவுக்கு விபரீதம் என்று மற்றொரு பெயர் உண்டு. குடிப்பழக்கத்தைவிட பண மயக்கம் ரொம்பவும் பொல்லாதது.

## மதுவே அவமானம்

❖ மிருகத்தை விட மனிதன் உயர்ந்தவன் என்பதற்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டு அடையாளம் பகுத்தறிவுதான். அந்தப் பகுத்தறிவை இந்த மது பாழாக்கி விடுகிறது. ஆடை இல்லாமல் வெளியே வருவதற்கு வெட்கப்படுகிற

நல்லவன் கூட, இந்த மதுவைக் குடித்துவிட்டு, இருக்கிற ஆடையைக் கிழித்து எறிந்து, பைத்தியக்காரன் மாதிரி நடுரோட்டிற்கு வந்துவிடுகிறான்! அது எவ்வளவு பெரிய அவமானம்!

## சிரிப்பிலும் வேண்டும் சிக்கனம்

❖ அதிக சிரிப்பு அழகும் கூடும், அதோடு ஆபத்தும் கூடும். சிரிப்பிலும் சிக்கனம் தேவை.

## அனாதை

❖ எவ்வளவு சொத்துகள் இருந்தாலும் ஆணாகப் பிறந்தால் அவனுக்கென்று ஒரு சொந்தத் தொழில் இருக்கவேண்டும். இல்லையென்றால் அவனும் அனாதைதான்.

## உள்ளம்

❖ கடவுள், மனிதர்கள் எல்லாருக்கும் ஒரே மாதிரி உருவம் வைத்தான். ஆனால், உள்ளம் ஒவ்வொருவரும் தெரிந்திருக்க வெவ்வேறாக வைத்தான்.

## மறைந்தவன் தோன்றுவான்

❖ மாண்டவன் மீண்டது கிடையாது. ஆனால் மறைந்தவன் தோன்றுவது உண்டு.

## கண்டிப்பான வாத்தியார்

❖ கஷ்டத்தைப் போல மனிதனுக்குப் படிப்பு சொல்லித் தரும் கண்டிப்பான வாத்தியார் யாரும் இல்லை.

## நாணயம் என்று ஏன் பெயர் வந்தது ?

❖ கொடுக்கிறவர்களும் வாங்கிறவர்களும் என்றைக்குமே நாணயம் தவறக் கூடாது என்பதற்காகத் தான் காசுக்கே நாணயம் என்று பெயர் வந்தது.

## ஏழைகளாக வாழலாம்...

❖ வஞ்சகர்கள் மத்தியில் வசதியாக வாழ்வதைவிட நெஞ்சம் நிறைய கஷ்டப்பட்டு ஏழைகளாக வாழலாம்.

## இதயத்தை விலைபேசக் கூடாது

❖ இதயத்தைவிட வயிறு பெரிதுதான். அதற்காக வயிற்றை நிரப்பவேண்டும் என்பதற்காக இதயத்தை விலைபேசக் கூடாது.

## தகுதி

❖ தகுதி என்பது பணத்தில் இல்லை, வாழ்கின்ற வாழ்க்கையில் இருக்கின்றது.

## மலையும் மடுவும்

❖ தங்கமும் தகரமும் தரையிலே கிடைத்தாலும் தகுதியிலே மலையும் மடுவும் போல.

## வாழ்வென்னும் போர்க்களம்

❖ வாழ்க்கையே ஒரு போர்க்களம். அதில் கோழைக்கு இடம் இல்லை.

## எச்சரிக்கையுடன் பழகுக

❖ உயிருக்கு உயிரான நண்பனாக இருந்தாலும் எந்த நேரத்திலும் விரோதியா மாறலாம் என்று எச்சரிக்கையாக பழகக் கூடிய காலம் இது.

## மரணம் ஒரு விபத்து

❖ இன்பமும் துன்பமும் எந்தத் தொழிலுக்கும் பொருந்தும். கடலில் மூழ்கி மூச்சடக்கி முத்து எடுக்கறவன் நீண்ட நாள் ஆயுளுடன் இருக்கிறான். பணப் பெட்டியைப் பக்கத்தில் வைத்து எண்ணிக் கொண்டிருப்பவன் சீக்கிரமே மரணத்தைச் சந்திக்கிறான். ஆதலால் வாழ்க்கையில் மரணம் என்பது ஒரு விபத்து போல. அது முடிவு அல்ல.

## நன்றி

❖ நன்றி என்பது மனுசனைப் பொறுத்த வரைக்கும் உணரக் கூடிய காலம் வரைக்கும்தான்.

## சந்தேகம்

❖ சந்தேகம் என்பது பேயை விடப் பயங்கரமானது. நோயை விடக் கொடுமையானது.

## உத்தமர்கள்

- ❖ உத்தமர்களின் தியாகத்தை அவங்க இறந்த பிறகுதான் இந்த உலகம் ஏற்றுக் கொள்கிறது.

## செல்வம்–கவலை

- ❖ செல்வத்தைக் கொடுக்கும் போது கவலையும் சேர்த்துக் கொடுத்து விடுகிறான் கடவுள். இது ஏன் தெரியுமா ? மனிதன் எங்கே தன்னை மறந்து விடுவானோ என்றுதான்.

## சிரிப்பு–சிந்தனை

- ❖ அழுபவன் சிரிக்கணும், சிரிக்கறவங்க சிந்திக்கணும், இதுதான் எனது லட்சியம் ஆகும்.

## எந்த வேலையும் செய்யலாம்

- ❖ மனசு அறிந்து மற்றவர்களைக் கெடுக்கற வேலையைத் தவிர வேறு எந்த வேலை என்றாலும் செய்யலாம். தவறில்லை. உழைப்பவரே உயர்ந்தவர்.

## தன்னம்பிக்கையை இழக்காதே !

- ❖ நாம் எதை இழந்தாலும் தன்னம்பிக்கையை மட்டும் இழக்கக் கூடாது.

## நல்லவன் என்றே பெயர் வாங்கு

- ❖ வல்லவன் என்று பேர் வாங்குவதை விட நல்லவன் என்று பேர் வாங்கணும். இதுதான் எனது கொள்கையாகும்.

## தீமை நடந்தாலும் நன்மையே செய்

- ❖ நமக்குத் தீமை நடந்தாலும் பரவாயில்லை, பிறர்க்கு நம்மால் முடிந்த நன்மை செய்யணும். இதுதான் நம்ம கொள்கையா இருக்கணும்.

## பண்பால் வருவதே தகுதி

- ❖ தகுதி என்பது பணத்தால் வருவதில்லை, பண்பினால் வருவது. வளர்ந்து வரும் சமுதாயத்தில் ஏழையும் பணக்காரனும் ஒன்றுதான்.

## வாய்க்கிற மனைவியைப் பொறுத்தே வாழ்க்கை

❖ சந்தோஷம் என்பது பணத்தாலோ பதவியாலோ இருப்பது இல்ல. வாய்க்கிற மனைவியைப் பொறுத்துதான் வாழ்க்கையும் அமையுது.

## மனைவி ஒரு மந்திரி

❖ கணவனுக்கு இக்கட்டான நிலை ஏற்படும் போது ஒரு அமைச்சர் போல இருந்து ஆலோசனை கூறுபவள்தான் உண்மையான மனைவி.

## பெண்ணுக்கு முக்கியம் பொறுமை

❖ பெண்ணுக்கு ஆத்திரம் கூடாது, பெண்ணுக்கு பொறுமைதான் முக்கியம். பொறுமையின் மறு பெயர்தான் பூமாதேவி என்று குறிப்பிடுகிறோம்.

## தெய்வத்திற்கு மட்டுமல்ல
## பெண்ணுக்கும் உண்டு கருணை

❖ தெய்வத்திற்கு மட்டும்தான் கருணை உண்டு என்று இல்லை. பெண்ணுக்கும் கருணை உண்டு.

## நேர்மைக்குத் தலை வணங்குவோம்

❖ தவறா இருந்தா நேர்மையான பிச்சைக்காரங்களுக்குத் தலை வணங்கலாம். அநியாயமான பணக்காரர்களுக்குத் தலைவணங்கவே கூடாது.

## பெற்றோரின் பாராட்டு

❖ பெற்றவர்கள் பாராட்டினால்தான் மற்றவர்கள் பாராட்டுவார்கள்.

## தியாகிகள் வழி நடப்பதே பெருமை

❖ பாவிகளுக்கு துணை போவது பெருமை அல்ல. தியாகிகளின் வழிநடப்பது தான் பெருமை.

## மக்களின் அன்பே எனது முதலீடு

❖ எனக்கு உள்ள முதலீடு எது தெரியுமா? மக்களின் அன்பும் எனது நாணயமும் தான் அதற்கு என்றைக்குமே மோசம் போகாது.

## சாகாவரம் பெற்றது சத்தியம்

❖ சத்தியம் சிலசமயம் தூங்கறது போல இருக்கும். ஆனால் என்றைக்குமே சாகாவரம் பெற்றது.

## பாசத்திற்கு அணையிட முடியாது

❖ வெள்ளத்துக்கு அணை போடலாம், ஆனால் உள்ளத்தோட பாசத்துக்கு அணை போட முடியாது.

## நல்லதைச் சொல்பவனே நண்பன்

❖ நல்லதைச் சொல்கின்றவன்தான் நண்பனாக இருக்க முடியும்.

## பாதுகாப்பு

❖ வீட்டுப் பாதுகாப்புக்கு பூட்டு போடற மாதிரி ஒழுக்கத்துக்கும் பாதுகாப்புக் கொடுக்கணும்.

## அவமானமும்—அறிவுரையும் ஒன்றல்ல

❖ அவமானப்படுத்துவது வேறு, அறிவுரை கூறுவது வேறு. இரண்டையும் ஒன்றாக நினைக்கக் கூடாது.

## அடுத்தவர்களை மதிக்கணும்

❖ உடையை மட்டும் மாற்றினால் போதாது. உள்ளத்தையும் மாற்றியாகணும். அதற்கு அன்பு காட்டணும். அடுத்தவங்களை மதிக்கணும்.

## ஆடம்பரம் வேண்டாம், பாசம்போதும்!

❖ ஆடம்பரமாக அவியலும் பொரியலும் போட வேண்டாம். பாசத்தோடு பழைய சோறு போட்டாலே போதும்!

## அடிக்கடி இடத்தை மாற்றுபவர்கள்

❖ ஏமாற்ற நினைக்கின்றவர்கள்தான் அடிக்கடி இடத்தை மாற்றுவார்கள்.

## அன்பு காட்டு—அதிகாரம் காட்டாதே

❖ மதிப்பும் மரியாதையும் வேணும் என்றால் அன்பு காட்டணும். அதிகாரம் காட்டக் கூடாது.

## வளர்ப்பு முறை

❖ வீட்டை பாதுகாக்கத்தான் நாயை வளர்க்கிறார்கள். அது வெறி பிடித்து அலைந்தால், நாயைக் குறைகூற மாட்டார்கள். வளர்த்தவர்களைத் தான் சொல்வார்கள்.

## இதயத்தை பத்திரமாக வை

❖ இதயத்தை சத்திரமாக வைத்தால் எல்லோரும் தங்குவார்கள். அதே நேரத்தில் பத்திரமாகவும் இருக்கவேண்டும்.

## அன்பு பற்றி யாரிடம் பேசுவது ?

❖ இரத்தவெறி கொண்ட புலியிடம் தற்புகழ்ச்சி பற்றி பேசினால் அது கேட்காது. அழிவில்தான் நியாயம் என்று பேசுபவர்களிடம், அன்பைப் பற்றிப் பேசினால் கேட்க மாட்டார்கள்.

## நியாயம் கிடைக்க
## தொடர்ந்து முயலவேண்டும்

❖ ஒரு முறை கேட்டு நியாயம் கிடைக்கலை என்றால் மறுமுறை வேறு வழியில் முயற்சி செய்ய வேண்டும்.

## யாரிடம் தவறு

❖ மரத்திலே ஏறி தவறி விழுந்துவிட்டார்கள் என்றால், அதற்காக மரத்தினை வெட்ட மாட்டார்கள். ஏறின விதம் தவறு என்றுதான் நினைப்பார்கள்.

## பேச ஒரு விதிமுறை

❖ இன்னார் இடம் இன்னார் பற்றித்தான் பேசவேண்டும் என்கிற விதிமுறை இருக்கிறது.

## எக்ஸ்ரே எண்ணத்தைப் பார்க்குமா ?

❖ டாக்டர் எக்ஸ்ரே எடுத்தால் இதயத்தைத்தான் பார்ப்பார்கள். அதில் உள்ள எண்ணங்களைப் பார்க்க அவர்களால் முடியாது.

## கைமாறு

❖ செடியிடம் மலர் கைமாறு எதிர்பார்க்காது. பிள்ளையிடம், தந்தை கைமாறு எதிர்பார்க்கக் கூடாது.

## யாராலும் உண்மையை அழிக்க முடியாது

❖ எதிரியை யாராலும் கண்டுபிடிக்க முடியாது. உண்மையை யாராலும் அழிக்கவும் முடியாது.

## உண்மையை பலமாக பேசும்போது...

❖ உண்மையை பலமாக பேசும் போது மிரட்டுகிறது போலத்தான் இருக்கும்.

## தவறை மன்னிக்கும் ஒரே தெய்வம்

❖ எந்தத் தாய் மீதும் யாரும் பாசம் காட்டலாம். தவறை மன்னிக்கிற ஒரே தெய்வம் பெற்ற தாய்தான்.

## உலகின் மிகப் பெரிய தியாகி

❖ உண்மையில் இந்த உலகத்திலே மிகப் பெரிய தியாகி யார் என்றால் பெற்ற தாய்தான்.

## தலைவிதி என பெயர் வைத்தான்

❖ மனிதன் தான் செய்த தவறு எல்லாம் குறித்து வைத்து அதற்கு தலைவிதி என்று பெயர் வைத்தான்.

## பார்வையில் இருக்குது வேறுபாடு

❖ கடவுளை கல்லாகவும் பார்க்கலாம். கடவுளாகவும் பார்க்கலாம். அது பார்க்கிறவர்களின் விதத்தைப் பொறுத்தது.

## குறுக்கு வழி

❖ பிழைக்க வழி தெரியாதவர்கள் மனம் நொந்து குறுக்கு வழியில் வாழ வழி தேடுகிறார்கள்.

## எதிரியே இல்லாதவர்கள்

❖ இந்த உலகத்தில் எதிரியே இல்லாதவங்க யார் தெரியுமா? இன்னும் பிறக்காதவங்க தான்.

## சிரிப்பு எனும் வரப்பிரசாதம்

❖ கவலையை மறக்க ஆண்டவன் தந்த வரப்பிரசாதம் சிரிப்பு ஒன்றுதான்.

## மனிதனின் வாழ்க்கை

❖ செப்பு காசைக் கூட இந்த உலகம் நல்லதா கெட்டதா என்று சுண்டிப் பார்த்துதான் வாங்குகிறது. ஆனால் ஒரு மனிதனின் வாழ்க்கையைப் பாதிக்கிற வழக்கு மட்டும், உண்மையா பொய்யா என்று தட்டிப் பார்க்கிறது இல்லை, அப்படியே ஏற்கிறது.

## நல்லவர் யார் எனத் தெரிவதில்லை

❖ நாட்டில்தான் எவன் எதிரி, எவன் நல்லவன் என்று தெரிவதில்லை. காட்டில் அப்படியல்ல, பார்த்தவுடன் 'எதிரி யார் ?' என்று தெரிந்து விடும்.

## அழிவில் இல்லை வாழ்க்கை

❖ மக்களுடைய அழிவிலே நீங்கள் வாழ்ந்திடலாம் என்று நினைக்காதீர்கள். இந்தப் பணமே நம்மை அழித்திடும்.

## அழிக்கும் சக்திக்கு விலை அதிகம்

❖ உலகத்தின் விலையை விட அதை அழிக்கிற சக்திக்குத் தான் விலை அதிகம்.

## காலம்

❖ ஒருவரின் அழிவில்தான் இன்னொருவரின் வாழ்க்கை இருக்கிறது என்று நம்புகிற காலம் இது.

## தேவையான வாழ்த்து

❖ காசை வாங்கிக்கொண்டு மனதை எங்கேயோ வைத்துக்கொண்டு வாழ்த்துக் கூறுகிறார்களே, அதைவிட காசை எதிர்பார்க்காது மனதால் வாழ்த்துகிறீங்களே, அதுதான் தேவையான வாழ்த்து ஆகும்.

## இயற்கையின் தீர்ப்புக்குக் கட்டுப்படுக

❖ இந்த உலகத்திலே நாம் நினைக்கறது எல்லாமே நடந்திடும் என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது. அதற்காக கண்ணீர் விட்டோ, கவலைப்பட்டோ எந்த பிரயோஜனமும் இல்லை. இயற்கையின் தீர்ப்புக்கு நாம் கட்டுப்பட்டுத்தான் தீரணும். நடந்து விட்ட முடிவுக்கு, புதியதொரு தொடக்கத்தைத் தேடி நாம் அலையக் கூடாது.

## இரண்டு கைகள் ஏன் படைத்தான் ?

❖ ஆண்டவன் ஒரு மூக்கு படைத்தான், ஒரு வாயைப் படைத்தான். ஒரு வயிற்றைப் படைத்தான். ஆனால் கைகள் மட்டும் இரண்டு படைத்தான். ஏன் தெரியுமா ? ஒரு கை நமக்கு உழைக்கவும். இன்னொரு கை பிறருக்காக உழைக்கவும்.

## இரு மனம் ஒரு மனமானால்...

❖ மனசு இரண்டும் ஒன்று சேர்ந்துவிட்டால் அது என்னென்ன பேசும் என்று தெரியாது.

## அடக்கம்

❖ அந்தஸ்து உயரும் போதுதான் அடக்கமும் இருக்கணும்.

## ஆண்டவன் சன்னிதானம்

❖ ஆண்டவன் சன்னிதானம் தான் நீதிமன்றம். அந்த நீதிமன்றத்தில் குற்றவாளிகள் மட்டுமே தண்டனை பெறுவர்.

## பட்டமும் தம்பட்டமும்

❖ மக்களாகப் பார்த்துக் கொடுப்பதுதான் பட்டம். நாமே வைத்துக் கொண்டால் அதற்குப் பெயர் தம்பட்டம்.

## குறுக்கு வழியில் போகிறவர்கள்

❖ பலமாகக் காற்று அடிச்சால் குப்பையில் இருக்கிற எச்சில்கூட கோபுரத்தில் ஒட்டிக் கொள்ளும். அது போலத்தான் குறுக்கு வழியில் போகிறவர்கள்.

## எனது சந்தோஷம்

❖ நடிக்கிறது எனது தொழில். குப்பையைக் கூட்டுவது என் தொண்டு. நடிக்கும் போது மற்றவர்கள் என்னைப் பார்த்து சந்தோஷப்படுறாங்க. குப்பையைக் கூட்டும் போதுதான் நான் சந்தோஷப்படறேன்.

## குழப்பவாதிகள் அதிகம் உலவக் காரணம்

❖ ஒரு மனிதன் தனது தேவைக்கு மேலே சொத்துகள் அதிகமாக சேர்த்து வைப்பதால்தான் இந்த நாட்டிலே குழப்பங்களும் குழப்பவாதிகளும் அதிகமாக உலாவுகின்றனர்.

## அக்கிரமக்காரணிடம் அதிகாரம் கொடுத்தால்...

❖ சட்னி இருக்கே, அதிலே காரம் அளவோடு இருந்தால்தான் நாக்குக்கு ருசியாக இருக்கும். அதிக காரம் இருந்தால் நாக்கே குட்டிச் சுவராக போய்விடும். அதுபோலத்தான் அக்கிரமக்காரன் கிட்ட அதிகாரம் கொடுத்தா நாடே குட்டிச் சுவராகப் போய்டும்.

## பெண்களுக்கு சம உரிமை தரப்படணும்

❖ பெண்களுக்கு சம உரிமை தரப்படணும். இந்த உலகத்துக்கும் ஊரார்க்கும் சொல்ல வேண்டியது நமது கடமையாகும்.

## ஆதாயத்திற்காக ஏற்பட்ட நட்பும் உறவும்

❖ சில ஆதாயங்களுக்காக இடையில் ஏற்பட்ட நட்பும் உறவும் அவசியமான காரணத்துக்காக பிரியலாம். ஆனால் அது நிரந்தரம் ஆகாது.

## நியாயத்திற்கும் தர்மத்திற்கும்
## என்றுமே தோல்வியில்லை

❖ அக்கிரமம் ரொம்ப நாள் நீடிக்காது. நியாயத்துக்கும் தருமத்துக்கும் என்றைக்கும் தோல்வி ஏற்பட்டதில்லை.

## நண்டு

❖ சேற்றுக்குள் நண்டு இருக்குமே தவிர, நண்டு மேல சேறு இருக்காது.

## நினைத்தவுடன் நல்லது செய்

❖ நல்லது செய்வதற்கு நாள் பார்க்கக் கூடாது. நினைத்த நேரத்தில் செய்திடணும்.

## குருவிகூடு

- ❖ குருவி ஒரு கூடு கலைந்துவிட்டால் இன்னொரு கூடு கட்டிக் கொள்கிறது. மனிதன் அதைக்கூட செய்ய மாட்டான்.

## மனசாட்சி தூங்கக் கூடாது

- ❖ மனிதன் தூங்கலாம், மனசாட்சி தூங்கக் கூடாது.

## நல்லவன்

- ❖ சிலர் நல்லவன் என்று சொல்லுவதால் நல்லவனாகி விட முடியாது.

## மதிக்கவேண்டும்

- ❖ இருக்கின்றவர்களை மதிக்கவில்லை என்றாலும் வருகின்றவர்களை மதிக்க வேண்டும்.

## பண்பட்டவன்

- ❖ ஒருவன் மனது புண்பட்டால் அவன் பண்பட்டவன் என்று அர்த்தம்.

## அனுபவம் ஆயிரம் நூலுக்கு சமம்

- ❖ ஒரு கசப்பான அனுபவம் ஆயிரம் அறிவு நூல்களுக்குச் சமம்.

## ஆபத்தின் அறிகுறிகள்

- ❖ அதிகமாக வளையற வில்லும், அதிகமாக வளைந்து கொடுக்கிற மனிதனும் ஆபத்தின் அறிகுறிகள்.

## நம்பமாட்டார்கள்

- ❖ உண்மையை யாரும் உடனடியாக நம்பமாட்டார்கள்.

## மனோதைரியத்தை இழக்கக்கூடாது

- ❖ பிறந்தவங்க ஒருநாள் இறந்துதான் ஆகணும். நாம் எதை இழந்தாலும் யாரை இழந்தாலும் நம்முடைய மனோதைரியத்தை மட்டும் இழக்கக் கூடாது.

## அழுகை

- நல்லவர்களுக்காக அழுதால்தான் பல பேர் சிரித்து வாழ முடிகிறது.

## சத்தியம் என்றைக்கும் நிமிர்ந்து நிற்கும்

- சில சமயம் சத்தியம் தடுமாறுவது போல இருக்கும். ஆனால் அது சாகாவரம் பெற்றது. என்றைக்கும் நிமிர்ந்து நிற்கும்.

## ஆயிரம் பேர் பலம்

- நீதிக்காகப் போராட தனி மனிதனாக இருந்தாலும் அவனுக்கு ஆயிரம் பேர் பலம் உண்டு.

## பசி

- இந்த உலகத்தில் யாரும் அனாதையா இருக்கக் கூடாது. வைர நெக்லஸ் வயிற்றுப் பசியைப் போக்காது. ஆனால் பணம் வயிற்றுப் பசியையும் போக்கும், அறிவுப் பசிக்கும் உதவும்.

## வெற்றியும் தோல்வியும்

- ஒருத்தருடைய தோல்விதான் வெற்றிக்கு முதல் படி. இதை புரிஞ்சுக்கிட்டா இந்த உலகத்திலே எதையும் சாதிக்கலாம்.

## இறைவன் இல்லாத இடம் இல்லை

- கடவுள் இல்லாத இடம் இல்லை. ஏழையின் சிரிப்பில் இருக்கிறான். எங்களுடைய ஏர் கலப்பையில் இருக்கிறான். தொழிலாளர்களின் உழைப்பில் இருக்கிறான். நல்லவங்க இதயத்தில் இருக்கிறான்.

## கையில் இருக்கும் போதே கொடு

- கையிலே இருக்கும்போதே, கொடுத்து விடவேண்டும். கொஞ்சம் யோசித்தால் மனம் மாறிவிடும். அப்புறம் உதவியைச் செய்ய மாட்டார்கள்.

## சத்தியம் ஒரு சிரஞ்சீவி

- சத்தியம் சிரஞ்சீவித் தன்மை படைத்தது. அதை சாதாரண மனிதனால் அழிக்க முடியாது.

## குற்றம்

- ❖ குற்றம் செய்தவர்கள் ரொம்ப நாளைக்கு ஒளிந்திருக்க முடியாது.

## குற்றவாளி

- ❖ வீதியிலே போகிறவர்களை பார்த்து சில நாய்கள் குரைக்கின்றன என்பதற்காக, அவர்களை எல்லாம் குற்றவாளிகள் என்று கூறிவிட முடியாது.
- ❖ சந்தர்ப்பமும் சூழ்நிலையும் தான் மனிதனைக் குற்றவாளியாக்குகிறது.

## உத்தியோகம் எதற்கு ?

- ❖ உத்தியோகம் பார்ப்பது குடும்பத்துக்கு பணம் சம்பாதிக்க மட்டும் அல்ல. சமூகத்தில் சேவை செய்வதற்கும் தான்.

## விசாரணை

- ❖ யாராக இருந்தாலும் சரி, சந்தேகத்துக்கு உள்ளானவர்கள் விசாரணைக்கு உள்ளாகித்தான் தீரவேண்டும்.

## விசாரணை முறை

- ❖ ஒரு அதிகாரி வழக்கு விசாரணையில் ஈடுபடும் போது அவருடைய உற்றாரோ, உறவினரோ அந்த வழக்கில் ஈடுபட்டு இருந்தால் அந்த வழக்கை வேறு ஒரு அதிகாரியிடம் ஒப்படைப்பதுதான் முறையாகும்.

## ஜாமினில் வெளிவருபவர்கள்...

- ❖ குடும்ப உறவை விட காப்பாற்ற வேண்டியது நீதியைத் தான். ஜாமீனில் வெளிவரும் எல்லாருமே நிரபராதியாக இருப்பதில்லை.

## காக்கை ஈனப் பிறவி அல்ல

- ❖ காக்கை ஈனப் பிறவி அல்ல. விடிவதற்கு முன்னாலேயே விழிக்கிறது. விடியற்காலையில் குளிக்கிறது. தன் இனத்தோடு சேர்ந்து சாப்பிடுகிறது. தன் இனத்தில் ஏதாவது ஒன்று இறந்துவிட்டால் ஈமச் சடங்கு நடத்துகிறது.

## கண்ணீரைக் காலம் துடைக்கும்

❖ காலத்தால் துடைக்க முடியாத கண்ணீரே கிடையாது.

## மனித தெய்வம்

❖ மனிதன் என்ற சொல்லுக்கு இலக்கணமாக வாழ்பவர்களை இந்த உலகம் தெய்வம் என்றுதான் சொல்லும்.

## சாதனை

❖ சோதனையும் வேதனையும் இல்லையென்றால் இந்த உலகத்தில் சாதனை என்பது இல்லை.

## உழைக்காதவனுக்கு உணவு இல்லை

❖ உரிமையும் சுதந்திரமும் திருடுவதற்கு இல்லை. உழைப்பதற்குத்தான். உழைக்காத எந்த மனிதனுக்கும் சாப்பிட உரிமை இல்லை.

## பூட்டும்–வேலியும்

❖ மனசுதான் பூட்டு, மனசாட்சி தான் வேலி.

## இல்லை என்பது இல்லை

❖ இந்த நிலமும் நமது வாழ்க்கையும் பார்ப்பதற்குக் கரடுமுரடாகத் தான் இருக்கும். நாம் எல்லோரும் பொறுமையாகப் பாடுபட்டால் இந்த உலகத்தில் இல்லை என்பது இல்லாமல் இருக்கும்.

## நாக்குக்கு அடிமை ஆகலாமா ?

❖ நாம் நாக்குக்கு அடிமையாகக் கூடாது. நாக்குதான் நமக்கு அடிமையாக இருக்கணும்.

## நல்ல ஒழுக்கம்

❖ நல்ல ஒழுக்கத்தை நோக்கி ஒரு அடி முன்னே வைத்தால் ஒன்பது அடி அது நம்மை நோக்கி நகரும்.

## தேசமே திருந்தும்

❖ இந்த நாட்டுல இருக்கின்ற ஒவ்வொரு மனிதனும் திருந்தினால் இந்த தேசமே திருந்தும்.

## மண்மாதா

❖ மனுசனை மனுசன் ஏமாற்றலாம். மண்மாதாவை நம்பினால் ஒரு நாளும் ஏமாற்ற மாட்டார்.

## அதிக பலன்

❖ ஆழ்ந்த நம்பிக்கைதான் அதிக பலனைக் கொடுக்கும்.

## வேண்டாம் வன்முறை

❖ வன்முறையை வளர்க்கவும் வேண்டாம், வன்முறைக்கு பலியாகவும் கூடாது.

## இலட்சியவாதி

❖ தனக்கு பலம் இருந்தும் எதிரிகளின் வன்முறைக்கு கட்டுப்பட்டால்தான் எந்த சோதனையிலும் வெற்றி பெற்று இலட்சியவாதியாக மாற முடியும்.

## பூமியின் தத்துவம்

❖ சக்திக்கேற்ப உழைப்போம், தேவைக்கேற்ப எடுப்போம், சமுதாயம் என்ற சமூகத்தை உருவாக்குவோம். இதுதான் இந்த பூமியின் தத்துவமாகும்.

## இரும்புச் சங்கிலி

❖ தீய பழக்கங்களை ஆரம்பத்திலேயே அறுத்து விடவேண்டும். இல்லையென்றால் அவை பலமுள்ள இரும்புச் சங்கிலியாக மாறி நம்மையே அழித்து விடும்.

## ஒழுக்கம் உயிராகும்

❖ நம்மோடு இருக்கிற உயிர், ஒருநாள் நம்மை விட்டுப் போனால் திரும்ப வராது. அதுபோல்தான் ஒழுக்கமும், ஒழுங்கும் ஒருநாள் போய்விட்டால் வாழ்க்கையே அவ்வளவுதான். ஆனால் சராசரி மனிதனிடம் இதையெல்லாம் எதிர்பார்க்க முடியாது.

## கடின உழைப்பில் இருக்கிறது வெற்றி

❖ கடினமான பாறைகளுக்கு அடியில்தான் தங்கமும் வைரமும் இருக்கும். கடினமான உழைப்பிற்குப் பின்னால்தான் மனிதனின் வெற்றி இருக்கும்.

## பாராட்டும்—கண்டிப்பும்

❖ பாராட்ட வேண்டும் என்றால் நான்கு பேர் எதிரே பாராட்டவேண்டும். கண்டிக்கவேண்டும் என்றால் தனியாகக் கண்டிக்கவேண்டும்.

## வாழ்க்கைக்கு மிக அவசியம் படிப்பு

❖ படிப்பு என்பது வேலைக்காக மட்டும் அல்ல. வாழ்க்கைக்கும் மிகவும் அவசியம்.

## எந்த வேலையும் கேவலமானது அன்று

❖ திருடுவது, காக்கா பிடிப்பது தவிர, எந்த வேலையையும் கேவலமாக நினைக்கக் கூடாது.

## வறுமை இல்லாமல் போகும்

❖ கண்ணும், காதும் உள்ளவர்கள் ஏழைகள் மீது இரக்கம் காட்டினால் போதும். வறுமை இல்லாமல் இருக்கும்.

## வியர்வை

❖ இளமையில் விர்வை சிந்தாதவன் முதுமையில் கண்ணீர் சிந்துவான்.

## அனுபவங்கள் பக்குவப்படுத்தும்

❖ கசப்பான அனுபவங்கள்தான் மனிதனைப் பக்குவப்படுத்தும்.

## சாப்பிட கஷ்டப்படுகிறவர்கள்

❖ சாப்பாட்டுக்காக கஷ்டப்படுபவர்களும் உண்டு. இருக்கற சாப்பாட்டைச் சாப்பிட கஷ்டப்படுபவர்களும் உண்டு.

## நல்ல மனதுடன் ஆரப்பித்திடுக

❖ நல்ல மனதோடு ஆரம்பிக்கிற எந்தக் காரியமும் நல்லபடியாகத் தான் முடியும்.

## சிறிய தவறு–பெரிய பாவம்

❖ ஒரு மனிதன் தெரியாமல் செய்கின்ற சிறிய தவறால் எவ்வளவு பெரிய பாவங்களுக்குக் காரணமாகின்றான் ?

## கடமை முக்கியம்

❖ கடமையை முடிக்கின்ற வரைக்கும் கடிகாரத்தைப் பார்க்கக் கூடாது.

## தவறு செய்தோர் தலைவணங்கியே தீரவேண்டும்

❖ எவ்வளவு வசதி படைத்தவர்களாக இருந்தாலும் எவ்வளவு பெரிய பதவி படைத்தவர்களாக இருந்தாலும், தவறு செய்தவர்கள் என்றைக்காவது ஒரு நாள் நீதிக்குத் தலை வணங்கியே ஆகவேண்டும்.

## ஆசையும் நிராசையும்

❖ ஆசையை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்திட வேண்டும். இல்லையென்றால் பிறகு ஏற்படுகிற நிராசையைத் தாங்கிக் கொள்ள முடியாது.

## நீதிக்கு முன் குற்றவாளி

❖ தன்னுடைய சுயநலத்துக்காக பிறரைப் பலி கொடுக்கிறவர்கள் கொஞ்ச காலம் ஊரையும் உலகத்தையும் ஏமாற்றலாம். ஆனால் என்றாவது ஒரு நாள் அவர்களும் நீதிக்கு முன் குற்றவாளியாக நிற்பார்கள்.

## வெளியே சொல்ல முடியாத உண்மைகள்

❖ மனசுக்குத் தெரிந்த உண்மைகளை எல்லாம் சில சமயம் வெளியே சொல்ல முடியாது. ஏன் என்றால் மற்றவர்கள் அதனால் ரொம்ப பாதிக்கப்படுவார்கள்.

## கல்லாகவும் புல்லாகவும் ஆகும் கணவன்

❖ கண்ணியத்தை இழக்கும் போது கணவன் கல் தான். பொறுப்பை இழக்கும் போது புருஷன் புல் தான்.

## முடிவில்தான் தொடக்கம்

❖ வாழ்க்கை முடிந்து போனது என்று எதுவும் இல்லை. முடிவில்தான் தொடக்கம் இருக்கின்றது.

## முடிவு யாராலும் மாற்ற முடியாது

❖ முடிவு என்று ஒன்று இருந்தால் அந்த முடிவை யாராலும் மாற்ற முடியாது.

## மனதை விற்க முடியுமா ?

❖ மண்ணை விற்கலாம், பொன்னை விற்கலாம், மனதை விற்க முடியுமா ?

## உள்ளம் அழுதால் என்ன செய்ய ?

❖ கண்கள் அழுதால் கையால் துடைக்கலாம். உள்ளம் அழுதால் யார் என்ன செய்ய முடியும் ?

## வாழ்க்கையின் அடித்தளம்

❖ வாழ்க்கை என்பது, கண்ணீறாலோ, கண்ணீருக்காகவோ அமைக்கப்படுவதில்லை. அழகான அன்பிலே அமைக்கப்படுகிறது.

## திருந்தி வாழுங்கள்

❖ திருந்தி வாழுங்கள். முதன்முதலாக திருந்தி வாழும் போது கஷ்டமாகத் தான் தெரியும்.

## தேசத் துரோகம்

❖ மனிதனுக்கு மனிதன் பகை இருக்கலாம். மண்ணுக்கும் மனிதருக்கும் பகை இருக்கக் கூடாது. காலம்காலமாக நமக்கெல்லாம் ஊட்டி வாழவைத்த நிலத்தை சொந்தப் பகைக்காக பாழாக்கினால் அது இந்தத் தேசத்துக்குச் செய்கின்ற மிகப்பெரிய துரோகம் ஆகும்.

## நியாயமான உரிமை கிடைக்க வேண்டும்

❖ ஒவ்வொருத்தருக்கும் கிடைக்க வேண்டிய தேவையான, நியாயமான உரிமை கிடைக்கவில்லை என்றால் இந்த உலகத்திலே எப்படிப்பட்ட உறுதியான வேலியும் அதைத் தடுத்து நிறுத்த முடியாது.

## அநீதிக்கு அடிபணியாதே !

❖ குனிந்தால் குட்டுவதும், நிமிர்ந்தால் கை தட்டுவதும் இந்தச் சமூகத்தின் வழக்கம். நாம் எந்தச் சூழ்நிலையிலும் அநீதிக்கு அடிபணியக் கூடாது.

## உண்மையை மறைக்க முடியாது

❖ வெளிச்சத்தை விரலால் மறைக்க முடியாது. உண்மையை யாராலும் மறைக்க முடியாது.

## குலத்திற்கும் குணத்திற்கும் சம்பந்தமில்லை

❖ தொழிலை வைத்துத்தான் ஜாதி உண்டாக்கப்பட்டது. பகுத்தறிவு இல்லாத மனிதர்களால் உருவாக்கப்பட்டது தான் ஜாதி. குலத்துக்கும் குணத்துக்கும் சம்பந்தமே கிடையாது.

## கடமையைக் காக்க வேண்டும்

❖ நாம் கடமையைக் காக்கத்தான் வாழ்கிறோமே தவிர, வாழ்க்கைக்காக கடமையை விட்டுவிடக் கூடாது.

## பிறரை அழவைக்க கூடாது

❖ நாம் ஜெயிக்கிறதுக்காக பிறரை அழவைக்கக் கூடாது. நாம் அழுதாலும் பரவாயில்லை. பிறரை ஜெயிக்க வைக்க கஷ்டப்பட்டு உழைக்கணும்.

## நெருப்பு

❖ உண்மையைப் பேசுகிறவர்கள் நெருப்புக்குக் கூட பயப்பட மாட்டார்கள்.

## பணத்தின்மீது நம்பிக்கை வேண்டாம்

❖ உழைப்பிலும் படிப்பிலும் தன்னம்பிக்கை இல்லாதவர்கள்தான் பணத்தின் மீது நம்பிக்கை வைப்பார்கள்.

## கர்நாடக சங்கீதம்

❖ எந்த வெளிநாட்டு இசையாக இருந்தாலும் அதற்கெல்லாம் அஸ்திவாரம் கர்நாடக சங்கீதத்தில்தான் உள்ளது.

❖ கர்நாடக சங்கீதம் கடந்த காலத்துக்கும், நிகழ் காலத்துக்கும் எதிர் காலத்துக்கும் பொருத்தமானது.

### காண்பதெல்லாம் உண்மையல்ல

❖ சொல்றதெல்லாம் அப்படியே நம்பிவிடக் கூடாது. காண்பதெல்லாம் உண்மையாகி விடாது.

### பெண்கள் தலைகுனியலாமா ?

❖ ஒரு பெண் நாணத்தால் தலைகுனிந்து இருக்கலாமே தவிர, அவமானத்தால் தலைகுனியக் கூடாது.

### சமையல் கலை இல்லை என்றால்...

❖ சமையல் கலை இல்லை என்றால் எல்லாக் கலையும் கலைந்து போய் விடுகிறது.

### உண்மைக் கனி இனிக்கும்

❖ உண்மை ஆரம்பத்தில் கசக்கும். ஆனால் முடிவு என்ற கனி இனிக்கும்.

### தாய் ஆனந்த கண்ணீர்தான் வடிக்கவேண்டும்

❖ நம்மைக் கண்டு தாய் ஆனந்தக் கண்ணீர் வடிக்க வேண்டுமே தவிர, நம்மால் வேதனைக் கண்ணீர் வடிக்கக் கூடாது.

### உள்ளத்தில் கூடாது கேவலம்

❖ மனிதனின் உதட்டிலே கேவலமான வார்த்தைகள் வந்தாலும் உள்ளத்திலே வரக்கூடாது.

### தன்னையே ஒழிக்கும் தவறு

❖ மனுசன் செய்யற தவறுக்கெல்லாம் ஒரு உச்சவரம்பு உண்டு. எல்லை மீறினால் அது அவனையே அழித்து விடும்.

### மகாத்மாவுக்கு மட்டுமல்ல

❖ சத்தியசோதனை என்பது மகாத்மா காந்திக்கு மட்டுமல்ல. இந்த உலகத்திலே பிறந்த எல்லோருக்கும்தான். பண்பும் ஒழுக்கமும் நிச்சயமாக வெற்றி பெறும்.

## பணமோகம் படைத்தோர் செயல்

- ❖ பணத்தின் மீது மோகம் உள்ளவர்கள் பணத்துக்காகப் பிறர் காலில் விழுவார்கள். பாத பூஜை செய்வார்கள். அயோக்கியனாக இருந்தாலும் ஆரத்தி எடுப்பார்கள். பணத்துக்குக் கொடுக்கிற மரியாதையை மானத்துக்கும் மனிதனுக்கும் கொடுக்க மாட்டார்கள்.

## மானம்

- ❖ மனிதத் தன்மை இல்லாதவர்களுக்கும் மரியாதை தெரியாதவர்களுக்கும் மானத்தைப் பற்றிப் பேச யோக்கியதை இல்லை.

## எதில் இருக்கிறது அந்தஸ்து ?

- ❖ அந்தஸ்து என்பது பணத்திலோ, பஞ்சு மெத்தையிலோ இல்லை. வாழுகிற வாழ்க்கையிலே இருக்கிறது. நடந்துக் கொள்கிற நேர்மையான முறையிலே இருக்கிறது. உழைக்கற உழைப்பிலே இருக்கிறது. பணம் இருந்தால்தான் அந்தஸ்து கிடைக்கும் என்பது முட்டாள்தனம்.

## நெஞ்சுறுதி போதும்

- ❖ வானத்தைக் கூரையாக நினைக்கறவர்களுக்கு மாளிகை தேவையில்லை. காலில் சக்தி உள்ளவர்களுக்கு கார் தேவையில்லை. நெஞ்சிலே இருக்கிற உறுதி ஒன்றே போதும்!

## அழிவது மேல்

- ❖ மானம் இழந்து வாழ்வதைவிட அழிந்து விடுவது மேலாகும்.

## ஆண்மை எது ?

- ❖ சூழ்ச்சியிலிருந்து மீண்டு வருவதுதான் ஆண்மை.

## திறமையை வளர்த்துக்கொள்

- ❖ வாழ்க்கையில் பெருமைக்கு முன்னாலே திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

## நாம் யாருக்கும் அடிமை இல்லை

- நாம் யாருக்கும் அடிமையாகக் கூடாது, யாரையும் அடிமைப்படுத்தவும் கூடாது.

## கலை என்பது வாழ்க்கைக்காக

- "கலை என்பது கலைக்காக" என்று இருந்த காலம் மாறி "கலை என்பது வாழ்க்கைக்காக" என்று மாறிவிட்ட இந்தக் காலத்திலே, கலையோடு வாழ்க்கையும், வாழ்க்கையோடு கலையும் கலந்து விட்டிருப்பதைக் காண முடிகிறது.

## பொறுமை–தன்னம்பிக்கை–துணிவு

- என்னைப் பொறுத்தவரையில் நான் என் கடந்த கால வாழ்வில் கண்ட அனுபவங்களைப் பற்றிச் சொல்வதென்றால், அது என் வாழ்வோடு நான் செய்த போராட்டம்தான் என்பதில் சிறிதளவும் சந்தேகத்திற்கிடமில்லை. அந்தப் போராட்டத்தின் போது, நான் என் கையிலேந்திய கருவிகள் பொறுமை, தன்னம்பிக்கை, துணிவு என்பவையேயாகும்.

## எனது ஆசை

- நான் உணர்ந்து கொண்ட உண்மைகள், நான் பெற்ற பாடங்கள், படிப்பினைகள், எனக்கு ஏற்பட்ட விதவிதமான அனுபவங்களின் விளைவாகக் கிடைத்த விளக்கங்கள், தெளிவுகள் எல்லாமே இந்த நாட்டில் வெவ்வேறு திசைகளில் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருப்போர், தொண்டர்கள், மாணவர்கள், கலைஞர்கள் இப்படிப் பலதரப்பட்டவர்களுக்கும் சிந்தனைக்குரியவையாக, தேவைப்படுமானால் கடைபிடித்தற்குரியவையாக வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

## பேராசை

- "ஒவ்வொரு மனிதனுக்குமுள்ள தேவைக்கு ஓர் எல்லை உண்டு. அல்லது எல்லையை வகுத்துக் கொள்ளவாவது வேண்டும்" என்ற அடிப்படையில், ஒரு மனிதன் தன் வாழ்க்கையைச் சீர்படுத்திக் கொள்வதற்குரிய சூழ்நிலையில் தன்னை ஆட்படுத்திக் கொள்ளும்போது, தன்னுடைய ஆசையும், சில சமயங்களில் பேராசையும், அவரை ஈர்த்துச் செல்கின்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுகிறது!

## ஆசை—பேராசை

- “எனக்கு இது வேண்டும்” என்பது ஆசை. “எனக்கு மட்டும் தான் இது வேண்டும்” என்பது பேராசை. “நான் வாழ வேண்டும்” என்று கூறவும், நினைக்கவும் ஒவ்வொருவரும் உரிமை உண்டு.

## சந்தர்ப்பம்

- ‘சந்தர்ப்பம்’ என்ற கொடிய வியாதி அறிவுள்ள, திறமையுள்ள சிந்தித்துச் செயலாற்றும் ஆற்றல் பெற்ற மனிதனைக் கூடச் சோதனைக்கு ஆளாக்கி அவனுடைய அறிவையே ஏமாற்றி விடுகிறது.

## அறிவும்—அனுபவமும்

- அறிவுதான் ஒரு மனிதனுக்கு வழிகாட்டியாக அமைகிறது. அனுபவந்தான் தெளிவைத் தருகிறது. ஒருவன் தனது முயற்சியில் வெற்றி அடையும்போது ‘அறிவாளி’ ஆகிறான். தோல்வி அடையும்போது ‘முட்டாள்’ ஆகிறான்.

## நண்பர்கள்

- ஒருவனுக்கு நண்பர்கள் என்று இருப்பார்களானால், அவர்கள் அவனுடைய நல் வாழ்வுக்காக வேண்டி, கடிந்துரைக்க அவசியம் ஏற்பட்ட போதிலும் பின் வாங்காமல், அதனால் அவனுக்குத் தாங்கள் விரோதியாகும் நிலை ஏற்படுவதையும் பொருட்படுத்தாமல் அவனுக்குப் புத்திமதி கூறித் திருத்த முயன்றால்தான் ‘நண்பர்கள்’ என்ற பெயருக்குப் பொருத்தமுடையவராவார்கள்.

## தவறைக் கண்டிப்பது

- நண்பன் செய்வது தவறுதான் என்று தெரிந்த பிறகும் அதைக் கண்டிக்காமல் பாராட்டிக்கொண்டே இருந்தார்களானால் நாளடைவில் அந்த நண்பன் தவிர்க்க முடியாத ஒரு முடிவுக்கே வந்து விடுவான்.

## வெற்றி—தோல்வி

- ஒரு கலைஞன் பெறும் வெற்றியும், தோல்வியும் இரண்டுமே எப்போதும் நீடித்து நிரந்தரமாக இருப்பவை அல்ல. அனுபவ அறிவுத் தெளிவுள்ள கலைஞன் வெற்றி உண்டாகும் நேரத்திலும், தோல்வி காணும் நேரத்திலும்

தன் நிதானம் தவறாமல் பூரிப்பிலும் சரி, ஏக்கத்திலும் சரி தன்னை மறந்து ஆழ்ந்து விடாமல் எச்சரிக்கையாகவே இருக்க வேண்டும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

## அர்ப்பணிப்பு

❖ தன்னோடு உள்ளவர்கள் தனக்கு உதவி செய்பவர்கள், தனக்காக வாழ்நாளையே அர்ப்பணிக்கத் தயாராக இருப்பவர்கள் அனைவரும் ஒருவேளை வாழ்க்கை வசதியில் உயர்ந்துவிட்டார்களானால், அவர்கள் தனக்குப் பயன்படாமல் போய்விடுவார்களே, தனது நலத்துக்காகப் பயன்படுத்தும் வாய்ப்பை இழந்துவிட நேருமே என்றுதான் இப்போதைய சமூகத்தில் பெரும்பாலோர் எண்ணுகிறார்கள்.

## இலட்சியம் தோற்காது

❖ மனிதன் வேண்டுமானால் தன் வாழ்நாளில் தனது இலட்சியத்தை நிறைவேற்றுவதில் தோல்வியடையலாம். ஆனால், இலட்சியம் தோற்காது தோற்றுவிடக்கூடாது.

## கோட்பாடு

❖ ஒரு மனிதனுடைய கோட்பாடுகளின் வெற்றியை அவன் தன் வாழ்நாளிலேயே, அவனது மரணத்துக்கு முன்னதாகவே அடைந்துவிட்டால்கூட, அவன் மறைந்த பிறகும், மற்றவர்களுக்கும் அவை பயன்பட்டால்தான் சிறப்புடையவையாகும்.

## உழைத்து உயர்வடையலாம்

❖ ‘‘மக்களின் அறிவை மழுங்கச் செய்து உழைப்புக்கு உயர்வு கொடுக்கும் தன்மையினைப் போக்கி, நேர்மையில் வெற்றி காணும் வழிமுறையில் உழைத்து உயர்வடையலாம் என்ற எண்ணத்தை மாற்றி, மந்திரத்தால் எளிதாக உயர்வையும், இலாபத்தையும் அடைய முடியும் என்று போதித்து, மக்களுக்கு மிக மிகத் தேவையான, சிந்திக்கும் ஆற்றலையே அழிவுப் பாதைக்கு அனுப்பி வைத்து, மக்களை மாக்களாக்கும் மோசமான கருத்தைக் கொண்ட படத்திலா எம்.ஜி.ராமச்சந்திரன் நடித்தான்!’’.

## குற்றம் பார்க்கின் சுற்றமில்லை

❖ ''குற்றம் பார்க்கின் சுற்றமில்லை'' என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மற்றவர்கள்மீது நான் குற்றம் கண்டுபிடித்தாலும் இல்லாவிட்டாலும், மற்றவர்கள் என்னுடைய குற்றங்களைப் பற்றிக் கணக்கிட்டுப் பார்த்தார்களானால், என்னுடைய பல நண்பர்களுக்கு நான், 'சுற்ற'மாகவும் இருக்க முடியாது. 'உற்றவ'னாகவும் இருக்க முடியாது.

## நம்பிக்கை

❖ எவ்வளவு உயர்ந்த கருத்தானாலும், உலகத்தையே உய்விக்கும் ஆற்றலை அது பெற்றிருந்தாலும், எந்த உள்ளம் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறோமோ, அந்த உள்ளத்திற்கு உரிமை படைத்தவர்களை நம்மீது நம்பிக்கை கொள்ளும் நிலையை முதலில் உண்டுபண்ண வேண்டும்.

## சக்திமிக்க ஒரு தத்துவம்

❖ பதவி உயர்வது, தாழ்வது, வேலை கிடைப்பது, கிடைக்காமல் போவது இவை போன்ற எந்த வகையில் மனிதர்கள் உயர்த்தப்பட்ட நிலையில் இருந்தாலும் தாழ்த்தப்பட்ட நிலையிலிருந்தாலும் அத்தனை பேர் உடலிலும் யாரும் காணமுடியாத மனிதனை முழுக்க முழுக்க ஆட்டிப் படைக்கும் சக்தி பெற்ற 'மனம்' என்ற ஒன்று இருக்கிறது. அதற்கு இவற்றைப் பற்றியெல்லாம் கவலையே இல்லை! அறிவுத்தெறிவின்படி, அந்தந்த நாட்டுப் பண்புக்கேற்றவாறு அந்த மனம் ஒரு நியாய வழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறது. ஒரு தனி மனிதனின் உள்ளத்தில் தோன்றுகிற ஒரு கேள்விக்குறிக்குக் கிடைக்கின்ற பதில், அவனை அல்லது அவனது குடும்பத்தை, குறிப்பாகச் சொல்லப்போனால் அவன் பிறந்த நாட்டை, மேலும் சொல்லப்போனால் உலகத்தையேகூட, ஆட்டிப் படைக்கும் சக்திமிக்க ஒரு தத்துவமாகப் பெரும்பாலான மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதுவே மக்களின் இலட்சியமாகக்கூட மாறிவிடுகிறது. மனிதன் தத்துவத்தை உருவாக்குகிறானா! அல்லது, தத்துவம் மனிதனை உருவாக்குகிறதா ?

## அகிம்சை

❖ இந்திய துணைக்கண்டம் சுதந்திரம் பெற வேண்டுமென்ற தமது இலட்சியத்தை நிறைவேற்ற மகாத்மா மேற்கொண்ட தத்துவம், 'அகிம்சை' அதாவது வன்முறையற்ற நிலை. இந்த அகிம்சைத் தத்துவத்தை மகாத்மா

உருவாக்கினாரா! அல்லது இந்தத் தத்துவம் மகாத்மாவை உருவாக்கிற்றா? ஏனெனில், எந்த ‘அகிம்சை’ என்ற இலட்சியத்தைக் கொண்டு இந்தியத் துணைக் கண்டத்திற்கு விடுதலையைப் பெற்றுத் தந்தாரோ, அவரை, ஒரு தனி மனிதனின் வன்முறைச் செயல் உலகத்தைவிட்டே மறைந்துவிடச் செய்துவிட்டது.

## சிறு வெற்றி

❖ மனிதன் எவ்வளவு விரைவில் தான் பட்ட மிகப்பெரிய கஷ்டங்களைக் கூடச் சிறு வெற்றியில் மறந்து விடுகிறான்!

## பெரியவர்களை இழிவுபடுத்திவிடக் கூடாது

❖ பெரியவர்களை எக்காரணத்தைக்கொண்டும் நாம் இழிவுபடுத்திவிடக் கூடாது கோபம் பொங்கிவரத்தக்க செயலையே ஒருவர் செய்துவிட்டாலும், அவரைக் கண்டித்தே ஆகவேண்டும் என்று நம்முடைய சூழ்நிலை எடுத்துரைத்தாலும் அதற்காக அவரை இழிவுபடுத்தி விடக்கூடாது. ஏனென்றால் ஒரு நேரத்தில் நமக்கு நியாயமெனத் தோன்றும் முடிவு. இன்னொரு நேரத்தில் நியாயத்திற்குப் புறம்பானதென்று நமது மனச்சாட்சியே எடுத்துக்காட்டினால் நாம் செய்த பிழையை எப்படித் திருத்திக் கொள்வோம்?

## மன்னிப்பு

❖ மன்னிப்புப் பெறத்துடித்து அதை வழங்க வேண்டியவரைத் தேடிச் சென்றால், இன்று நான் தேடுகின்றேனே, உருவிலே இல்லாத வாத்தியாரை, அதுபோல அவர்கள் இல்லாதவர்களாகிவிட்டால், யாரிடம் போய் மன்னிப்புக் கோருவது? எப்படி மன்னிப்பைப் பெறுவது? அந்த மன்னிப்பைப் பெறாமற் போனால் நமக்கு ஆறுதல் கிடைக்காதே! ஒருநிலை கொள்ளாமல் அலை மோதுமே நம்முடைய மனம்! வாழ்நாள் முழுவதும் நம்மை அரித்துக் கொண்டேயிருக்குமே அந்தக் கறை!

## அறிவுரை

❖ பெரியவர்கள் நமக்குச் சொல்லும் அறிவுரைகளின் தகுதியை அறியாமல் அவர்களைப் பற்றி எப்படிப்பட்ட தவறான முடிவுக்கு வந்து அலட்சியப்படுத்துகிறோம். முட்டாளாக்குகின்றோம்? ஆனால், நஷ்டம் அவர்களுக்கு அல்ல! நமக்குத்தான் என்பது பின்னால்தான் தெரிகிறது.

## நன்மக்களாக வாழ்வதுதான் வெற்றி

❖ பிறருடைய பலவீனத்தைப் பயன்படுத்தி வெற்றி பெறுவதில் யாருக்கும் எந்த இலாபமும் இல்லை. அவரவர் தங்கள் குறைகளைத் திருத்திக் கொள்ளும் பண்பைப் பெற்றுத் தமக்கு ஏற்படும் தோல்வியை வெற்றியாக மாற்றி நன் மக்களாக வாழ்வதுதான் அவர்களுக்கும் வெற்றி. அவர்களைத் திருத்த முயன்றவர்களுக்கும் வெற்றி. இவ்வாறின்றி, நண்பனின் பலத்தைக்கண்டு, அச்சத்தால் நண்பனின் கண்களை ஏமாற்றும் வகையில் தற்காலிகமாகத் தவறு செய்யாமல் ஒத்தி வைத்து ? 'காலம் வரட்டும், எனது வழக்கத்தை மீண்டும் தொடருகிறேன்' என்று மனத்தில் முடிவெடுத்து வெளிவேஷம் போடும் நிலையை உருவாக்குவதால் யாருக்கும் வெற்றி ஏற்பட்டதாகக் கொள்ளவே முடியாது.

## தன்னைத்தானே அறிவது

❖ பணம், பதவி இவை போன்றவைதானே வேடங்களை விரும்புவதும், தனக்குப் பொருந்தாது என்று அறிந்தும் அதை விரும்பினால் அதற்குப் பேராசை என்ற பெயர் சூட்டப்படுவது பொருத்தமானதுதானே ? இதிலிருந்து விடுபடத்தான் 'தன்னைத் தானே அறிவது' என்பது.

## உண்மைக் கருத்து

❖ ஒரு சிலர்தான் நமது விரோதம் ஏற்பட்டாலும் கவலைப்படாது அவர்கள் உள்ளத்தில் வைத்திருக்கும் கருத்தினைத் தெளிவாகத் தெரிவிப்பவர்கள். ஆனால் பலர் நம்மால் அவர்கட்கு ஏற்படும் நன்மை தீமைகளின், இலாப நஷ்டங்களின் கணக்குப் பார்த்து நமக்குத் திருப்தி தரும் வகையில் தங்களது உண்மைக் கருத்தினை மாற்றி, வேறு ஒன்றைச் சொல்லி நம்மை மேலும் தவறான பாதைக்குத் திசை திருப்பி விட்டு, அவர்கள் நலனைப் பாதுகாத்து நம்மை நட்டாற்றில் இறக்கிவிட்டுவிடுவார்கள்.

## எதையும் தாங்கிக்கொள்ளும் துணிவு

❖ "நாம் எதையெதை அடைய ஆசைப்படுகிறோமோ, அவை அனைத்தும் நமக்குக் கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்கக் கூடாது. நீயோ சிறுவயதுடையவன். இன்னும் எத்தனையோ ஆண்டுகள் வாழ்ந்து பெயர் பெறவும், நீண்ட பணியாற்றவும் உனக்கு வாய்ப்பிருக்கிறது. மனத்தையே உலுக்கக் கூடிய எப்படிப்பட்ட சேதி வந்தாலும், தாங்கிக்கொண்டு துணிந்து

நல்ல வாய்ப்புக்காகக் காத்திருக்க வேண்டும். அதிர்ச்சியடைந்து தளர்ந்து விடக்கூடாது'' என்றெல்லாம் சொல்வார்கள்.

## இலட்சியப் பயணம்

❖ நாங்கள் விரும்பாத ஒரு சூழ்நிலையில் வாழ வேண்டியிருந்தாலும், வெறுத்து ஒதுக்க வேண்டிய சிலரோடு நெருங்கி உறவாட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டாலும் அவற்றையெல்லாம் சகித்துக் கொண்டு, எங்களுடைய இலட்சியப் பயணத்தை, (பேராசை என்று யாராவது சொன்னால்கூட நான் கவலைப்படவில்லை. அப்படியே சொல்லிக்கொண்டு அவர்கள் திருப்திப்படட்டும்) எல்லையே காண முடியாத ஒன்றின் எல்லைக் கோட்டை நோக்கித் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

## காலத்தை வெல்லும் திறன்

❖ அறிவு ஒருவனுக்கு நல்ல முறையில் அமைந்துவிடுமானால், அமைக்கப்பட்டுவிடுமானால் சில நேரங்களில் அவன் காலத்தையும் எதிர்த்து வென்றுவிடும் திறம் பெற்றவனாகி விடுவான் என்று சொல்கிறார்கள்.

## கருத்துப் புதையல்களைக் காப்பாற்றுவோம்

❖ நல்ல எழுத்தோவியங்கள், சிற்பங்கள், சித்திரங்கள் முதலியவை எல்லாம் அழிந்து போகாமல் காப்பாற்றப்படுமானால், காலத்தினால் ஏற்படும் கருத்து மாற்றம் எப்படி உருவானாலும், நீண்ட நெடுங்காலம் தம் கருத்தை, தம் முடிவை, மேலே கூறிய அந்தக் கருத்துப் புதையல்கள் தலைநிமிர்ந்து சொல்லிக்கொண்டேயிருக்கும். காலத்தோடு மாறுபட்டவனாக இருந்துவிட்டாலும் கூட அவை தம் முடிவைச் சொல்லத் தவறுவதில்லை.

## காலத்தின் சக்கர வட்டம்

❖ கால ஓட்டத்தின் வேகத்தில் தன்னை இணைத்துக்கொண்டு, எப்படியெல்லாம் அது அலைக்கழிக்கிறதோ அதற்கேற்ப தன்னை ஆட்படுத்திக்கொண்டு, கடலிலிருந்து எழும்பி, அங்குமிங்கும் மோதிச் சில நேரங்களில் பல ஊர்களைக்கூட அழித்து, மீண்டும் கடலிலேயே ஐக்கியமாகிவிடுகின்ற அலைகளைப் போல, தானும் காலத்தின் சக்கர வட்டத்தின் சுழற்சியில் சிக்கித் தன்னுடைய அறிவை, திறமையை மோதவிட்டு மனித உயிரும் எங்கோ மறைந்து விடுகிறது.

## பெரியோர் மனம் நோகப் பேசாதே!

❖ "நீங்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் பெரியவர்களின் மனம் நோகும்படி எதுவும் பேசவோ, செய்யவோ கூடாது. நீங்கள் குற்றம் ஏதும் செய்யாதிருப்பினும் குற்றம் செய்ததாகச் சொல்லப்படும்போது, நிரபராதி நீங்கள் என்பதை நிரூபிக்க மரியாதையுடன் முயல வேண்டுமே தவிர, ஆத்திரமோ அலட்சியமோ காட்டாதீர்கள்!"

## "பாவம் இவர்கள்!"

❖ குற்றத்தைக் கண்டு குறைகளைத் திருத்தும் நல்லவர்களை, யார் நன்றாக முன்னுக்கு வர வேண்டும் என்று விரும்புகிறார்களோ, யாரைத் தமது அன்புக்குப் பாத்திரமானவர்கள் என்று கருதுகிறார்களோ, அவர்களைத் திருத்துவதற்கு முயற்சி செய்யும் போது கடிந்து கொள்வதைக் கேட்டு, 'இவர் யோசனையற்றவர், முன் கோபி, யாரையாவது குறை சொல்வதே இவர் வேலை' என்று சொன்னால், 'பாவம் இவர்கள்!' என்றுதானே நினைக்க வேண்டும்.

## மொழிப்பற்றே வளர்ச்சிக்கு அடிப்படை

❖ பல ஆண்டுகளுக்கு முன்பு கண்ட சீனாக்காரர்களின் மொழிப்பற்றையும், இன உணர்ச்சியையும் கவனித்தால், இன்றைய மக்கள் சீனாவின் வளர்ச்சிக்குக் காரணத்தைச் சுலபமாக அறியமுடியும். நம்மால் அதைப்புரிந்து கொள்ளவும் கூடும்.

## வாழ்வு

❖ ஒரு நாடு வளம்பெற வாழ்வது என்பது, மொழி, இனப்பற்றுகளில் அது வளர்ந்து செழிப்புற்றால்தான் நிறைவேறும் என்றும், அப்போதுதான் 'வாழ்வு' என்ற வார்த்தை அங்கே பொருள் பொதிந்ததாக விளங்கும்.

## தமிழுக்கு ஏற்பட்ட அவல நிலை

❖ தமிழில் செய்தி ஒலி பரப்பும் தமிழர்களே, தமிழர்களுக்குச் சம்பந்தம் இல்லாத சக வருஷத்தையும், ஆகாசவாணியையும் ஒலிபரப்பும் பரிதாபகரமான அவல நிலை தமிழகத்தில் ஏற்பட்டதே! தமிழர் வாழும் மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' என்ற பெயர் சூட்டி, அந்தப் பெயரால் அழைப்பதற்குத்தான் என்னென்ன குறுக்கீடுகள் எதிர்ப்பட்டன!

## வயிற்றுப் பற்றிடம் அடமானம் வைக்கப்பட்டால்

❖ நாடு, மொழி, இனப்பற்றுகள் வயிற்றுப்பற்றினிடம் அடமானம் வைக்கப்படும் இழிநிலையில் நாடு இருக்குமாயின், எத்தனை கட்சிகள் எத்தனை பெரியவர்கள், எத்தனை தியாகிகள் தோன்றியும் பயனிருக்க முடியாது.

## சந்தேகம்

❖ சந்தேகம் நாளடைவில் வெறுப்பாகவும், வெறுப்பு விரோத உணர்ச்சியாகவும், விரோதம் எதிர்ப்புச் செயல்களாகவும், எதிர்ப்புச் செயல்கள் வெற்றி பெறாத வேளையில் வெறியாட்டமாகவும் உருவெடுக்க நேர்கின்றது.

## மனிதனின் ஆசை

❖ "ஒரு மனிதன் வாழ்வில் காணும் ஆசைக் கனவுகள் நியாய அடிப்படையில் இருக்குமாயின், அவை ஒரு காலத்தில் நடைபெற்றே தீருகின்றன."

## தாயின் உபதேசங்கள்

❖ என்னைப் பொறுத்தவரையில் நான் செய்யும் காரியங்களுக்கு என் அருமைத் தாயார் அவர்களே காரணம் என்பது மட்டும் உண்மை. அவர்கள் என் உள்ளத்தில் பதியவைத்த பல உபதேசங்கள் இப்போதும் எனக்கு உதவியாக இருக்கின்றன என்றால் மிகையே அல்ல.

## உடலா—மனமா

❖ எந்த மனிதனும் தன் உள்ளத்தில் ஏற்படுத்திக்கொள்ளுகின்ற ஆசை நிராசையாக மாறும்போதே, தேவையற்ற, தகுதியற்ற ஒன்றினைப் பற்றிக்கொண்டு நின்றுவிட்டு, அது தனக்கு வேண்டாததும், தரமற்றதும் தகுதியற்றதும் ஆகும் என்றதும் எங்கோ வெகு தூரத்திற்கு விலகி ஓடிவிடுவதையும் காண்கிறோமே... இதற்கெல்லாம் காரணம் யார் ?எது ? மனித உடலா ? மனமா ?

## கற்பனை

❖ எனக்குத் தெரிந்தவரை மனம்தான் எதையும் விரும்புகிறது; வெறுத்து ஒதுக்குகிறது. உடல், உடலில் ஏற்படும் சில உணர்ச்சிகளை எதை எதையோ தேவைப்படுகிறது என்று முடிவு கட்டி, அதைப் பூர்த்தி செய்து கொள்ளச் செயல்படுவதாகச் சொல்லுவதோ அல்லது தான் செய்துவிட்ட

செய்கின்ற செயல்களுக்குக் காரணம் இருந்தாலும் இல்லாவிடினும் கற்பனை செய்தாவது காரணத்தைச் சொல்லுவது, ஏறத்தாழ மனித சமுதாயத்தைச் சேர்ந்த அனைவரிடத்தும் உள்ளதென்றுதான் பெரியவர்கள் சொல்லுகின்றார்கள்.

### நல்ல மனிதனாக வாழுங்கள்

❖ ஒரு மனிதன் சந்தர்ப்பவசத்தால் திருடனாகி, அதனால் தான் அடையும் அவமானம், தலைக்குனிவு இவற்றை உணர்ந்து தனது மகனாவது நல்ல மனிதனாக வாழ வேண்டுமென்று விரும்புவானாயின் அதற்கேற்ப தன் மகனைப் பள்ளியில் படிக்க வைத்துச் சமூகத்தில் நல்லதொரு தொழில் செய்து வாழும் தகுதி பெற்றவனாக ஆக்கிவிடுவான். ஆனால், அதற்கு மாறாக அந்தத் திருடன் குடிகாரனாக இருந்து, குணநலமற்றவனாகவும் இருந்துவிட்டால் தனது மகனைத் தன்னைவிடக் கொடிய கொள்ளைக்காரனாக, தானே உருவாக்குவான்!

### முதல் எதிரிகள்

❖ நம்மோடிருப்பவர்கள் நண்பன், அன்பன், உறவினன் இப்படி எந்த பெயருக்கு உரிமையுள்ளவராக இருப்பினும் சரி, தேசத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தமது நலத்திற்குப் பயன்படுத்துவாராயின் அவர்கள்தான் நமது முதல் எதிரிகள்.

### பள்ளிச் சிறுவரைப் படைவீரர் ஆக்குவோம்!

❖ இதை இந்த விநாடியிலிருந்தே கடைபிடித்தாக வேண்டும். பள்ளிச் சிறுவர்களை இப்போதிருந்தே இராணுவ வீரர்களைப் போல் தேசத்தைக் காக்கும் படைவீரர்களாக்கத் திட்டம் போட்டு, அவசர நிலையில், செயலில் இறங்கியாக வேண்டும்.

### சுதந்திரத்தை காப்பது கடமை

❖ சுதந்திரத்தைப் பெற்று விடுவது பெரிதல்ல! அதைக் காப்பதே மிகப்பெரிய தொண்டாகும்; கடமையாகும்

❖ அஹிம்சை வழியில் பெற்ற நமது சுதந்திரத்தை நமது உயிரைக் கொடுத்து காப்போம். எந்த நட்டம் வரினும் எத்தனை ஏமாற்றங்கள் நம்மைச்

சூழ்ந்தாலும் நாம் அஞ்சாமல், பேராசைக்கு ஆளாகாமல், நமது நாட்டின் சுதந்திரத்தைக் காப்போம்.

❖ சாதி, மதம், மொழி, கொடி எந்த பிரிவும் நம்மைத் தொட முடியாத அளவுக்கு உயர்ந்து நின்று நமது சுதந்திரத்தைக் காப்போம்.

### பிறரை கேலி செய்ய மனம் துணியுமா ?

❖ பார்வை தெரியும்போது கண்ணின் பெருமையும் அதன் உபயோகத்தின் வலிமையும் மனிதனுக்குத் தெரிவதில்லை. ஒவ்வோர் இளைஞனும் தனது வாலிபம் நிரந்தரமானது, நிச்சயமானது என்றுதான் அந்தந்த நேரங்களில் நம்புகிறான். அப்படி இல்லையானால் பிறரைக் கேலி செய்ய எப்படித் துணிவான் ?

### பிரித்தால் பயனில்லை

❖ கண்ணியத்துக்கும் கருணைக்கும், கடமைக்கும் உரிமைக்கும், பொறுமைக்கும் பொறுப்புக்கும், எப்போதுமே நெருங்கிய தொடர்பு உண்டு. இவற்றில் எதைப் பிரித்தாலும் இன்னொன்றுக்கு வேலையில்லை.

### பொறுப்பை பொறுமையோடு நிறைவேற்று

❖ பொறுப்பிருக்கலாம்;பொறுமையோடு அதை நிறைவேற்றவில்லையென்றால் செய்கின்ற காரியங்கள் அனைத்துமே 'அவசரக் கோலம் அள்ளித் தெளித்தல்' என்றாகிவிடும்.

### கடமையை நிறைவேற்றாதோர் பயனற்றுப் போவர்

❖ கடமையைச் சரிவர நிறைவேற்றாமல் உரிமையை மட்டும் பெற விரும்புகிறவர்கள், எப்படிப்பட்ட அறிவும், ஆற்றலும் பெற்றிருப்பினும் கடமையை நிறைவேற்றாததால், உருவாக வேண்டிய வெற்றிப் பலன் தோன்றாது போய்விடும். அத்தகைய நிலையில், கடமையைச் செய்ததன் விளைவாக நல்லதொரு பலனைக்கண்டு, அதிலே பங்குகொள்ள வேண்டிய உண்மை உரிமை பெற்றிருந்தும் பயனற்றுப் போய், வெறுங்கையை முழம் போடுவது என்பார்களே அதுபோல், ஏதுமற்ற ஒன்றில் உரிமையைக் கேட்கும் நபராக மட்டும் மாறி, யாருக்கும் பலனற்றுப் போவதையும் காண்கிறோம்.

## கண்ணியம்

- நியாயமான கடமை, பொறுப்பு இவற்றை நிறைவேற்றும் ஒருவர், கண்ணியத்தோடு செயல்படுவது இன்றியமையாததாகும்.

- கண்ணியம் கருணையிலிருந்து உருவாகும் ஒரு பண்புள்ள தன்மையாகும். பிறரிடம் இரக்கமும் அனுதாபமும் கொள்ளாதவர் உள்ளத்தில் கருணையை எதிர்பார்க்கவே இயலாது.

## கருணையே அடிப்படை

- கருணை அற்ற உள்ளத்தில் கண்ணியத்திற்கு இடமில்லை. கண்ணியமற்ற ஒருவர் பொறுமையுள்ளவராக மாட்டார். பொறுமையற்றவர்கள் பொறுப்பை ஏற்றாலும், வெற்றியோடு நிறைவேற்றவோ, அதில் சரியானதொரு வெற்றியைக் காணவோ முடியாது.

## நமது பாதை

- நாம் நமது பாதையில் ஒழுங்காகச் செல்வோம். நடப்பது நடக்கட்டும் நமது மனதிற்குச் சரி என்று பட்டதை நமது அறிவிற்கும் அனுபவத்திற்கும் வலுவிற்கும் வசதிக்கும் ஏற்ப ஏற்று நடைபோடுவோம்.

## புத்திசாலிகள்

- ஒரு மனிதனின் அறிவு ஏற்றுக்கொள்ளும் பிரச்சினை, இன்னொருவருடைய அறிவிற்கு மிகப் பாரமாகத் தோன்றலாம். ஆனால் அதற்காக அந்த மனிதனுக்கு அறிவே இல்லையென்று எப்படிக் கூற இயலும்? நண்பர்கள் நமது நட்பினர்களைக் கேலி செய்து மகிழ்வுறுவது அத்தனை பெரிய குற்றமே அல்ல. நாம் மகிழ வேண்டும் என்றோ, பிறர் நம்மைப் புத்திசாலிகள் அல்லது திறமைசாலிகள் என்று கருத வேண்டும் என்றோ நாம் விரும்புவதிலும் தவறில்லை.

## தண்ணீரும் நீச்சலும்

- நீந்தக் கற்றுக் கொள்ள வேண்டுமாயின் தண்ணீரில் இறங்கியாக வேண்டும். தண்ணீரில் இறங்குவதற்கு நீந்தத் தெரிய வேண்டும்.

## பகுத்துப் பார்க்கும் நல்லறிவு

❖ எண்ண, எழுத, பேச, உரிமை இருக்கிறது என்பதற்காக எதையும் எண்ணவோ, எழுதவோ, பேசவோ உரிமை வழங்கிவிட முடியுமா? பகுத்துப் பார்க்கும் நல்லறிவின் அஸ்திவாரத்திலே அமைக்கப்படுவதுதான் மக்களாட்சி.

## ஜனநாயகம்

❖ தனது கருத்தினைப் பிறர் ஏற்றுக்கொள்ளத் தனது அறிவைப் பயன்படுத்தி, அதன் வாயிலாகப் பிறரின் கருத்தைத் தனது கருத்துக்குச் சாதகமாக்கித் தன்னைப் பிறரது பிரதிநிதி ஆக்கிக் கொண்டு, தங்களது கருத்தை நிறைவேற்றுவதுதான் ஜனநாயகம்.

## நம்பிக்கை

❖ நான் ஒரு நல்லவன், தவறுகளைச் செய்யப் பயப்படுபவன் அல்லது தவறுகளைச் செய்யாதவன்; இப்படியும் நம்பிக்கை மகாத்மா காங்கிரஸின் உறுப்பினருக்குத் தங்களைப் பற்றியும், பொதுமக்களுக்கு மகாத்மாவின் தொண்டர்கள் மீதும் இருந்தது என்பது நூற்றுக்கு நூறு உண்மையாகும்.

## மகாத்மாவின் தொண்டன்

❖ மகாத்மாவின் உண்மைத் தொண்டன் எந்த நேரத்திலும் வன்முறை உணர்ச்சிக்குத் தன்னைப் பலியாக்கிக் கொள்ளத் தன்னை அனுமதித்ததே இல்லை. அப்படி ஒரு விபரீத நிலைக்கு மகாத்மாவின் அந்தத் தொண்டன் வலுக்கட்டாயமாகத் தள்ளப்படுவானாயின், உடனே அவன் அந்த மகாத்மாவின் தொண்டன் மகாத்மா காங்கிரஸிலிருந்து ராஜினாமா செய்து விட்டு வெளிவந்து, அதன் பின்னரேதான் வன்முறையில் ஈடுபடுவானே தவிர மகாத்மாவின் காங்கிரஸில் உறுப்பினராயிருந்து, மகாத்மாவின் தொண்டனாக அஹிம்சைவாதியாகத் தன்னைக் குறிப்பிட்டுக் கொண்டேயிருந்து, மகாத்மாவின் கொள்கைக்கு நேர் முரணான எந்தத் தவறுகளையும் செய்யமாட்டான் என்பது வரலாறு தந்திருக்கும் விளக்கம் ஆகும். நான் கதர் உடையை உடுத்திக் கொள்ளும்போதே எனது உள்ளத்தில் பெரியதொரு பெருமை தோன்றும்.

## நான் ஒரு இலட்சிய மனிதன்

❖ நான் ஒரு இலட்சிய மனிதன்; உள்ளத்தில் தவறான எண்ணங்களுக்கு இடம் கொடுக்காத உறுதி பூண்டவன். கதரின் தூய வெண்மையைப்போல் உள்ளமும் துல்லியமாக, தூய்மையாக இருக்கிறது.

## கதர் ஆடை

❖ கதர் உடுத்துவதே துணிவுமிக்கது. அதிலும் அதை உடுத்தி, ஆங்கிலேயரை, போலீஸ் அதிகாரியைச் சந்திப்பதே மிகப்பெரும் துணிச்சலான செயல் என்றுகூடக் கருதினார்கள்.

❖ ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சியை எதிர்த்துப் போராடுகின்ற தியாக உள்ளத்தைக் கொண்டவர்கள் மட்டுமே அணிந்து கொள்ளக் கூடிய ஒன்று கதர், என்றே எல்லோரும் நம்பினர்; மதித்தனர், போற்றினர்.

## நல் விளக்கம்

❖ ஒரு மனிதனுடைய வேலை நேரம் குறைவாகவும் பயன் அதிகமாகவும் இருக்க வேண்டும் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் நியாயத் தீர்ப்பாகும். அன்று எனக்கு இந்த இராட்டையில் நூல் நூற்கும் அனுபவம் எனது தொழிலுக்கும் வாழ்க்கைக்கும் சேர்த்துத் தந்த நல் விளக்கமாகவே இருந்தது.

## தன்னம்பிக்கை

❖ தன்னம்பிக்கை என்பது பலரைப் பல விதத்தில் அலைக்கழிக்கவும். ஆனந்தத்தில் ஆழ்த்தவும் செய்வதோடு, அவதிகளைச் சந்திக்கும்போது எதிர் நீச்சல் போடத் தூண்டுவதும் தவறான கருத்தைக் கொண்டு விட்டால் அகந்தைக்கு ஆளாக்கி விடுவதுமான ஒன்றாகும்.

## அரசியல் இலாபம் பெற்றவர்கள்

❖ அரசியலில் நான் எந்த இலாபமும் பெறவில்லை என்பதோடு என்னைப் பயன்படுத்தி இலாபம் பெற்றவர்களே அநேகர் என்பதையும் அப்படிப்பட்டவர்கள் எத்தகைய மனசுத்தியோடு என்னிடம் பழகினார்கள் என்பதையும் தமிழக மக்களுக்கு விளக்கிவிட வேண்டிய அவசியம் வந்துவிட்டதென்று கருதுகிறேன்.

## எனது நீங்காத ஆசை

❖ நான் விரும்புவதை என் தொழிலில் செய்து காட்ட வேண்டும் என்பது எனது நீங்காத ஆசையாகும். நமது பண்பாட்டை கலாசாரத்தின் தனித்தன்மையை பிற மதத்தினரும் பிற நாட்டினரும் உணர்ந்து மதிக்கும் வகையில் சினிமாக் கலையின் மூலமாக தொண்டு செய்ய வேண்டும் என்பதும், அதோடு இந்தத் துறையில் நமக்கு வசதியும் வாய்ப்பும் இருந்தால் பிறருக்குச் சமமாகவாவது நமது கலைத்துறையை உருவாக்கிக் காட்ட முடியும் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதுமாகும்.

## நான் வணங்கும் தெய்வங்கள்

❖ என் பூஜை அறையில் என் தாய், தந்தை, மகாத்மா காந்தியடிகள், என் வாழ்க்கைத் துணைவியின் தாய் தந்தையின் படங்கள் இருக்கின்றன. (அதோடு முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்று உண்டு) இவர்கள் தாம் நான் வணங்கும் தெய்வங்கள்.

## மனநிம்மதி

❖ குறைந்த வருமானத்தில் இருந்தபோது எனக்கு கிடைத்த மனநிம்மதி இப்போது எனக்கு இல்லை. என்னிடம் உதவி பெறாத நிலையில் என்னை அப்போது உள்ளன்போடு இப்போது நேசிப்பதில்லை. உண்மையாக சொல்கிறேன். என்னை உளமார நேசிக்கும் உண்மையான நண்பர்கள் மிகக்குறைவு. இது எனக்கே தெரியும். இப்படிப்பட்ட நிலையில், சூழ்நிலையில் இருக்கும் என்னைப் பார்த்து என் தாயார் அனுதாபப்படாமல், சந்தோஷப்பட்டுக்கொண்டா இருப்பார் ?

## சேமிப்பு

❖ சேமித்து வைப்பதில் இரண்டு வகை உண்டு. ஒன்று, தனக்கென்று சேமித்து வைப்பது மற்றொன்று, பிறருக்கென்றே சேமித்து வைப்பது. என்னை பொருத்த வரை எதையும் நான் சேர்த்து வைத்துக்கொள்ள விரும்பவில்லை.

## ஓய்வு

❖ என் உடலில் உழைக்கும் சக்தி இருக்கும் வரையில் திரைப்படத் தொழிலிலிருந்து நான் ஓய்வுபெறுவதாக இல்லை.

## தியாகம்

❖ மகாத்மா சொல்லியிருக்கிறார் வீரம் இல்லாதவன் தியாகம் செய்யமுடியாதென்று. கோழைத்தனத்திலிருந்து உருவாகும் செயல் அல்ல. அப்படிப்பட்ட செயலுக்கு தியாகம் என்ற பெயர் ஒத்து வராது. வீரம் இருப்பவன் செய்யும் செயல்தான் தியாகம் என்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. கையாலாகாதவன் செய்வது கோழைத்தனம். கொள்கைக்காக சாகிறவன் வீரன். முன்னவன் பயத்தில் சாகின்றான். பின்னவன் சாவைச் சாகடிக்கிறான்.

## கலையின் மூலம் சேவை

❖ என்னைப் பொறுத்தவரை நல்ல ஒரு அரசியல்வாதிக்கு கலையின் மூலமாக மக்களுக்கு சேவை செய்வதைவிட வேறு ஒரு வழிவகை அவர்களுக்கு இருக்காது என்பதை நான் திடமாக நம்புகிறேன்.

## கலைத்தொழில்

❖ இந்த இரண்டு விதமான அபிப்பிராயங்கள் குறித்து எனக்கு எந்த விதமான கருத்தும் கிடையாது. நான் கலைப் பணிபுரிகின்றேன். தொழிலுக்காக அரசியலில் இருக்கிறேன். என் கொள்கைக்காக என் கொள்கையை கூடுமானவரை பிறர் மனம் புண்படாத வகையில் கலையில் புகுத்தி தொழில் நடத்தி வருகிறேன்.

## மக்களின் முடிவு

❖ கலைஞர்களுக்கு உச்சநிலை, தாழ்ந்தநிலை என்பதெல்லாம் மக்களால் தரப்படும் ஒரு மயக்க நிலை. அவ்வளவுதான். கலைஞனைப் பொறுத்தவரை அவனுக்கு வீழ்ச்சி கிடையாது. சூழ்நிலை அவனை உயர்த்தும், தாழ்த்தும். அது மக்களின் மனதில் தோன்றும் முடிவு.

## தாய் மொழி

❖ ஒருவன் அவன் பிறந்த நாட்டு மொழியைவிட, மற்றொரு நாட்டின் மீது விருப்பமாயிருக்கிறான். அந்த மற்றொரு நாட்டின் மொழி அவன் தாய்மொழியாயிருக்கிறது. இதனால் அவன் பிறந்த நாட்டுக்கு துரோகம் செய்கிறான் என்று சொல்வது சரியா ?

- பிறந்த நாட்டு மொழியைப் பேணுவதால் தாய்மொழியை அலட்சியம் செய்வதாகாது. தாய்மொழியைப் போற்றுவதால் பிறந்த நாட்டு மொழிக்குத் துரோகம் செய்வதாகாது.

## நாடு–மொழி–இனம் போற்ற வேண்டும்

- நாடு, மொழி, இனம், பண்பாடு இவைகளை வளர்க்கும், போற்றும் வகையில் யார் எழுதுகிறார்களோ அவர்களுடைய கதை உரையாடல், பாடல்கள் பிடிக்கும்.

## சினிமாவும் காஃபியும்

- சினிமாப் படங்களையே பார்ப்பதில்லை என்பது அவ்வளவு சரியான முடிவாக எனக்கு படவில்லை. ஏனெனில், பாலும், காபித்தூளும், சர்க்கரையும், கலந்ததுதான் காபி. ஆனால், சர்க்கரை அளவோடு இட்ட பாலைப் பருகுவது உடலுக்கு நல்லது என்றும் காஃபி ஒன்றே உடலுக்கு கெடுதலை விளைவிக்கும் என்றும் பெரியவர்களும், வைத்திய நிபுணர்களும் கூறுகின்றனர். இதுபோன்றதுதான் சினிமா.

## தண்டனைக்குரியவர்கள்

- முதன்முதலாகத் தவறியவர்கள் அனுதாபத்திற்குரியவர்கள். மன்னிக்கப்பட வேண்டியவர்கள். திரும்பத் திரும்பத் தவறு செய்பவர்கள் வெறுக்கத்தக்கவர்கள், தண்டனைக்குரியவர்கள்.

## மனித வாழ்க்கை என்பது இன்ப துன்பக் கலவையாகும்!

- மனித வாழ்க்கை இன்ப துன்பக் கலவையால் அமைக்கப்பட்டது. அவர்களுள் ஒருவனான நடிகனுக்கு மட்டும் விதிவிலக்கா என்ன ?

## கதை அமைப்பின் வகைகள்

- வரலாற்றில் உள்ள பாத்திரங்களை எடுத்து வைத்துக்கொண்டு வரலாற்றில் என்ன சொல்லியிருக்கிறார்களோ அதை அப்படியே படம் எடுத்துக் காண்பிப்பது மற்றும் நாடகமாக அமைப்பது ஒரு வகை.

- இல்லாத ஒரு கதாபாத்திரத்தை ஒரு கதாநாயகன் தானே சிருஷ்டி செய்து, இல்லாதவைகளை அந்தப் பாத்திரத்துக்குச் சொந்தமாக்கி, அதை மையமாக வைத்து கதையமைத்தல், அதேபோல் இருந்த ஒரு பாத்திரத்தை

வைத்துக்கொண்டு இல்லாதவைகளைப் புகுத்தி அந்தப் பாத்திரத்துக்குப் பெருமைத் தேடும் வகையில் சிறப்பாக கதை அமைப்பது.

- இருந்தவரையில் வைத்துக்கொண்டு சொன்னதைப்போல் இல்லாத ஒரு பாத்திரத்தை அங்கே கற்பனை செய்து வைத்து வரலாற்று நிகழ்ச்சிகளை பொருத்தமாக வைத்து கதையமைப்பது என்று பரிதிமாற்கலைஞர் விரிவாகத் தெரிவித்துள்ளார். பாத்திரங்களுக்கு ஏற்ப கதையமைப்பது என்பது மட்டுமல்ல. கதையின் மையக் கருத்துகளை வைத்துக்கொண்டு பாத்திரங்களை உருவாக்கலாம்.

### தமிழகக் கலைஞர்கள் புகழ்பெற வேண்டும்.

- எனக்கு அதிகமாக புகழ் இருக்கிறது என்று சொல்லப்படுவது உண்மையானால் அதைவிட தமிழகக் கலைஞர்கள் புகழ்பெற வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அதைப் பெறுவதற்காக ஒரே ஒரு அடிப்படையை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தமிழகத்தில் கலாசாரத்தைக் காப்பாற்றுவதற்குரிய கதாபாத்திரத்தை நடிக்கின்றவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அப்படித் தேர்ந்தெடுத்தால் அதை சுற்றித்தான் கதை வட்டமிட்டாக வேண்டும் அதற்கு வெளியே யாரும் போய்விடமுடியாது.

### பிடித்த கதாபாத்திரங்கள்

- மக்களின் மனநிலையை அறிந்து அவர்களின் குறைகளை உணர்ந்த அந்த நிலையைச் சீராக்க முற்படுகின்ற பாத்திரங்கள் எனக்குப் பிடிக்கும்!

### மாணவர்களும் நேரடி அரசியலும்

- மாணவர்கள் நேரடியாக அரசியலில் ஈடுபாடு வைத்துக்கொள்ளக்கூடாது என்பது என் கருத்து. இதனை அண்மையில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது தெரிவித்தோம். உங்கள் கடமை நாட்டிற்கு நல்ல அறிஞர்களாக நீங்கள் திகழ வேண்டும். கல்வி கற்றுக்கொள்ளும் இந்தக் காலத்தில் அறிவை வளர்த்துக் கொள்ளவேண்டும். அரசியலில் நீங்கள் அறிவு தேடிக்கொள்ளக்கூடாது என்பது என் கருத்தல்ல. ஆனால், செயல்முறையில் நீங்கள் இறங்கக் கூடாது.

## படவுலகம் ஒரு கூட்டு முயற்சி

❖ மகாத்மா காந்தியடிகள் ஒரு அற்புதமான உண்மையைக் கூறிவிட்டுப் போயிருக்கிறார். கிராம மக்களையும் நகர மக்களையும் பற்றி விளக்கம் தரும்போது, நகர மக்கள் தன் பக்கத்து வீட்டில் இருப்பவனைப் பற்றிக்கூட தெரிந்து கொண்டிருக்க மாட்டான் என்று கூறியிருக்கிறார். படவுலகுக்கு இது முற்றிலும் பொருத்தமாக இருக்கும் படவுலகம் ஒரு கூட்டு முயற்சியால் நடக்கிறது என்பதைப் பலர் அறியாதவர்களாக இருக்கிறார்கள். எனது அனுபவத்தில் கண்ட உண்மையிது.

## உதவி செய்வதாக இருக்கவேண்டும் விமர்சனம்

❖ முதலில் நடிப்பைப் பற்றி விமரிசிக்கும் முன் உங்களை ஒன்று கேட்கிறேன். இந்த நாட்டில் படித்தவர் இன்னின்ன வேலைக்குத் தகுதி வாய்ந்தவரெனப் பட்டம் பெறுகின்றனர். சட்டம் படித்து ஒருவர் வக்கீலாகலாம். வைத்தியம் படித்து ஒருவர் டாக்டராகலாம். ஆனால், எந்தக் கல்லூரியில் படித்து நாங்கள் நடிகராவது ? இதற்கு இந்த நாட்டில் ஏதாவது வசதி செய்யப்பட்டுள்ளதா ? இல்லையே! ஏதோ எங்கள் சுயமுயற்சியைக் கொண்டு, அனுபவத்தைக் கொண்டு நடிக்கிறோம். இதில் குறைகள் இருக்கலாம். இதை அபிவிருத்தி செய்து கொள்ளவே உங்கள் விமர்சனம் எங்களுக்கு உதவி செய்வதாக இருக்க வேண்டும்.

## கருத்தைப் பரப்ப மன்றம் தேவை

❖ கலைஞர்களுக்கென மன்றங்கள் அமைப்பது தேவையானதே ஆகும். கருத்துகளை மக்களிடையே பரப்ப மன்றங்கள் இன்றியமையாதவை. மன்றங்கள் தொடங்கப்பெற்றபோது அவை வேண்டாம் என்று யாரும் கூறவில்லை. ஆனால், இன்று அவை வளர்ந்திருக்கும் முறை கண்டு சிலர் பொறாமைப்படுகின்றனர். தன்னுடைய மகளை பி.ஏ. வரையில் படிக்க வைத்துவிட்டு, அவளுக்கு அறிவு வளர்ந்துவிட்டதே என்று அஞ்சும் தந்தையை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

## பத்திரிக்கையாளர்களுக்கு ஒரு வேண்டுகோள்

❖ பத்திரிகையாளர்களாகிய உங்களுக்கும் ஓர் வேண்டுகோள் எங்களைப் பற்றிய செய்திகளைக் கேட்டவுடன் அப்படியே வெளியிட்டு விடாதீர்கள். எங்களைக் கலந்துகொண்டால் அதன் உண்மையை நீங்கள்

அறியலாம். எந்த நேரத்திலும் நீங்கள் எங்களைக் கண்டு நேரில் உங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளலாம். இதனால் பொதுமக்களுக்கும் உண்மையான செய்தி கிடைக்கும். எங்களைப் பற்றியும் தவறான செய்திகள் பரவாது, நமக்குள்ளும் அபிப்பிராய பேதமின்றி நட்பு அபிவிருத்தியாகும். இதைத்தான் நான் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்!

## புகழுக்குரிய இடத்திலிருந்து கீழே இறங்கும் நேரம்

❖ எந்த ஒரு மனிதனும் தன்னை யாராவது புகழ்கிறார்களா, எதற்காகப் புகழ்கிறார்கள் என்பதை நோட்டம் பார்க்க ஆரம்பித்துவிட்டால் அந்த நேரத்திலேயே அவன் புகழுக்குரிய ஸ்தானத்திலிருந்து கீழே இறங்கி விடுகிறான்.

## உண்மைப் போலக் காட்டுவதே நடிப்பு

❖ நடிப்பால்தான் உண்மைபோல் நிரூபித்துக்காட்ட வேண்டுமே தவிர, உண்மையாகவே கொன்றுவிடக்கூடாது. நஞ்சை விஷம் அருந்தி இறப்பதாக ஒரு பாத்திரம் வரும்போது உண்மையான நஞ்சை உபயோகித்தால், அந்த நடிகனை அப்புறம் பார்க்கவே முடியாது. சண்டைக் காட்சிகளிலும் பயிற்சியோடு நிஜமான உயிர்க்கொலை நேராமல் சண்டையிடுவார்களே தவிர, கொலைக்கு இடம் வைக்க மாட்டார்கள். ஆதலால், நடிப்பின் மூலம் உண்மையை பிரதிபலிக்கச் செய்யும் கலைதான் நாடகம், சினிமா என்பவை.

## தணிக்கைக் குழுவின் அவசியம்

❖ தணிக்கைக் குழுவை எதற்காக வைத்திருக்கிறோம்? மக்கள் பார்த்து வெறுக்கத்தக்கதை, ஒழுக்கத்தைக் குலைக்கக்கூடியதை, பண்புக்குப் பொருந்தாததைக் காட்டக்கூடாது என்பதற்காகவே, தணிக்கைக் குழுவை ஏற்படுத்தியிருக்கிறோம். எனவே, இத்தகைய குழுவை நாம் உருவாக்கி இருப்பதில் தவறு என்ன?

## மறுதணிக்கை செய்வதால் தவறு இல்லை

❖ தவிர, குறிப்பாகச் சொல்லப்போனால் பிராந்திய அடிப்படையில் இயங்கும் தணிக்கைக் குழுக்கள், ஒரு பிராந்தியத்திலிருந்து வரும் படத்தை மீண்டும் தணிக்கை செய்ய வேண்டும் என்று சொல்வேன். குறிப்பாக பம்பாயிலிருந்து

வெளிவரும் படங்கள் சற்று ஆபாசமாகவே இருக்கின்றன. இதை தமிழ்ப்படங்களுடன் ஒப்பிடும்போது, மீண்டும் தணிக்கை செய்தால் என்ன என்றுதான் தோன்றும். எனவே, இப்படியொரு தணிக்கை நடத்தினாலும் தகும்!

## வாழ்க திராவிடம் தந்த மகிழ்ச்சி

❖ பலர்என்னுடையகையெழுத்துகளைவிரும்பிவாங்கிக்கொண்டிருந்தார்கள். 'வாழ்க திராவிடம்' என்று எழுதி என் கையெழுத்தைப் போட்டுக் கொண்டே இருந்தேன். எண்ணிக்கை அதிகமாகவே எனது பெயரை மட்டும் எழுத ஆரம்பித்தேன். அப்போது ஒரு ரசிகர், 'வாழ்க திராவிடம்' என்று போட்டுக் கொடுங்கள் என்று சொன்னார். நான் அதிர்ச்சியும் மகிழ்ச்சியும் கொண்டேன்.

## கலையுலகம் ஒரே குடும்பம்

❖ கலையுலகம் ஒரே குடும்பம்போல் இணைந்து பணியாற்றி, மகோன்னத நிலையை அடைய வேண்டும். இதுவே எனது ஆசை.

## எனது இரு கண்கள்

❖ கலைப்பணியும் பொதுப்பணியும் எனக்கு இரண்டு கண்கள் போன்றவை.

## முடிந்தவரை உதவுகிறேன்

❖ என்னிடம் பெரும் நம்பிக்கை வைத்து உதவி நாடி அநேகர் வந்து கொண்டேயிருக்கிறார்கள். எல்லாரையும் நான் நேரில் பார்ப்பது என்பது முடியாத காரியம். எனவே, என் அலுவலகத்தை சேர்ந்தவர்கள் அத்துறையை கவனித்துக்கொள்கிறார்கள். சிலர் படிப்புக்கு பணம் கேட்டு வருகிறார்கள். உடல் உறுப்புகளை இழந்த சிலர் உழைத்துப் பிழைக்க முடியாமல் உதவிகேட்டு வருகிறார்கள். சிலரோ தொழில் நடத்துவதற்கு முதலீடு கொடுத்து வருகிறார்கள். சிலரோ தொழில் நடத்துவதற்கு முதலீடு கொடுத்து உதவும்படி கேட்கிறார்கள். என்னால் முடிந்தவரையில் உதவி செய்கிறேன். ஒரு தனிப்பட்ட மனிதன் எல்லோரையும் திருப்தி செய்வது என்பது இயலாத காரியம் அல்லவா? ஆகவே ஓரிருவர் ஏமாற்றமடைய நேரிடுகிறது.

## ஏமாற்றி உதவி பெறுவோரை எண்ணினால் வருத்தம் வரும்

❖ அதுவும் தவிர தகுதியற்றவர்களும், ஏமாற்றும் எண்ணத்துடன் வருபவர்களும் சில சமயம் உதவி பெற்று சென்றுவிடுவதால் உண்மையாக கஷ்டப்படுகிறவர்கள்பாதிக்கப்படுகிறார்கள். அதைநினைக்கும்போதுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது.

## நல்ல பாத்திரம்

❖ மக்களுக்காக படம் எடுக்கிறோம். அவற்றில் நல்ல உணர்வுகளை எழுப்பும் பாத்திரம் எதுவானாலும் நல்ல பாத்திரம்தான். அதற்கு தூண்டுகோலாக உள்ள எதுவும் நல்ல பாத்திரமே.

## தமிழ்நாடுதான் அடித்தளம்

❖ நீங்கள் குறிப்பிடும் அளவுக்குப் புகழோடு இருந்தாலும் இல்லாவிட்டாலும் நான் இன்று இருப்பதற்குக் காரணம் தமிழ்நாடு.

## அண்ணா என் தெய்வம்

❖ எழுத்தறிவித்தவன் இறைவனாகும். இந்த நாட்டின் தலையெழுத்தை நிர்ணயித்து வழிவகுத்துத் தருகின்ற தமிழக முதலமைச்சரை (அறிஞர் அண்ணா) தெய்வமென்றால் தகும்.

## ஊக்கமும்–ஆக்கமும் அளிப்பவர்கள்

❖ புகழ்ந்து எழுதுபவர்கள் எனக்கு ஊக்கம் அளிக்கிறார்கள். இகழ்ந்து எழுதுபவர்கள் எனக்கு ஆக்கத்தை அளிக்கிறார்கள்.

## கம்பர்–இளங்கோ–திருவள்ளுவர்

❖ கம்பர் இலக்கிய நயத்துக்காகப் பாராட்டப்படுபவர். இளங்கோ இலக்கிய நயத்தோடு வரலாற்றையும் கொடுத்தவர். திருவள்ளுவர் உலக மக்களின் வாழ்வுக்கே வழி வகுத்தவர்.

## தடைக்கற்களை நீக்கவேண்டும்

❖ முதலாளித்துவம், சுயநலம், பதவிப்பித்து, சாதிவெறி, பணபலம், லஞ்சம் முதலிய தடைக்கற்களை நீக்க வேண்டும்.

## சாகும் வரை கலைத்துறையோடு தொடர்பு கொண்டிருப்பேன்

❖ நான் நடிப்பதை மக்கள் விரும்பாதபோது, எனது அரசியல் சூழ்நிலை அனுமதிக்காதபோது நிச்சயம் ஓய்வு பெறுவேன். ஆயினும் ஏதாவது ஒரு வகையில் கலைத்துறையோடு சாகும் வரை தொடர்பு கொண்டிருக்கவே விருப்பம்.

## உயிர் கொடுத்த தெய்வம்

❖ தாய்: உயிர் கொடுக்கும் தெய்வத்தின் மறுபெயர்.

அன்பு: அந்தத் தெய்வம் உலகிற்கு அளித்துள்ள செல்வம்.

தாய்மை: அந்தத் தெய்வம் உலகத்தை வளர்க்கும் தொட்டில்.

## தாயின் நிழலில் வளருவது பாக்கியம்

❖ மக்கள் தொகையில், தாய் அன்பைப் பெற்று வளர்ந்து, அந்த அன்பிலே ஊறித் திளைத்து உருவாகியுள்ளோர் பெரும்பகுதியினர் என்றாலும், முழுக்க முழுக்க வாழ்நாளின் பெரும்பகுதியில், தாய்மையின் நிழலில் வளர்ந்து வாழ்ந்து வரும் 'பாக்கியம்' சிலருக்குத்தான் கிடைக்கிறது. என்னுடைய வாழ்நாளில், அப்படிப்பட்ட தாயன்பை, பெற்று வளர்த்த அருமைத்தாயின் பிரிவினால் நான் இழந்தபோது, இந்த உலகத்தையே இழந்த நிலையில் நான் தவித்தேன்.

## அன்னையை இழந்தால் மீண்டும் பெற முடியுமா ?

❖ இன்பத்தைப் பிரிந்தால் மறுபடியும் இன்பத்தை அடையலாம். நட்பைப் பிரிந்தால் பிறகு நட்பு கிடைக்கலாம். வாழ்க்கைத் துணைவியைப் பிரிந்தால்கூட வேறொரு வாழ்க்கைத் துணைவியைப் பெறலாம்.. மக்கட் செல்வத்தை இழந்தாலும் மறுபடியும் பெற்றுவிடலாம். ஆனால், அன்னையை, அன்புத் தாயை உலகத்தை வளர்க்கும் தாய்மையைப் பிரிந்துவிட்டால், மறுபடியும் நமக்கு யார் அன்னை ? நினைத்தாலே நெஞ்சம் நடுங்குகிறது.

## விஞ்ஞானயுகமே, பதில் சொல்!

விஞ்ஞான யுகத்தில் மனிதன் எதையெதையோ கண்டு பிடிக்கிறான். வேறொன்றும் வேண்டாம்; எல்லோருக்கும் உயிர் கொடுக்க வேண்டாம். தாய்மையின் உயிரை மட்டும் திருப்பியளிக்கும் முயற்சியில் ஈடுபடக் கூடாதா?

## அரசியல் மேடையும் கலை மேடையும்

❖ அரசியல் மேடை, அரசியலுக்காக உள்ளது. சமூக, பொருளாதாரத்தைப் பாதுகாக்க இயங்கும் ஒரு அமைப்பு அரசியல். கலை மேடை, கலைக்காக உள்ளது. மனித உணர்ச்சிகளை நேர்மையான வகையில் உருவாக்கவும், கட்டுப்படுத்தவும், சோர்வுற்ற மனித உள்ளத்திற்கு அமைதியைக் கொடுக்கவும், மறந்துவிட்ட பண்பினை நினைவுபடுத்தவும் தெரிய வேண்டிய உண்மைகளை உணர்த்தவும், வாழ வேண்டிய முறைகளை வகுத்துக்கொடுக்கவும், வாழ்க்கை நிலையிலுள்ள ஏற்றத்தாழ்வுகளை அகற்றிச் சமத்துவ போதனை செய்யவும் உள்ளது கலை.

## அண்ணாயிசம்

❖ அறிஞர் அண்ணா உயிரோடு இருந்தபோது எப்படி எல்லாம் ஆட்சி நடத்தவேண்டும் என்று விரும்பினாரோ, அதை நடைமுறையில் செயல்படுத்த விரும்புவதுதான் அண்ணாயிசம் அவரது கொள்கைகளை காப்பாற்ற, சாதியற்ற சமதர்ம பகுத்தறிவு சமுதாயத்தை ஜனநாயக வழியில் நிறைவேற்ற உழைப்பதுதான் அண்ணாயிசம் அண்ணாயிசம் கொள்கைகளில் நாங்கள் மிக முக்கியமாக கருதுவது, பொருளாதாரத்தில் தாழ்ந்த எல்லா சமுதாயத்தினரும் எல்லாத் தரப்பினரும் எவ்விதப் பாகுபாடுமின்றி அனைத்தும் பெற்று சமதர்ம சமுதாயத்தின் பலம் பொருந்திய உறுப்புகளாக அமைய வேண்டும் என்பதே.

## பொறுப்புக்கேற்ற தகுதி கொள்க

❖ பொறுப்புகள் கிடைப்பதுகூடப் பெரிதல்ல; அதை ஏற்பவர்கள் பொறுப்புக்கேற்ற தகுதிக்குத் தங்களை ஏற்புடையவர்களாக்கிச் செயல்பட வேண்டும்.

## நம்மை நாமே சோதித்துக் கொள்ள வேண்டும்

❖ எந்த அளவுக்குப் பிறர் நம்மை நல்லெண்ணத்தோடு பாராட்டுகிறார்களோ, வரவேற்கின்றார்களோ அதை அவ்வப்பொழுது தன்னுடைய அறிவால் அளந்து பார்த்து அதற்குத் தகுந்த தகுதி பெற்றவன்தானா நான்! என்று நம்மை நாமே சோதித்துக் கொள்ள வேண்டும்!

## நாமே நீதிபதி ஆகிடக்கூடாது

❖ நம்முடைய செயல்களைப் பிறருடைய தீர்ப்பின் முடிவுக்கு விட்டுவிட வேண்டும். நாமே நீதிபதி ஆகிவிடக்கூடாது.

## எப்படி அமைய வேண்டும் பேச்சு ?

❖ ஒரு கொள்கையில் பரிபூரண நம்பிக்கை வேண்டும். அந்தக் கொள்கை பற்றிய விரிவான, ஆழமான விளக்கங்களை அறிந்திருக்க வேண்டும். எந்த மொழியில் கருத்துகளை வெளியிட விரும்புகின்றோமோ, அந்த மொழியில் பேசும்போது வார்த்தைப் பஞ்சம் இல்லாமல் இருக்க வேண்டும். நமது பேச்சைக் கேட்கின்றவர்கள் அதிசயத்தோடு கவனிக்காமல் அக்கறையோடு கவனிக்கும்படி பேச வேண்டும்.

## கவலை இல்லாவிட்டால் மகிழ்ச்சி ஏது ?

❖ ‘பள்ளம் என்று ஒன்று இல்லாவிட்டால் ‘மேடு’ என்ற ஒரு பேரே இருக்காது. அதுபோல, ‘கவலை’ என்று ஒன்று இல்லாவிட்டால் மகிழ்ச்சி என்று ஒன்று இருக்காது.

## வளர்ச்சியும் தளர்ச்சியும்

❖ வளர்ச்சி, தளர்ச்சி, இவைகளின் அளவுகோல்கள் அவரவர்களுடைய மனத்தின் துணிவையும் பலவீனத்தையும் பொறுத்து உருவாகிறது. ஒருவருக்குத் தளர்ச்சியாக இருப்பது, பிறருக்கு வளர்ச்சியாய்த் தோன்றலாம். நீங்கள் குறிப்பிட்டுள்ள என் நண்பர் ஒரு தலைவராகவா, ஒரு முதல்வராகவா அல்லது தொண்டராகவா இவைகளில் எந்தக் கோணத்திலிருந்து அவருடைய நோக்கு என்னைச் சந்தித்தது என்பது அவரைப் பற்றிய திறனாய்விலல்லவா வெளிப்படும் ?

## தாயை அதிகமாக நேசிக்கிறேன்

❖ ஒரு பெண் தாயாக வேண்டுமென்றால் கணவனைப் பெற்றாக வேண்டும். ஒருவருக்குத் தந்தை என்ற பேர் கிடைக்கும்போதுதான் யாரோ ஒரு பெண்ணுக்குத் தாய் என்பது உரிமையாகிறது. இரண்டரை வயதுப் பருவத்திலிருந்துஎன்னைவளர்த்துக்காப்பாற்றி,உங்கள்கேள்விக்குப்பதில் சொல்லச் செய்தவர் தாயாவார். ஏனெனில் இரண்டரை வயதிலேயே தந்தை காலமாகிவிட்டார். நான் என் தந்தையை மதிக்கத் தவறியதில்லை. போற்றத் தவறியதில்லை. துன்ப, தொல்லைகளுக்கிடையிலும், வேதனையையும் சோதனையையும் எங்களுக்காக எங்கள் நல்வாழ்வுக்காகத் தாங்கிக் கொண்ட என் தாயை அதிகமாக நேசிக்கிறேன் என்றால் அது கூடாதா ?

## இயற்கை எனும் பலம் பொருந்திய எதிரி

❖ ஒரு மனிதன் பிறக்கும்போதே இயற்கை என்னும் எதிரியின் மத்தியிலேதான் பிறக்கிறான். அவனது வளர்ச்சியை அதனால் என்னதான் தடைப்படுத்த முயன்றாலும் முடிவதில்லை. அதே போல் தளர்ச்சி, அயர்ச்சி முதலியவைகளை அவன் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இயற்கை அவன்மீது சுமத்தியே தீருகிறது. இதைவிட பலம் பொருந்திய எதிரி எங்கிருந்து வந்துவிடப்போகிறான் ?

## வாழ்க்கைப் புத்தகத்தின் அங்கங்கள்

❖ சினிமாத் துறை என்பது ஒவ்வொருவருக்கும் பல அங்கங்களைக் கொண்ட அவரவர் வாழ்க்கைப் புத்தகத்தில் ஓரிரு அங்கங்களாகும். அந்த ஓரிரு அங்கங்கள் மட்டுமே, ஒரு சில மேக மூட்டங்களே. நாம் எதிர்பார்ப்போம், நமது பகுதியிலேயே மேகம் இருந்தால் மழை பொழியும் என்று. ஆனால், எங்கிருந்தோ காற்று அடித்துவிட்டால் மேகம் வேறு எங்கேயோ போய் மழை பொழிவதைப் பார்க்கிறோம்.

## திருக்குறள் கருத்துக் கருவூலம்

❖ மார்க்ஸிசம் என்று சொல்லப்படுகின்ற மனித உரிமைகளிலே விளக்கக் கொள்கைகளின் மறுமலர்ச்சியே இன்றைய தினம் பேசப்படுகின்ற சோஷலிசம் ஆகும்! ஆனால், திருக்குறளை எடுத்துப் பார்த்தால்

பெரும்பாலும் அதிலே சொல்லப்பட்டிருக்கின்றன. மனிதப் பண்புகளின் எல்லைக்கோடுகள் அதேவாதத்தினுடைய பகுத்தறிவு சித்தாந்தங்களை விளக்கும் கருத்துக் கருவூலமாக இருக்கும்!

### மனிதனை மனிதனாக்கும் சுயமரியாதை

❖ சுயமரியாதை என்கின்ற கொள்கை உருவானதே மனிதனை மனிதனாக்குவதற்குத்தான்! சுயமரியாதை என்பது மனித சமூகத்துக்கே சொந்தமானதாகும்! அப்படியென்றால் பிறரின் சுய மரியாதைக்காரன் என்று சொல்லிக்கொள்ள முடியும்.

### போலி வாழ்க்கையில் மயங்கிடக் கூடாது

❖ வாழ்வு சிறிது; வளர்கலை பெரிது என்பதுதான் கலையைப் பற்றிய என் கருத்தாகும். கலைஞர்களைப் பற்றி நான் நினைப்பது; உண்மையான வாழ்க்கையோடு ஒன்றிப்போகும் வாய்ப்பினைப் பெற்றிருந்தும், போலி வாழ்க்கையில் மயங்கிவிடும் சுற்றுச்சார்பைப் பெற்றிருப்பவர்கள் தான் பெரும்பாலோர்.

### அண்ணாவின் கொள்கையின் பாதுகாவலர்கள்

❖ அமரர் அண்ணாவின் கொள்கையின் மொத்த உருவமாகிவிட்ட நீங்கள் (தொண்டர்கள்), அதை வாழ வைக்கும் பாதுகாவலர்களாகச் செயல்பட வேண்டும். இதுவே எனது வேண்டுகோள்.

### உழையுங்கள், உழையுங்கள்

❖ தவறு செய்யாத மனிதன் உலகத்தில் கிடையாது. தவறு என்று தெரிந்தபிறகு திருந்த முடியாமல் போன ஒரு மனிதனும்கூட இருக்கக்கூடாது. நீங்கள் மாணவர்கள், அதிலும், வாலிபர்கள்! தவறையும் உணர்ந்திருக்கிறீர்கள். திருந்தி வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற ஆசையும் இருக்கிறது. ஆகவே, உழையுங்கள், உழையுங்கள், உழையுங்கள்.

### ஆசிரியர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

❖ கலைஞன் எப்படிக் காசுக்காக மட்டும்தான் நடிக்கிறோம் என்று எண்ணக்கூடாதோ, அதுபோல் ஓர் ஆசானும் பணத்துக்காக மட்டும்தான் பாடம் கற்றுக்கொடுக்கிறோம் என்றும் நினைக்கக் கூடாது.

## பொறுத்திருத்தல் அவசியம்

- ❖ தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத வகையில் குறைந்த வருவாய் உள்ளவராயிருப்பினும்கூட, உழைக்கும் வலுப்பெற்ற அனைவருக்கும் தொழில், அவர்களின் குடும்பத்திற்கு நியாயமான தேவையைப் பூர்த்தி செய்யும் வருவாய் இவற்றை வழங்கக்கூடிய கால மாறுபாட்டின் வலிவை நம்பி, அந்தச் சக்தி மாற்றத்தை உண்டாக்கும் வரையில் பொறுத்திருக்க வேண்டும் என்பதே இரு கைக்கூப்பிய என் வேண்டுகோள்.

## ஜனநாயகம் என்ற ஆலமரம்

- ❖ தேர்தல் என்ற ஆணிவேரில்தான் ஜனநாயகம் என்ற ஆலமரம் நிற்கிறது. அந்த ஜனநாயக மரத்தின் பலமிக்க விழுதுகள்தான் உள்ளாட்சித் தேர்தல்கள் முதலியன. தேர்தலைப் பற்றி மட்டுமே ஒருவர் சிந்தித்தாலும், அதில் இலாபக் கணக்கெடுக்க விரும்பினாலும் தனக்குப் பதவி மட்டுமே குறிக்கோளாகக் கொண்டாலும் விளைவு நாட்டிற்கு நல்லதே. ஏனெனில் தேர்தல் நடைபெறுவதன் வாயிலான ஜனநாயகம் வலுவுள்ளதாகிறதல்லவா ?

## வவ்வால் மனிதர்கள்

- ❖ தேர்தலின்போது எங்கே போய் ஒட்டிக்கொள்ளலாம் என்று செயல்படுகிறவர்கள் இறுதியில் வவ்வால் இனத்தைப் போல் எங்கும் சேர்த்துக்கொள்ளப்படாமல்தனித்து ஒதுக்கிவிடப்படுவார்கள்.

## நாட்டுக்கும் வீட்டுக்கும் பயன்பட வேண்டும்

- ❖ சினிமாவை விட்டு என்னைப் பிரிக்க முடியாது. கலையை ஏழு வயது முதல் ஏற்றுக்கொண்டவன் நான். இந்தக் கலைத் துறையைவிட்டு என்னை யார் பிரிக்க நினைத்தாலும் பிரித்துவிட முடியாது. சினிமா உலகில் ஆடம்பர வாழ்க்கைக் கூடாது. நம்மை நாமே உணர்ந்துகொண்டு நமது வாழ்க்கையைச் செம்மையாக அமைத்துக்கொள்ளவேண்டும். அப்போதுதான் நாட்டுக்கும் வீட்டுக்கும் பயன்படும் விதமாக கலையுலகில் உள்ளவர்கள் விளங்கமுடியும்.

## இலட்சிய உணர்வோடு பேசித் தீர்க்க வேண்டிய பிரச்சினை

❖ காவிரி பிரச்சினை தீர்வு என்பதே ஆயிரங்காலத்து பயிர். நதி நீர்ப் பிரச்சினை நாட்டு ஒற்றுமையையும் மாநிலங்களின் எதிர்கால வாழ்க்கையையும் இணைக்க பயன்படுகின்றன. இது ஒரு பெரும் பிரச்சினை. சில சமயம் எளிதாக கைகூடிவிடும். சில சமயம் கடினமாகவும் இருக்கும். ஆகவே, கொள்கை அடிப்படையில் இலட்சிய உணர்வோடு பேசி தீர்க்க வேண்டிய பிரச்சினை இது.

## நான் சாதாரண மனிதன் தான்

❖ என்னைத் தெய்வமாக்காதீர்கள் என்பதுதான் எனது முதல் வேண்டுகோள். நானும் சாதாரன மனிதன்தான். நான் கற்க வேண்டியது, நாட்டுக்கு ஆற்ற வேண்டிய தொண்டு நிறைய உள்ளன. என்னிடமும் குறைகள் இருக்கும். எனவே, என்னை அந்த அளவிற்கு உயர்த்தாதீர்கள்.

## மிகப்பெரிய துரோகம்

❖ தோற்றம் இருந்தால் மறைவு இருக்கும். வளர்ச்சி இருந்தால் தளர்ச்சி இருக்கும். பகலிருந்தால் இரவு இருக்கும். செயலிருந்தால் விளைவிருக்கும். இளமையிருந்தால் முதுமையிருக்கும். பிறப்பிருந்தால் இறப்பிருந்தே தீரும். எனவே, இளைஞர்கள் ஒருவனுடைய கொள்கையிலும், அதைச் செயல்படுத்தும் முறையிலும் உண்மையான பற்று வைத்திருந்தார்களேயானால் அவைகளைத் தாங்களும் செயல்படுத்திக் காப்பாற்றுவதற்கு, மேலும் வளர்ப்பதற்குத் தயாராக்கிக் கொள்ளவேண்டும் என்பதற்காக நீங்கள் வேதனைப்படுவதாகச் சொல்லுகின்ற வார்த்தைகளை வெளியிட்டேன்.

## பெயரும் புகழும் காப்பற்றப்பட....

❖ ஒரு மனிதன் மறைந்தாலும் கொள்கை வளர்ந்து கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் அந்தக் கொள்கையைத் தந்த பெயரும் புகழும் காப்பாற்றப்படும். எனக்குப்பின் உங்களைப் போன்றவர்களுடைய நம்பிக்கையைப் பெற்றவர்கள் வேறு யாரும் இல்லை என்கிற நிலையில் கழகத்தை விட்டு வைப்போமேயானால், அது அமரர் பேரறிஞர் அண்ணாவிற்குச் செய்கின்ற மிகப்பெரிய துரோகம்.

## பதவி–பிறரால் கொடுக்கப்படவேண்டும்

- ❖ எந்தப் பதவி ஒருவருக்குக் கிடைப்பதாக இருந்தாலும், அது பிறரால் கொடுக்கப்படவேண்டுமே தவிர, தானாக எடுத்துக் கொள்வதல்ல.

## ஈர்க்கும் சக்தி

- ❖ ஒரு கொள்கையின்மீது பற்று ஏற்படுவதற்கும் கவர்ச்சி எனலாம். தனி மனிதனின் செயலாற்றல் அல்லது தொண்டின்மீது மக்கள் வைக்கின்ற நம்பிக்கைக்கும் கவர்ச்சி என்று சொல்லலாம்.அதாவது கவர்ச்சி என்பது 'ஈர்க்கும் சக்தி' என்பதாகத்தான் பொருள்படும்.

## தரமற்ற வாதம்

- ❖ அந்த ஈர்க்கும் சக்தி அழகின்மீதோ, ஓர் உருவத்தின் மீதோ மட்டும் ஏற்படும் என்பது தரம் குறைந்த வாதமாகும். அரசியலில் மகாத்மாவின் அகிம்சை வழிப்போராட்டத்தை மக்கள் ஏற்றுக் கொண்டது மகாத்மாவின் தன்னலமற்ற தியாகசீலத்தின் ஈர்ப்பு சக்திதான் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும்.

## நம்பிக்கைக்கு உரியதாக வேண்டும்

- ❖ நம்பிக்கை எதன்மீது ஏற்பட்டாலும் சரிதான். அது உண்மையில் நம்பிக்கைக்கு உரியதாக இருக்கவேண்டும். அப்போதுதான் வெற்றிகிட்டும்.

## தொடர்ந்து பாடுபடுவோம்

- ❖ கடமைகளை இன்முகத்துடன் ஆற்றி, உரிமைகளைப் பெற்றிடுவோம்! அமைதியும் ஒற்றுமையும் காத்து வளர்ச்சிக்கு வழிவகுப்போம்! புதிய சமத்துவ சமதர்ம அமைப்புக்காகத் தொடர்ந்து பாடுபடுவோம்.

## ஆற்றலுக்கு முதலிடம்

- ❖ அறிவியல் துறையில் போட்டி வேண்டும். ஆற்றலுக்கு முதலிடம் தரப்படவேண்டும். ஆற்றல் இல்லாதவர்களுக்கு அது கிடைக்க வழி செய்யப்படவேண்டும்.

## சமுதாயத்தின் அங்கம் நாம்

- ❖ சமுதாய உயர்வோடு நாம் பிரச்சினைகளை அணுகவேண்டும். நாம் தனி மனிதர்கள் என்பது எவ்வளவு முக்கியமோ அதைவிட முக்கியமானது நாம் ஒரு சமுதாயத்தின் அங்கங்கள் என்பது!

## ஒவ்வொரு செயலிலும் ஒழுங்கினை வரையறு

- ❖ வயிற்றுப் பசியை தீர்த்துக்கொண்டால் மட்டும் போதாது! விலங்கினங்கள் கூடத்தான் வயிற்றுப் பசியை தீர்த்துக் கொள்கின்றன. அவற்றினின்றும் மேம்பட்ட நிலையை மனிதன் அடைவதற்கு தன்னுடைய ஒவ்வொரு செயலிலும் ஓர் ஒழுங்கினை வரையறுத்து கொள்ளவேண்டும்.

## வன்முறைக்கு பரிசு தோல்விதான்

- ❖ வன்முறைதான் போராட்டமுறை என்றால், தோல்விதான், அதற்குப் பரிசாக கிடைக்கும் என்பது நிச்சயம்.

## எழுத்தாளர்கள்

- ❖ எழுத்தாளர்களின் திறமை என்பது காலப்போக்கில் மாறுவது அந்த எழுத்தாளர்களின் எழுத்துகள் எதிர்காலச் சந்ததிகளின் தலையெழுத்தை நிர்ணயிக்கின்றவைகள்.

## எழுத்தின் உரிமையாளர்கள்

- ❖ எழுத்தாளர்கள் என்றால் எழுத்தை ஆள்பவர்கள் என்று கருதுவதால் அந்த எழுத்துக்கு அவர்கள் உரிமையுள்ளவர்கள்.

## உழைப்பால்தான் உலகம் உயரும்

- ❖ உழைப்பே உயர்வு தரும், உழைப்போம் உயர்வோம், உழைப்போரே உயர்ந்தோர், உழைப்பவராலேயே உலகம் உயர்ந்திடும்.

## சமநிலைக்குப் பங்கம் இல்லாத வளர்ச்சி வேண்டும்

- ❖ நமது சமுதாயத்தின் அனைத்துப் பகுதி மக்களும் நல்லிணக்கமான முறையில் சீரான முன்னேற்றம்பெற உத்தரவாதம் தரப்படவேண்டும், சமநிலைக்குப் பங்கம் ஏற்படாத வகையில் வளர்ச்சி அமைய வேண்டும்.

## நல்ல ஜனநாயகவாதி அண்ணா

- அரசியலோடு நாகரிகத்தை, அரசியலோடு நாணயத்தை, அரசியலோடு நல்ல நோக்கத்தை, அரசியலோடு ஜன நாயகத்தை, அரசியலோடு உயர்ந்த பண்பாட்டை இணைத்துத் தந்த நல்ல ஜனநாயகவாதி அண்ணா அவர்கள்.

## உழைக்கும் வர்க்கத்தின் உண்மை இலட்சியம்

- சமத்துவச் சமுதாயம் காண்பதே உழைக்கும் வர்க்கத்தின் உண்மையான இலட்சியம் எனும் மூலக்கருத்திற்கு முதலிடம் தாருங்கள்.

## உழைக்கும் மக்களே ஒன்று சேருங்கள்

- உழைக்கும் மக்களே ஒன்று சேர்ந்திடுவீர். பேதப்படும் சக்திகளை ஒதுக்கித் தள்ளிடுவீர். உழைப்பவரே உயர்ந்தோர் எனும் தத்துவத்தை நிலைநாட்டுவீர்.

## மனிதனின் உரிமையும் மகிழ்ச்சியும்

- ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை தேவை. மகிழ்ச்சி தேவை. இந்தத் தேவைகளுக்கு அடிப்படை வளரவும், வாழவும் தடையில்லாமல் இருப்பதுதான்.

## பழங்குடியினர் நலம் காண பாடுபடுவோம்

- தாழ்தப்பட்ட பழங்குடி மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் ஆகியோரின் நலன்களைக் காப்பாற்றி அவர்களை மேம்படுத்தப் பாடுபடுவோம்.

## ஏற்றத்தாழ்வற்ற சமுதாயம் அமைப்போம்

- சமுதாயத்தில் மக்கள் வாழ்வதற்காக ஏற்றத்தாழ்வற்ற சமதர்ம சமுதாயத்தை அமைக்கவேண்டும்.

## பொருளாதார வளர்ச்சியின் பலன்

- சமூக முன்னேற்றமும், பொருளாதார வளர்ச்சியும் ஒரு நாட்டின் இன்றியமையாத தேவை என்றாலும் அதன் பலன்கள் ஏழை, எளிய மக்களுக்குக் கிடைப்பது அவசியம்.

## நமது நோக்கம்

❖ தமிழ் நலன், தமிழ்ப் பண்பாடு, தமிழ்ச் சமுதாயம், தமிழ் கலாச்சாரம் வளர வேண்டும் என்பது நமது நோக்கமாக இருத்தல் வேண்டும்.

## செயல், பண்பாட்டுடன் இருக்க வேண்டும்

❖ ஒரு மனிதனின் எண்ணமும் நோக்கமும் மட்டுமே நல்லதாக இருந்தால் மட்டும் போதாது, செயலும் பண்பாட்டுடன் இருக்கவேண்டும். இதை ஒவ்வொருவரும் உணர்ந்தால் நாட்டில் நல்லவை நடக்கும்.

## கேடு தரும் மக்கள் தொகைப் பெருக்கம்

❖ மது அருந்துவது மக்கள் அறியாமலே எத்தகைய கேடுகளை அவர்களுக்கு உண்டாக்குமோ அதுபோல மக்கள் தொகைப் பெருக்கமும் நாம் அறியாமலேயே சமுதாயத்திற்குக் கேடுண்டாக்க கூடியவை.

## காந்தியிலிருந்து பெரியாருக்கு

❖ நான் ஒரு தேசியவாதி, காந்தியினிடத்தில் சிறுபிள்ளையாக இருந்தபோதே பற்றுகொண்டவன். ஆனாலும் பெரியார் அவர்களின் சுமரியாதை கருத்து எனக்கு பிடிக்கும். 1935லிருந்து பெரியார் அவர்களின் 'பகுத்தறிவு', 'குடியரசு' போன்ற ஏடுகளைத் தொடர்ந்து படித்து வருகிறேன்.

## காமராஜர் பெட்டியில் என்ன இருந்தது ?

❖ "காமராஜருக்கு அருகில் ஒரு கைப்பெட்டி இருப்பதை நான் பார்த்திருக்கிறேன். அதற்குள் என்ன இருக்கிறது என்று என்னால் யூகித்துக் கொள்ள முடியவில்லை. அவரைத் தவிர வேறு யாரும் திறப்பதில்லை என்று மட்டுமே கேட்டு அறிந்தேன்.இப்போது இங்குள்ள பொருட்காட்சியில் காராஜரின் கைப்பெட்டி இடம் பெற்றுள்ளது. அதற்குள் இதுநாள்வரை என்ன இருந்தது என்று பார்க்கவேண்டுமென்ற ஆவலுடன் திறந்த பொழுது உள்ளே காமராஜரின் அன்னையின் படம் இருப்பதைப் பார்த்தேன். பெற்ற தாயின் படத்தை எப்பொழுதும் தமக்கு அருகில்வைத்துப் பாதுகாத்து வந்தார் பெருந்தலைவர் காமராஜர் என்பதை நான் அறிந்ததும் மெய்சிலிர்த்துப் போனேன். அன்னையின் பிரிவாற்றாமையால் எப்படியெல்லாம் நான் ஏக்கம் அடைந்து இருக்கிறேன் என்பது எனக்குத் தெரியும்."

## அழகான குடும்பம்

❖ மனிதர்களுக்கு சில குணங்கள் உண்டு. அவர்கள் கட்டுப்பாட்டோடு வாழ்ந்தால், சரியான முறையில் தங்களது சந்ததியினரை வழிநடத்திச் சென்றால் அழகான குடும்பத்தினை உருவாக்க முடியம்.

## மனித வாழ்வின் ஆரம்பமும் முடிவும்

❖ ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும் அமைதியில்தான் ஆரம்பமாகிறது. பிறகு இறுதியில் உச்சகட்டம் ஏற்பட்டு முடிகிறது.

## பதவிகள் வரும்,போகும்

❖ பதவிகள் எல்லாம், வந்தால் வரும், போனால் போகும். நான் நடிகனாக இருந்தவன். அந்த உணர்வை என்னால் மாற்றிக்கொள்ள முடியாது.

## கட்சிகளின் ஒற்றுமை, தேசிய ஒருமைப்பாடு வலுப்பெறவே!

❖ கட்சிகளுக்குள் ஒற்றுமை ஏற்படுவது சிக்கலை ஏற்படுத்துவதற்காக அன்று. அவசியமான நன்மைகளைப் பெறுவதற்கும் தேசிய ஒருமைப்பாடு வலுப்பெறுவதற்குமேயாகும்.

## வெற்றி

❖ சுயநலமில்லா நம்பிக்கை வெற்றி பெறும்.

## முயன்றால் முடியாதது இல்லை

❖ எல்லோரும் ஒத்துழைத்தால் மக்களைத் தயார்படுத்த முடியும். முயன்றால் முடியாதது எதுவுமில்லை.

## அரசின் பணி

❖ மக்களுக்கு எது தேவையோ அதைச் செய்வதற்குத்தான் அரசு. அந்த அரசைத் தேர்ந்தெடுப்பது மக்கள்.

## சீர்திருத்தக்காரன் என்பவன் யார்?

❖ சீர்திருத்தக்காரன் என்றால் கடவுளை நம்பாதவன், பண்பில்லாதவன், அடக்கமில்லாதவன், அகந்தையுடையவன் என்றெல்லாம் பொருள் கொள்ளுதல் கூடாது.

## நடிப்பை உண்மையாக்குகிறவர்கள்

❖ நடிப்பு என்பது போலிதான். அந்தப் போலித்தனத்தை உண்மையாக்குகிறவர்கள் சிறந்த நடிகர்.

## அன்னையின் அறிவு

❖ "என் தாய்க்கு எழுதப் படிக்கத் தெரியாது. என்றாலும் சுலோகங்கள், பிரார்த்தனை கீதங்கள் இவற்றில் யாராவது தவறு செய்தால், உடனே 'அது தவறு; இதுதான் சரி' என்று சுட்டிக்காட்டும் அளவிற்கு அவற்றில் தேர்ச்சி படைத்தவர்".

## தாயின் பண்புகள்

❖ "ஏதோ என்னிடம் சில நல்ல பழக்கங்கள் இருக்கிறது என்றால் அது என் தாயால்தான்.

❖ என் இறந்துபோன தாயின் அன்பை இங்கே வீற்றிருக்கும் ஒவ்வொரு உள்ளத்திலும் காண்கிறேன்".

## காந்தி தரிசனம்

❖ "ஒரு சமயம் காரைக்குடிக்குக் காந்தியடிகள் வந்து மேடை மீது நின்று மக்களுக்குத் தரிசனம் தந்தார். அமைதியும், எளிமையும் உருவான அவரைப் பார்த்ததும் ஏதோ தெய்வத்தன்மை பொருந்திய ஒருவரைப் பார்ப்பது போன்ற பக்தி உணர்வுதான் ஏற்பட்டது. அந்தப் புன்சிரிப்பும் அவரது நடையும், குனிந்த தலையும் என் உள்ளத்தில் இன்னும் சித்திரமாகப் பதிந்திருக்கிறது. ஆயிரக்கணக்கான மக்கள் கூடி இருந்த அக்கூட்டத்தில் ஒரு மூலையில் நின்றபடி நானும் பார்த்தேன் தேசப்பிதாவை. அப்போது என்னை மக்களுக்கு அதிகம் தெரியாது".

❖ நான் அப்போது இளைஞன். காங்கிரஸ் கட்சியில்தான் இருந்தேன். கதராடையே நான் அணிந்து வந்தேன்.

## உழைக்கும் கல்வியும் வேண்டும்

❖ உயர்ந்த கல்வி கற்கும்போதே உழைக்கும் கல்வியையும் மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

### நமது என்ற உணர்வு வேண்டும்

❖ நமது நாடு, நமது மக்கள், நமது மொழி என்ற உணர்வு நமக்கு வேண்டும்.

### தமிழ்தாய் வாழ்த்து பாடம் ஆக வேண்டும்

❖ பள்ளிகளில் தமிழ்த்தாய் வாழ்த்தும் பாடவேண்டும் என்ற உத்தரவு போட வேண்டும். இசைத்தட்டுகளில் ஒலித்தால் மட்டும் போதாது, மாணவர்களுக்கும் அந்தப் பாடல் பாடம் ஆக வேண்டும்.

### பிரச்சினை மதத்தின் பெயரால் அன்று, செய்கின்ற செயல்களால்தான்!

❖ மதத்தின் பெயரால் பிரச்சினைகள் இல்லை. அவர்கள் செய்கின்ற செயல்களினால்தான் பிரச்சினைகள் வருகின்றன.

### இறுதிவரை போராடு

❖ உள்ளத்தில் இலட்சியத்தை வைத்துக்கொண்டால் இறுதிவரை அதற்காகப் பாடுபடவேண்டும்.

### பிரிக்க வரும் சக்தியை எதிர்த்து நிற்போம்

❖ நமக்குள் பல்வேறு பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால், அந்த நேரத்தில் இந்தியாவைப் பிரிக்க எந்த சக்தி வந்தாலும் அதை எதிர்த்தே ஆக வேண்டும்.

### கடமையைச் செய்வோர்!

❖ கடமையைச் செய்கின்ற ஒவ்வொருவரும் ஒன்றே குலம் என்ற கொள்கைக்குச் சொந்தக்காரர்கள்தான்.

### நாட்டின் பாதுகாப்பு

❖ நாட்டின் தற்காப்புக்காக உயிரையும் பணயம் வைத்துப் போராட வேண்டியது நம் ஒவ்வொருவரது கடமையாகும்.

### துன்பதுயர நினைவு

❖ நல்ல நிலைமைக்கு வந்தபிறகு நாம் அனுபவித்த துன்ப துயரங்களை நினைவில் கொண்டால்தான் நமது கடமையைச் சரிவர நிறைவேற்ற முடியும்.

### எது சரியான வீரம் ?

❖ சக்தி குறைந்தவர்களிடம் வீரத்தைக் காட்டுவது சரியல்ல!

### செய்யும் தொழிலில் நேர்மை வேண்டும்

❖ அரசியல் கட்சிகளில் சேருபவர்கள் எந்தத் தொழிலும் செய்யக்கூடாது என்பதல்ல. அவர்கள் செய்யும் தொழிலில் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும்.

### சிரமமான காரியம்

❖ நல்லவன் என்று பேர் எடுப்பது மிகவும் சிரமமான காரியம்.

### புகழ் தேடி வர வேண்டும்

❖ புகழை நாம் தேடிச் செல்லக்கூடாது. அதுதான் நம்மைத்தேடி வரவேண்டும்.

### என்றும் மறக்கமாட்டேன்

❖ தமிழுக்காக, தமிழ் இனத்திற்காகப் பாடுபட்டு கொள்கைக்காக இருக்கின்ற, தியாகம் செய்த நல்லவர்களை நான் என்றும் மறக்கமாட்டேன்; விட்டுவிடமாட்டேன்!

### தேசியக் கண்ணோட்டம் தேவை

❖ மத, இன, சாதி, மொழி முரண்பாடுகளுக்கு அப்பாற்பட்ட தேசியக் கண்ணோட்டமும், ஒற்றுமை மனப்பான்மையும் தான் நம்நாட்டை வளம்மிக்கதாக உருவாக்க வழிவகுக்கும்.

### திறமைக்கு மரியாதை தருவேன்

❖ நான் அவரை அரசவைக் கவிஞராக நியமித்ததும் அவருக்கே ஒன்றும் புரியவில்லை. தனிப்பட்ட விரோதங்களை நான் என்றுமே பார்ப்பதில்லை. திறமையையே பார்ப்பேன். திறமை உள்ளவர்கள் எனக்குத் தீங்கு செய்தாலும், நான் அதை ஒதுக்கி வைத்துவிட்டு அவர்களுக்கு எவ்வளவு நன்மை செய்ய முடியுமோ அவ்வளவு நன்மை செய்திருக்கிறேன்.

- என் மனசாட்சிக்கு எது நியாயம் என்று படுகிறதோ அதையே நான் எப்போதும் செய்வேன். அரசவைக் கவிஞராக நான் கண்ணதாசனை நியமித்தேன். அவர் என்னைப் பேசாதபேச்சு, எழுதாத எழுத்து, திட்டாத திட்டு கிடையாது.

## நடித்ததில் பிடித்தது

- என் எண்ணப்படி அமைந்த படங்கள் 'பெற்றால்தான் பிள்ளையா'. 'என் தங்கை' குறிப்பாக 'பெற்றால்தான் பிள்ளையா'வில் நான் போட்ட வேடம் ரொம்பவும் என்னைக் கவர்ந்தது.

- நான் பெற்ற பிள்ளைகளுக்கு மட்டும்தான் நான் பாதுகாப்பாக இருப்பேன் என்று அந்த வேடம் சொல்லவில்லை, நான் யாரோ பெற்ற பிள்ளை. ஆனால் எல்லா பிள்ளைகளையுமே வளர்க்கக் கடமைப்பட்டவன் என்ற நல்ல கருத்தைச் சொன்ன பாத்திரம் அது.

## மக்களைச் சந்திப்பவன்

- நான் மக்களைச் சந்திக்கிறவனே தவிர, தலைவர்களைத் தேடிப்போய், வாழ்க்கையை உயர்த்திக்கொள்ள வேண்டிய நிலையில் நான் இல்லை.

## எந்த தேவையும் எனக்கில்லை

- நான் தொண்டர்களை சந்திக்கிறவன், மக்களை நம்புகிறவன். நான் யாருக்கும் பயந்துபோய் கொள்கையை மாற்றிக் கொண்டவன் இல்லை. அப்படிப்பட்ட தேவையும் எனக்கு இல்லை.

## அண்ணா வழி

- நேற்று சொன்னதை இன்று மறுப்பது அண்ணாவின் அகராதியில் இல்லை. முடியாததை முடியவில்லை என்று துணிச்சலாகச் சொல்லுவோம். தவறான வழிகளில் செல்லமாட்டோம். எந்தச் சமயத்தில் எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்ய பின்வாங்க மாட்டோம்.

## மாணவர்களின் கடமைகள்

- மாணவர்களாக இருந்தால் படிப்பு முடிந்து வெளிவரும்வரை அரசியலில் நேரடித் தொடர்பு கொள்ளாமல் இருப்பது; சாதி மதப்பிரிவுகளையும்

மனப்பக்குவம் பெறுவது; நீந்தக் கற்றுக்கொள்வது போன்றவற்றைக் கடமையாகக் கொள்ளவேண்டும்.

❖ உடலைப் பேணிக்காப்பது; தேகப் பயிற்சி செய்வது; உண்மைக்கு மட்டுமே மதிப்பளிப்பது; உள்ளத்தூய்மையைப் பெறுவது; எவ்வளவு அதிகமாக விஞ்ஞானத்தையும் உலக வரலாற்றையும் கற்க முடியுமோ அத்தனையும் கற்பது; தற்காப்புகேற்ற ஒரு கலையைத் கற்பது இவை எல்லாமே மாணவர்களின் கடமைகளாகும்.

## அறிமுகம்

❖ அறிமுகம் என்பது பரஸ்பரம் செய்யப்படவேண்டிய காரியம் ஆகும்.

## திராவிட இயக்கம்

❖ திராவிட இயக்கம் என்பது ஓர் இலட்சியம்; ஒரு குறிக்கோள்; எந்த வகையான தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும், மலைவாழ் மக்களும் எல்லோரும் சமம் என்பதுதான் திராவிட இயக்கம்.

## எளிமை என்பது...

❖ ஏழ்மை—வறுமையில் எளிமையாக இருப்பது தியாகம் இல்லை. வசதி இருக்கும்போது எளிமையாக இருப்பதுதான் தியாகம்.

## பிரிக்க முடியாது!

❖ இந்த மக்களிடமிருந்து என்னைப் பிரித்திடவோ, என்னிடமிருந்து இந்த மக்களைப் பிரித்துடவோ எந்தச் சக்தியாலும் முடியாது.

## மே தினம்

❖ உழைக்கும் வர்க்கத்திற்கே இவ்வுலகம் உரிமையானதென்பதை உணர்த்தும் நாள்தான் இந்த மே முதல் நாளாகும்.

## உண்மை இலட்சியம்

❖ சமத்துவச் சமுதாயம் காண்பதே உழைக்கும் வர்க்கத்தின் உண்மையான இலட்சியம் ஆகும்.

## தகுதி

- ❖ படித்தவன் புத்திசாலியாகிறான் என்று சொன்னால் மட்டும் போதாது. தன்னை வாழ வைத்துக்கொள்கிற தகுதியுள்ளவனாக வெளியே வருகிறான்; தொழில் பயின்றவனாக வருகிறான் என்கிற உரிமையும், தகுதியும் இருக்கவேண்டும்.

## மக்களே நமது எஜமானர்கள் என அரசு ஊழியர்கள் எண்ண வேண்டும்

- ❖ மக்கள்தரும் வரிப்பணத்திலிருந்து நமக்கு சம்பளம் கொடுக்கிறார்கள். ஆகவே, மக்களுக்குத் தொண்டு செய்கிறோம் என்பது மட்டுமல்ல மக்கள் நமது எஜமானர்கள் என்ற வகையில் அரசு அலுவலர்களும், மற்றவர்களும் அந்தப் பணியைச் செய்தால்தான் நிலைமை சீர்படும் எந்தத் திட்டமும் நிறைவேறும்.

## அகத்திலும் புறத்திலும் தூய்மை காத்திடு

- ❖ மக்கள் உள்ளும் புறமும் தூய்மையுடன் துலங்கவேண்டும். புறத்தே நல்லவனாகவும் உள்ளத்தே வஞ்சகனாகவும் இருப்பது தகாது.

## மற்றவருக்கு ஏன் உதவுகிறேன் ?

- ❖ சிறு வயதில் நான்பட்ட துன்பங்களை, அனுபவித்த கஷ்டங்களை நான் மறக்கவில்லை. நான் தமிழகத்துக்கு வந்தபோது குடியிருக்க எனக்கு குடிசைகூடக் கிடையாது.

- ❖ இதனால்தான் பிறரின் கஷ்ட–நஷ்டங்களை என்னால் நன்கு உணர முடிகிறது. இதனால்தான் இயன்றவரை உதவி செய்கிறேன்.

## எனது முன்னேற்றம் எனது அன்னையைச் சாரும்!

- ❖ நான் மக்களின் அன்புக்கு இலக்காகி இருப்பதும், முன்னேற்றம் கண்டிருப்பதும் என்னை ஈன்று எடுத்து ஆளாக்கிவிட்ட அருமை அன்னையைச் சேரும்.

## வெற்றியும் தோல்வியும்
## என் சினிமா அனுபவத்தில்....

❖ நான் நடிக்கும்போது ஒரு படம் வெற்றி பெற்றால் உடனே பணத்தோடு என் வீட்டில் காத்து கிடப்பார்கள்.

❖ 'சார், எனக்கு நேரம் இல்லை' என்று சொன்னாலும், 'பரவாயில்லை இரண்டு மணி நேரம் போதும்' என்பார்கள்.

❖ ஒரு படம் தோல்வியுற்றால், 'எம்.ஜி.ஆருக்கு இப்போது மார்கெட் இல்லை' என்பார்கள். அடுத்த படம் அட்வான்ஸோடு நின்றுவிடும். 1936இல் இருந்து எனக்கு இந்த அனுபவம் உண்டு.

## கலைஞர்கள் உலகிற்கே சொந்தம்

❖ மக்களை மகிழ்விக்கவே நடிக்கிறோம். அவர்களால்தான் கலைஞர்களின் வாழ்க்கைச் சக்கரமே சுழல்கிறது. அவர்களிடமிருந்து ஒதுங்கி வாழ்ந்தால் அவர்கள் ஒதுக்கி விடுவார்கள்.

## முயற்சி திருவினையாக்கும்

❖ செய்யும் தொழிலே தெய்வம் என்கிற உணர்வோடு முயற்சி திருவினையாக்கும் என்கிற நம்பிக்கையோடு பாடுபட்டால் வெற்றி நிச்சயம்.

## மணமக்களுக்கு அறிவுரை
## நமது வேலையை நாமே செய்து கொள்ள வேண்டும்

❖ எவ்வளவு செல்வம் வந்தாலும் நம் வேலையை நாமே செய்து கொள்ள வேண்டும். இதை மணமக்கள் கட்டளையாக எடுத்துக்கொண்டாலும் சரி உபதேசமாக ஏற்றுக் கொண்டாலும் சரி.

## இலட்சியப் பிடிப்புடன் வாழ்க

❖ உழைத்து சம்பாதிக்க வேண்டும். உழைத்து சம்பாதிப்பவர்களே உயர்ந்தவர்கள் என்ற இலட்சியப் பிடிப்பிலே அவர்கள் வாழ வேண்டும்.

## ஊதாரித்தனம் கூடாது

❖ வீண் ஆடம்பரம் இல்லாமல் மணமக்கள் வாழவேண்டும். பிறர் மெச்ச வேண்டும் என்பதற்காக ஊதாரித்தனமாக யாருக்கும் எந்தவித லாபமும் இல்லாமல் செலவு செய்யக் கூடாது.

## உயர்த்திவிட்டவர்களை என்றும் மறக்கக் கூடாது

❖ மணமக்கள் எவ்வளவு செல்வத்தோடு வாழ்ந்தாலும் எளிமையோடு இருக்கவேண்டும். பதவி வரும்பொழுது பணிவுவரவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மணமக்கள் அதைக் கடைபிடிக்கவேண்டும். உங்களை வளர்த்த பெற்றோரை, உறவினர்களை, உங்களை உயர்த்திவிட்டவர்களை நீங்கள் என்றென்றும் மறக்காமல் இருக்க வேண்டும்.

## நம்பிக்கையோடு வாழ்க

❖ நியாயத்தை, அது என்றும் வெற்றிபெறும் என்கிற உண்மையை நம்பியேதான் ஒவ்வொரு மனிதனும் வாழ்ந்தாகவேண்டும்.

## நியாயத்திற்கு வெற்றி நிச்சயம்

உடனடி ஏமாற்றம் ஏற்படுவதாக இருந்தாலும் அது தற்காலிகமாகத்தான் இருக்கமுடியுமே தவிர, முடிவு நியாயத்திற்கு வெற்றி என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மையாகும்.

## அண்ணாயிசம் என்பது

❖ அறிஞர் அண்ணா உயிரோடு இருந்த காலத்தில் எப்படி எல்லாம் ஆட்சி நடத்த வேண்டும் என்று விரும்பினாரோ, அதை நடைமுறையில் செயல்படுத்த விரும்புவதுதான் அண்ணாயிசம்.அண்ணாவின் கொள்கைகளைக் காப்பாற்ற, சாதியற்ற சமதர்ம பகுத்தறிவு சமுதாயத்தை, ஜனநாயக வழியில் நிறைவேற்ற உழைப்பதுதான் ‘‘அண்ணாயிசம்’’.

## நடிப்பு என்பது எது ?

❖ 44 வயது சிவாஜிகணேசன் 80 வயதுக் கிழவனாகவும், 56 வயதாகிய நான் 26 வயது வாலிபனாகவும் நடிப்பதுதான் நடிப்பு! அவர் கிழவராகவும் நான் வாலிபராகவும் நடிக்க முடியாவிட்டால் நாங்கள் இருவருமே நடிகர்கள் அல்ல.

## அறிவு

❖ உழைத்துப் பிழைக்கின்ற அனைவரும் இந்த நாட்டில் மதிக்கப்படுவர். எவ்வளவு படிப்பு படித்தாலும், மேலும் வீட்டில் இருந்து படிக்கவேண்டும் என்று மணமக்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். ஒரு குடும்பத்தின் தலைவனாகிவிட்டோம் என்று கருதாமல் அறிவை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

## நல்ல நண்பர்களைப் பெற வேண்டும்

❖ நல்ல நண்பர்களைப் பெற வேண்டும். எவ்வளவு சொத்து இருக்கிறது அவருக்கு என்று பார்த்து நண்பனைத் தேடினால் அது நட்பைத்தேடுவதாக அமையாது.

## நம்பிக்கையில்லாத் தீர்மானம் எதற்காக ?

❖ நம்பிக்கையில்லாத் தீர்மானம் போன்றவைகள் கண்டனத் தீர்மானம் முதலியவை, ஒரு நாட்டின்மேல் மக்களின்மேல் நம்பிக்கையைப் பாதுகாக்கவும், முன்பு நடைபெற்ற தவறுகள் மீண்டும் தொடர்ந்து விடக்கூடாது என்ற எண்ணத்தினாலும், முன்பு தவறுகளைச் செய்தவர்களுக்கு மக்கள் என்ன முடிவைத் தந்திருக்கிறார்களோ அதேமுடிவு இப்போது இருப்பவர்களுக்கும் வந்துவிடக்கூடாது என்ற நல்ல எண்ணத்துடனும்தான் சொல்லப்படுகின்றன.

## அரசின் தீர்மானங்கள் – மக்களுக்கான கடமை

❖ அரசாட்சி புரிபவர்கள் தீர்மானங்கள் கொண்டு வருவது தேவையானது. அவர்கள் எந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்து இருக்கிறார்களோ அந்த மக்களுக்கு அவர்கள் செய்யும் – ஆற்றும் கடமை என்கிற எண்ணத்தில் இந்தத் தீர்மானங்கள் கொண்டுவரப்படுகின்றன.

## ஆட்சிக்கலையைப் பயன்படுத்திக் கொள்ளும் அரசியல்வாதிகள்

❖ சில நேரங்களில் அரசியல்வாதிகள்தான் ஏதோ தவிர்க்க முடியாத சூழ்நிலையின் விளைவாகத் தங்களுடைய எண்ணங்களை வெளிப்படுத்திக் கொள்வதற்காக சில சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

## வேலை நிறுத்தமும் வன்முறையும்

❖ வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்றவர்கள் வன்முறைக்காக ஈடுபடுவதில்லை. வேலை நிறுத்தத்திலே ஈடுபடுவர்களுக்கு இனிமேல் பட்டினி கிடப்பது முடியாது, எத்தனை நாட்களுக்கு வருமானம் இல்லாமல் இருப்பது, என்ற எண்ணம் ஏற்பட்டு வெறுப்பு மனப்பான்மையாக அது வளரும் போதுதான் வன்முறையில் ஈடுபடுகிறார்கள்.

## ஒப்பந்தத்தையும் சட்டத்தையும் மீறுவது சரியல்ல

❖ சட்டங்களைப் பயன்படுத்திக் கொண்டு ஒப்பந்தங்களைச் செய்துகொண்டு, பிறகு ஒப்பந்தங்கள் பாதகமாக இருக்கின்றன அல்லது சாதகமாக இல்லை என்ற நிலையில் மாறுபாடான நிலைமையை அமைத்துக் கொள்ளக்கூடிய வேதனை தோன்றுகிறபோது சட்டத்திற்குப் புறம்பாக ஏதாவது ஒரு வழியைக் கடைபிடித்தாவது ஒரு நன்மையைப் பெறலாமா என்று முயற்சிப்பது சரியல்ல.

## அடிப்படை நியாயம் தேவை

❖ கோபம் வருவதற்கு அடிப்படை நியாயத்தை வைத்துக் கொள்ளல் வேண்டும்.

## சட்டமன்றம்! உரிய மரியாதை தருக

❖ சட்டமன்ற வாசகங்களுக்கு எந்த அளவிற்கு மரியாதை கொடுத்துப் பயன்படுத்தி உணர்ச்சிகளை வெளிக்காட்ட முடியுமோ அந்த அளவிற்கு எதையும் செய்யலாம்.

## பாராட்டு

- ❖ பேரறிஞர்களை அவர்கள் இருக்கும்போது பாராட்டுவது இல்லை. மறைந்தபின் பாராட்டி வருகிறோம்.

## உழைக்கும் கரங்கள்

- ❖ உழைக்கும் கரங்கள், நாளைய புது உலகை உருவாக்கும் கரங்கள், ஆக்கம் கொண்ட கரங்கள் என்பதையே வரலாறாக எழுதிக்காட்ட, உழைக்கும் வர்க்கம் உடன் பிறப்புக்கள் அனைவரையும் அழைக்கும்.

## சண்டையும் ஒரு நடிப்பே

- ❖ ‘‘அபிமன்யு பத்ம வியூகத்தில் நுழைந்து வெளியே வர முடியாமல் மரணம் அடைந்ததாகவும்; அர்ச்சுனன் உள்ளே நுழைந்து வெளியே வந்ததாகவும் கூறப்படுகிறது.

- ❖ அதை நம்பும்போது ‘சண்டை போடுவது ஒரு நடிப்பா ?’ என்று கேட்டார்கள். அடி வாங்குபவன் அடி வாங்குவது போலவும்; அடிப்பவன் அடிப்பது போலவும் நடித்தால்தான் சண்டைக் காட்சியை ரசிக்க முடியும்.

- ❖ அடி வாங்குபவன் ‘ஐயோ’ என்று அழாமலோ, அப்படியே நின்றுவிட்டாலோ அது கேலிக்கூத்தாகிவிடும். ஆகவே சண்டைக் காட்சிக்கும் நடிப்பு தேவை என்பது தெளிவாகிறது.

- ❖ பார்ப்பவர்கள் நம்பும்படிச் செய்வதுதான் நடிப்பு. மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக அமைய வேண்டும். அதுதான் நடிப்புக்கு முக்கியம்.’’

## நான் தமிழன்தான்

- ❖ ‘‘ மன்ன பத்மநாபன் கேரளத்தின் பிரபல அரசியல் தலைவர்களில் ஒருவர், அவர் இறந்ததைத் கேள்விப்பட்டதும், அவருக்கு அஞ்சலி செலுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டு, கேரளாவிற்குச் சென்று மரியாதை செலுத்தி வந்தேன். அடுத்த நாள் ஒரு பத்திரிகை மலையாளியான எம்.ஜி.ஆர். மலையாளியான மன்ன பத்மநாபன் இறுதி யாத்திரையில் கலந்து கொண்டார்’’ எனச் செய்தி போட்டது.

❖ இதைப்படித்ததும் என் உள்ளம் மிகமிக வேதனை யடைந்தது. எங்கிருந்தாலும் என்னை வளர்த்து புகழுடன் அன்புடன் இருக்கும்படி செய்தது தமிழ் மக்கள்தான். ஆகையால் நான் தமிழன்தான் என்று என் மனம் பறைசாற்றிக் கொண்டே இருக்கும். இன்று என் மனம் மிக மிக மகிழ்ச்சியாக உள்ளது ஏன் தெரியுமோ ? பம்பாய் தமிழ்ச் சங்கத் தலைவர் வரவேற்புரையில் 'தமிழ்நடிகர் எம்.ஜி.ஆர்.' என்று வாய்நிறைய வாழ்த்தினார். 'தமிழ்ச்சங்கம்' தமிழன் என்று என்னை ஏற்றுக்கொண்டுவிட்டது. என் கவலை பறந்துவிட்டது.''

## ஒற்றுமை

❖ தேசிய ஒருமைப்பாடும், ஒற்றுமை மனப்பான்மையும் நம் அனைவருக்கும் மிகவும் இன்றியமையாதவையாகும். மத, இன, சாதி, மொழி முரண்பாடுகளுக்கு அப்பாற்பட்ட தேசியக் கண்ணோட்டமும், ஒற்றுமையான மனப்பான்மையும்தான் நம் நாட்டை வளமிக்கதாக உருவாக்க வழிவகுக்கும். மக்களாட்சித்தத்துவம் நம் நாட்டில் வேரூன்றி நிலைத்து மிளிர்கிறது. நமக்குள் எந்தப் பிரச்சினைகள் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டாலும் பேச்சுவார்த்தை மூலமே தீர்த்துக் கொள்ள முடியும். வன்முறையால் எதையும் சாதிக்க முடியாது.

## முப்பெரும் முழக்கங்கள்

❖ அமைதி, ஒற்றுமை, முன்னேற்றம் என்ற முப்பெரும் முழக்கங்களை உயிர்மூச்சாகக் கொண்டு உழைப்போம்; நாட்டை உயர்த்திவிடக் கடமையாற்றுவோம்.

## தீர்க்க தரிசனம்

❖ சரித்திரத்தில் திருப்புமுனைகளை முன்கூட்டியே ஊகித்துச் சொல்வது எல்லோராலும் இயலாத காரியம். தீர்க்க தரிசனம் படைத்தவர்கள் என்று யாரைக் கூறுகிறோம் என்றால் வருங்காலத் தலைமுறைகளுக்கும் பயன்படுகிற நெறிமுறைகளை வாழ்வாலும், வாக்காலும் உணர்த்திவிட்டுச் செல்கிறவர்களைத்தான் அப்படிக் குறிப்பிடுகிறோம்.

## நமது ஆதரவு

- நமது ஆதரவு என்பது அரசுக்கு மட்டுமல்ல, தேசத்தின் வலிமையைக் காக்கும் அதன் முயற்சிகளுக்கு என்பதை காலம் உணர்த்தும்.

## மக்களாட்சியின் வெற்றி

- மக்களுக்கும், அரசுக்கும் இடையே நெருக்கமான தொடர்பு அமைவதைப் பொறுத்தே மக்களாட்சியின் வெற்றியும் அமைந்திடும்.

## நேரு

- இந்தியத் துணைக் கண்டத்தை ஒன்றாக இணைத்து அதன் வாழ்வுக்காகவும், வளர்ச்சிக்காகவும் ஓயாது உழைத்துக்கொண்டிருந்த மகத்தான சக்தியே நேரு.

## நம்மை மீறிய ஒரு சக்தி

- "நான் நேற்று சென்னையில் என் வீட்டில் கை கழுவும் பேசினில் கையைச் சுத்தம் செய்து கொண்டிருந்தபோது, அந்தக் கோப்பையில் ஒரு பூச்சி விழுந்து தண்ணீரில் தத்தளித்தது. அந்தப் பூச்சியைக் காப்பாற்றலாமே என்ற எண்ணத்தில் கையினால் அதைப் பிடித்து வெளியே பறக்கவிட்டேன்.
- மறுபடியும் நான் கைகழுவி முடித்துத் திரும்பும்போது 'க்ளுக்' என்று என் அருகே ஏதோ ஒரு ஓசை கேட்டது. என்னவென்று பார்த்தேன். நான் காப்பாற்ற நினைத்து வெளியே எடுத்துவிட்டேனே, அந்தப் பூச்சியை சுவரில் இருந்த பல்லி ஒன்று கவ்விக் கொண்டிருந்தது.
- அப்போதுதான் நினைத்தேன். நான் நினைத்தபடி இதைக் காப்பாற்றிவிட முடிந்ததா ? மனிதன் கையில் என்ன இருக்கிறது ? நம்மை மீறிய ஒரு சக்தி நம்மை ஆட்டிப்படைக்கிறது என்று உணர்ந்தேன் !"

## உடலினை உறுதி செய்

- உடலைக் கட்டுப்பாடான பயிற்சிகள் மூலம் காத்துக் கொள்வது நல்லது. நமக்கு வாழ்வில் நல்ல சந்தர்ப்பங்கள் வயதான காலத்தில்கூட வரலாம். அப்போது உழைப்பதற்கு உடலில் தெம்பு வேண்டும்.

## வரலாற்று உண்மை

❖ மனிதனின் நல்ல செய்கைகள் இயற்கையைக் கூட, மாற்றி அமைத்துவிடும். நான்கு நல்லவர்களின் சக்தியால் நாடு முழுவதற்கும் நல்ல பலன் கிடைக்கும். இது வரலாற்று உண்மை.

## ஒதுக்கித் தள்ளுவோம்

❖ நாட்டு ஒற்றுமைக்கு கேடு விளைவிப்பவர்கள் மக்களின் விரோதிகள். அவர்களை அடையாளம் கண்டு ஒதுக்கித்தள்ளுவோம்.

## தேசியக்கடமை

❖ அளவிலும், எண்ணிக்கையிலும் உற்பத்தியை பெருக்குவது மட்டுமின்றி, உயர்ந்த தரமுள்ள பொருட்களை உற்பத்தி செய்வதை நமது தேசியக் கடமையாக்கி கொள்ள வேண்டும்.

## பொங்கல்

❖ சாதி, மத, இன பேதங்களையெல்லாம் கடந்து நின்று தமிழக மக்கள் கொண்டாடும் தனிச்சிறப்புடைய திருநாள் பொங்கல் திருநாள். உழவரும் பிற துறைகளில் உழைப்போரும் ஒன்றுகூடி உழைப்பால் விளைந்த செல்வங்களைப் பகிர்ந்து உண்டு மகிழும் திருநாள் இது.

## சத்துணவு

❖ மனித வள மேம்பாடு என்பது குழந்தைப் பருவத்திலிருந்து தொடங்கப்பட வேண்டும் என்பதால் குழந்தைகளுக்கு சத்துணவுத்திட்டம் தொடங்கப்பட்டது.

## குறைபாடு; தயக்கம்; தாமதம் கூடாது

❖ நமது பணிகளில் தாமதம் கூடாது; நமது பயணத்தில் தயக்கம் இருத்தலாகாது; நமது உழைப்பில் குறைபாடு இருத்தலாகாது!

## மன்னிக்க மாட்டார்கள்

❖ சின்னஞ்சிறு பிரச்சினைகளைப் பெரிதுபடுத்தி மக்களுக்கான வளர்ச்சித் திட்டங்களுக்கு இடையூறு விளைவிக்க எவர் முயன்றாலும், அவர்களை மக்கள் மன்னிக்கமாட்டார்கள்.

## இன்றே... இப்போதே...

❖ வாழ்வின் சுவை எதையும் அறியாதிருக்கிற, லட்சக்கணக்கான நலிந்தோருக்காக, வருங்காலத் தலைமுறைக்காக இப்போதே இன்றே ஏதாவது செய்தாக வேண்டும் என்கிற துடிப்பு எல்லோரிடமும் இடம் பெற வேண்டும்.

## வரும் காலத்திற்கு விட்டு வைக்க வேண்டும்

❖ விதை செத்துதான் பயிர் முளைக்கும், விதை சாகாமல் பயிர் முளைப்பதில்லை. விதையை அப்படியே நாம் உண்டு விட்டோமானால் பயிர் கிடையாது. அதைபோல் உற்பத்தியாகிற செல்வம் அவ்வளவையும் இந்தத் தலைமுறையில் தின்று தீர்த்து விடுவதென்றால் அடுத்த தலைமுறைக்கு மிச்சம் எதுவும் இராது.

## வருங்காலத் தலைமுறைக்காகவும்

❖ நாம் உழைக்கிற உழைப்பு நம்முடைய நல்வாழ்வுக்கு மட்டுமல்ல, வருங்காலத் தலைமுறைக்காகவும் உழைக்கிறோம். இந்தத் தலைமுறையில் சில சங்கடங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை தேசியக் கடமையாக நாம் ஒவ்வொருவரும் கருத வேண்டும்.

## மாறுதல்

❖ மாற்றங்களின்றி முன்னேற்றமில்லை. முன்னேற்றமில்லையேல் வரலாறு இல்லை. மாறுதல் என்பது சிறப்பாக அமையும்போதுதான் அதுவே முன்னேற்றத்திற்கான சீரான பாதையினையும் அமைத்து கொடுத்துவிடுகிறது. சமூக முன்னேற்றமும் பொருளாதார வளர்ச்சியும் ஒரு நாட்டின் இன்றியமையாத தேவை என்றாலும், அதன் பலன்கள் ஏழை, எளிய மக்களுக்கு கிடைப்பது அவசியம்.

## தொல்லை தரும் பாதைகள்

❖ "ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு நாம் போக வேண்டும் என்று வைத்துக் கொள்வோம். அப்படிப் போவதற்கு ஏற்ற பாதை வேண்டுமல்லவா ?

❖ பாதையே இல்லாத பகுதியில் அடியெடுத்துவைத்து அல்லல்பட்டு நடந்து மற்ற இடத்தை அடையவும் கூடும். ஏன் மலைமேல் ஏறி இறங்கிப் போகலாம்; காட்டு வெளிகளில் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து செல்லலாம். தண்ணீரில் நீந்தியும் செல்லலாம்! ஆனால் இப்படிப் போய்ச் சேருவதற்கெனத் தேர்ந்தெடுக்கப்படும் பாதைகள் ஒழுங்கற்றவையாக இருப்பதால் பாதசாரிகளுக்கு அந்தப் பாதைகள் தொல்லைகளையும், இடர்பாடுகளையும் உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை."

## ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புகள்

❖ "ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புகளே" என்று நான் குறிப்பிடுவதை ஒரு சிலர் பொருத்தமாக இருப்பதாகக் கருதலாம்; வேறு சிலர் இது பொருத்தம் இல்லை என்று நினைக்கலாம்.

❖ என்னைப் பொறுத்தவரை நான் சுடப்பட்டு மருத்துவ மனையில் இருந்தபோது என் உடலிருந்து நிறைய ரத்தம் விரயமாகியிருந்தது.

❖ அப்போது என் உடலில் ரத்தம் செலுத்தி என்னை வாழவைக்க ஆவன செய்தார்கள். மருத்துவ நிபுணர்கள். இதைக் குறிப்பிடுவது எனது நீங்கா கடமையாகும்.

❖ அந்த ரத்தத் துளிகள்தான் என்னை மீண்டும் மனிதனாக ஆக்கியது. அந்த இரத்தம் பலருடைய இரத்தமானதால் அனைவரையுமே நான் என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புகளே என்று உரிமையுடன் அழைக்கிறேன்.

❖ அதனை நினைவுபடுத்திக் கொள்ளும் வகையில் அதன் பிறகு கடிதம் எழுதும்போதும் அல்லது மேடையில் பேசும் போதும் எனது உடன்பிறப்புக்களை இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புகளே என்று கூப்பிடுகிறேன்.

## சூளுரை

- ❖ எனக்கு என்ற எண்ணம் வராமல் நமக்கு என்ற எண்ணம் வரவேண்டும். அப்படிப்பட்ட எண்ணம் வளர்ந்தால் நாட்டில் ஒற்றுமை வளரும். சாதிக்கொள்கை ஒற்றுமையை ஏற்படுத்தாது. மதத்தின் பெயரால் தூய்மை தெரியவில்லை; தாழ்வுதான் தெரிகிறது. இத்தகைய சாதி உணர்வுகளை அகற்ற சூளுரை ஏற்போம்.

## குறிக்கோள்

- ❖ மொழி, இனம், கலாச்சாரம், நாகரிகம் போன்றவை மக்களை ஒன்று சேர்ப்பதற்கும் சமுதாயத்தை உயர்த்துவதற்கும் மேன்மைப்படுத்துவதற்கும் பயன்பட வேண்டும். இந்த உயரிய குறிக்கோள்தான் தமிழ்ச் சமுதாயத்தின் குறிக்கோளாகும்.

## புனிதப்போர்

- ❖ முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகளாக விளங்கும் சக்திகளை நமது ஒற்றுமையாலும், உழைப்பாலும் முறியடிக்க அனைத்துப் பிரிவினரையும் அழைக்கிறேன். வறுமைக்கும் அறியாமைக்கும், சமூக தீமைகளுக்கும், பிளவு மனப்பான்மைகளுக்கும் எதிராக நாம் தொடங்கியுள்ள ஆக்கவழி–அறவழி–புனிதப்போரின் வெற்றிக்கு நம்மை முழுமையாக ஒப்படைத்துக் கொள்ள உத்வேகம் பெறுவோம்.

## தடை

- ❖ நமது மாநில மக்களை முன்னேற்றுவது–இந்திய ஒருமைப்பாட்டுக்கு பக்கபலமாக நிற்பது என்கிற புனிதக்குறிக்கோள்களை நோக்கி நமது இலட்சியப் பயணம் அமைந்திருக்கிறது. ஆனால், இந்தக் குறிக்கோள்களுக்குகூடத் தடைகள் ஏற்படலாம் என்பதை வரலாறு காட்டுகிறது.

## தலைமை தாங்கிடுவீர்!

❖ உழைக்கும் மக்களே ஒன்று சேர்ந்திடுவீர். பேதப்படுத்தும் சக்திகளை ஒதுக்கித் தள்ளிடுவீர்! 'உழைப்பவரே' உயர்ந்தவர் எனும் தத்துவத்தை நிலை நாட்டுவீர் புதிய சமதர்ம சமத்துவ சமுதாய அமைப்புக்கு முன்னேறும் சக்தியாகத் தலைமைதாங்கிடுவீர்.

## என்றும் இளமையாக இருக்க

❖ தேகப்பயிற்சி அன்றாடம் மிக முக்கியம். எதற்கும் ஓர் அளவு வேண்டும். கைக்குத்தல் அரிசி உண்ண வேண்டும். கீரை வகைகள் கண்டிப்பாகத் தினமும் உணவோடு சேர்த்துக் கொள்ள வேண்டும். தேவையற்ற நேரத்தில் எவ்வளவு சுவையான உயர்ந்த பண்டங்கள் ஆனாலும் உண்ணக்கூடாது.

## எதையும் தாங்கும் இதயம்

❖ எதையும் நாம் தான் செய்கிறோம். நம்மால்தான் முடியும் என்பதைப் போன்ற நம்பிக்கையை வளர்த்துக் கொண்டு சோதனை ஏற்படும்போது அதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் தவிக்கின்ற நிலைக்கு மனத்தைப் பலவீனமற்றதாக ஆக்கிக் கொள்ளக்கூடாது.

❖ எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்ற அமரர் அறிஞர் அண்ணா அவர்களின் கருத்தினை உள்ளத்தில் திடமாக நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும்.

## நடிகர் சமுதாயம்

❖ நடிகர் சமுதாயம் என்பது ஓர் இணைப்புக் கூட்டம். இதில் வேறுபாடோ, ஏற்றத்தாழ்வுவோ காண முயலக்கூடாது.

## விமர்சகருக்கு ஒரு வேண்டுகோள்

❖ விமர்சனம் எழுதும்போது நடிகனின் சூழ்நிலை. நடிக்கும் கட்டத்தின் தன்மை இதுபோன்ற அம்சங்களை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

## அமைதிவழியே அண்ணாயிசம்

❖ அண்ணாயிசம் பாசத்தின் அடிப்படையில், உடன்பிறப்பு என்ற உறவின் அடிப்படையில் எதிரிகள் அற்ற—வன்முறையற்ற ஒருமைப்பாட்டு உணர்வில் அமைதி வழியைக் கூறுகிறது.

## இன, மொழி வெறியை ஏன் தூண்டுகிறார்கள் ?

❖ இன, மொழி வெறியைத் தூண்டுகின்ற செயல்கள் கொள்கையின் அடிப்படையில் உருவாவதில்லை. அவர்களிடமுள்ள குறைகளின் காரணத்தால் உருவாகிறவை. அதோடு தங்களை மக்களுடைய வெறுப்பிலிருந்து காப்பாற்றிக் கொள்ளத் தனிப்பட்டவர்கள் மேல் ஏற்பட்டிருக்கிற பொறாமையின் விளைவால் உருவாக்கப்படுகின்ற கூற்றுக்கள்.

## எதிரியை சந்திப்போம்

❖ நாம் கோழைகள் அல்ல. தன்மானத்தை ஒரு நாளும் விட்டுக்கொடுக்க மாட்டோம். கொள்கைக்காக சாவோம். ஆனால் நம்மைக் கோழைகள் என்றோ தகுதியற்றவர்கள் என்றோ உணர்ச்சியற்றவர்கள் என்றோ யார் கூறினாலும் சரி, விட்டுக் கொடுக்கமாட்டோம். செத்தாலும் சரி. எதிரியைச்சந்தித்தே தீருவோம்.

## தாயே தெய்வம்

❖ என் தாயை நான் வணங்குவதைவிட வேறொரு தெய்வம் எனக்குக் கிடையாது. எந்தச் சிலையைப் பார்த்தாலும் என் தாயைத்தான் அங்கு பார்க்கிறேன்.

❖ தாயைப் பட்டினிப் போட்டுவிட்டு நாட்டிற்கு தர்மசத்திரம் கட்டுகிறவன் நல்லவன் அல்ல என்பது எனது பணிவான எண்ணம்.

## மறைவுக்குப் பின் பாராட்ட வேண்டும்

நான் மறைந்த பிறகு நல்லவன் ஒருவன் வாழ்ந்தான் என்று பாராட்டுவதை மட்டுமே நான் விரும்புகிறேன்.

## மன்னிக்க முடியாத குற்றம்

- ❖ தனி மனித சுதந்திரம் இருக்கிறது என்ற சட்டம் சொல்லுகிறதே தவிர அதை காப்பாற்றிக் கொள்வதற்கு இன்றைய தினம் வழியில்லை.
- ❖ என்னைக் குற்றவாளியாக்கி நீதிமன்றத்தில் நிறுத்தி, இவன் குற்றம் செய்தான் என்று வாதிப்பதை, என்ன என்று என்னால் புரிந்துகொள்ள முடியாத கொடுமை இருக்கிறதே அது மன்னிக்கமுடியாத குற்றம்.

## எழுத்தாளனின் உணர்ச்சி

- ❖ ஒரு எழுத்தாளனின் உணர்ச்சிதான் இந்த நாட்டின் எதிர்காலத்திற்கு வழி வகுக்கிறது.

## பலன்

- ❖ நமக்கு என்ன பலன் கிடைக்கிறதோ அந்த பலனை ஒட்டித்தான் நல்லவரா, கெட்டவரா என்று மற்றவரைத் தீர்மானிக்கிறோமே தவிர நாட்டின் நிலைமை, சமுதாய அமைப்பு, அவர்களுடைய சூழ்நிலை ஆகியவற்றை வைத்து தீர்ப்பு கூறுவதில்லை.

## சத்துணவுத் திட்டத்தின் அடிப்படை நோக்கம்

- ❖ ஒன்றுபட்டு வாழுகின்ற சமுதாயம், பிரிவுபடுத்த முடியாத சமுதாயம் என்ற நிலையில் எதிர்கால சந்ததிகள் இந்த நாட்டிற்குக் கிடைத்தால்தான், நாடு நல்ல பலனைப் பெற முடியும்; நாமும் சிறப்பாக வாழ முடியும்! இதுதான் இத்திட்டத்தின் (சத்துணவுத் திட்டத்தின்) அடிப்படை நோக்கம்.
- ❖ வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள ஏழைக் குடும்பங்களில் உள்ள குழந்தைகளை வளர்க்கும் போதுள்ள சிரமங்களை தொல்லைகளை எந்தளவுக்கு குறைக்கமுடியுமோ அதைச்செய்ய வேண்டும் என்பதுதான் இத்திட்டத்தின் அடிப்படையான நோக்கம்.
- ❖ இந்தக் குழந்தைகள் உணவுக்கு வகை இல்லை என்பது மட்டுமல்ல. உணர்விற்கும்—அதாவது சமத்துவ உணர்விற்கும் வழி இல்லாது வளர்க்கப்படுமானால் நாட்டின் எதிர்கால நிலை என்ன எனபதை ஒரு கணம் சிந்திக்க வேண்டும்.

## சத்துணவுத் திட்டம் ஏன் ?

❖ வெளிநாட்டுக் குழந்தைகளைப் பார்த்தால் எவ்வளவு செழுமையாக இருக்கிறார்கள். நம் நாட்டிலே உள்ள குழந்தைகள் அப்படி இல்லையே என்கிற ஏக்கம் வரத்தான் செய்யும்.

❖ உணவுக்கே வழியில்லாத நிலையில் ஊட்டச்சத்துக்கு எங்கே போவது ? அதனால்தான் நோய்களும் அதிகமாக வருகின்றன. உடல் உறுதி போய்விடுகிறது. மனத்திண்மை போய்விடுகிறது. எதிலும் ஆர்வம் இல்லாமல் போய் விடுகிறது. ஒழுக்கத்தன்மை, சுறுசுறுப்பாக காரியம் செய்யக்கூடிய சக்தி போன்றவற்றை இழந்து சோம்பேறிகளைப் போல ஆகிவிடுகிறார்கள் குழந்தைகள்.

❖ இதைக் கொஞ்சம் சிந்தித்து பார்க்க வேண்டும். அதனால்தான் இந்த சத்துணவுத்திட்டம்.

## கொள்கை மாறினால்...

❖ மக்கள் தரும் எந்தப் பதவியும், பொருளும், பரிசும், பட்டமும் அந்த மனிதனுக்குச் சொந்தமல்ல; அவனது கொள்கைக்குச் சொந்தம்! அந்தக் கொள்கையை அவன் கடைப்பிடிக்கின்ற வரையில் அவனிடம் அது இருக்கும்; அதற்குப் பிறகு அதைத் தந்த மக்களுக்கே அது சொந்தம்.

## எண்ணத்தை மாற்றுவேன்

❖ முடிந்தவரையில் என்னைக் குறை கூறுகிறவர்களின் நல்லெண்ணத்தைப்பெற, என் மீது மீண்டும் அவர்கள் நம்பிக்கைபெற, அவர்களின் உள்ளத்தில் இருக்கின்ற தவறான முடிவுகளை மாற்ற, நான் கடுமையாக உழைத்தாக வேண்டும் என்ற புதிய பொறுப்பை ஏற்றுக்கொள்ள முன்வருவேன்.

## என் எதிரிக்குத் தேவை...

❖ என்னைப் பொறுத்தவரையில் நான் எப்போதும் எதிரியை என்னைவிட உயர்ந்தவனாகவே மதிப்பவன். நான் போட்டி போடும் எதிரிகள் யாராக இருந்தாலும் பலசாலியாக இருக்க வேண்டும்; அறிவாளியாக இருக்கவேண்டும்; திறமைசாலியாக இருக்க வேண்டும்.

## தென்னையைப் போல் நன்றிக்கடன் ஆற்றுவேன்

❖ நான் வாழும் இந்த மண் எனக்குத் தந்த வாழ்வுக்காக இந்த மண்ணுக்குரியவர்களுக்கு தென்னையைப்போல நன்றிக் கடனாற்றுவதே என் பொறுப்பு.

## பசியை உணர்ந்தவன்

❖ என் வாழ்க்கையில் ஏறத்தாழ இரண்டு மூன்றரை வயதில் முன்று நாட்கள் நானும், என் தாயும் சகோதரரும் பட்டினியாக இருந்தபோது பக்கத்து வீட்டில் இருந்த ஒரு தாய் முறத்தில் கொஞ்சம் அரிசியை கொடுத்து கஞ்சி காய்ச்சிக் குடியுங்கள் என்று எங்களுக்கு உதவி செய்தார். இல்லாவிட்டால் தாயோடு இந்த உலகத்தை விட்டே மறைந்து போயிருப்போம். நல்லவேளை காப்பாற்றப்பட்டோம். அத்தகைய பசியை உணர்ந்தவன்தான் இந்த எம்.ஜி.ராமச்சந்திரன்.

## ரசிகர்களும், தொண்டர்களும்

❖ எந்தக் கொள்கையின் மேலும் ரசிப்புத்தன்மை கொள்ளாதவர்கள் தொண்டர்களாக ஆக முடியாது. உண்மையான ரசிப்பு என்பது உணர்விலிருந்து வரவேண்டியது. அப்படிப்பட்ட ரசிகனுடைய உள்ளத்தில் ஏற்றத்தாழ்வு என்ற நினைப்புக்கே இடமிருக்காது. அத்தகைய உள்ளத்திற்கு;த தலைவனும் ஒன்றுதான்; தொண்டனும் ஒன்றுதான்! உணர்ச்சிக்கும், உணர்வுக்கும் உள்ள தொடர்பு போன்றது. ரசிகர்களுக்கும், தொண்டர்களுக்கும் உள்ள தொடர்பு! அவர்களுடைய உள்ளத்தில் ஏற்றத்தாழ்வு என்ற நினைப்புக்கே இடமிருக்காது. அத்தகைய உள்ளத்திற்கு தலைவனும் ஒன்றுதான்; தொண்டர்களும் ஒன்றுதான். இதுவே, தலைவனுக்கும் தொண்டனுக்கும் உள்ள தொடர்பாகும்.

## இயக்கம் என்பது

❖ இயக்கம் என்றாலே முடங்கிக் கிடப்பதல்ல என்றுதான் பொருள். அதாவது உணர்வும், உணர்ச்சியும் கொண்டு செயலாற்றுபவர்களைக் கொண்டதே இயக்கம் என்பதாகும்.

- ரசிகர்களாக இருந்து கொள்கையினை இயக்கும் தொண்டர்களாக ஆகியிருப்பவர்கள் தவிர்க்க முடியாத நாட்டுப்பற்றின் உருவே வடிவானவர்கள்.

- கொள்கையில்லாதவர்கள் எப்படித் தொண்டர்கள் ஆவார்கள் ?

## யார் காலில் விழுந்து வணங்கலாம் ?

- பெற்றோர்கள் காலில் பிள்ளைகள் விழுந்து வணங்கலாம். எழுத்தறிவித்தவன் இறைவனாகும் என்பதால் குருவின் காலில் சீடன் விழலாம். உலக நன்மைக்காகப் பாடுபடும் அடியார்கள் பாதம் பணியலாம். இது போற்றுவதற்குரியது.

## அடுத்தவர் பாவங்களை ஏற்று என்ன செய்யப் போகிறோம் ?

பொதுவாக மற்றவர்கள் நம் காலில் விழுவதை நாம் ஏற்றுக் கொள்ளக்கூடாது! விழுபவர்கள் பாவங்களை சுட்டெரிக்கும் ஆற்றல் நம்மிடத்தில் இல்லை! நாம் செய்த பாவங்களுக்கே நம்மால் பரிகாரம் காண முடியாதபோது மற்றோரின் பாவங்களையும் ஏற்றுக்கொண்டு என்ன செய்யப்போகிறோம்.

## அண்ணா மாதிரி

- கலைஞன் என்பவன் தன் வாழ்வை ஒழுங்காக அந்த நாட்டின் பண்பாட்டிற்கிணங்க அமைத்துக் கொள்ள வேண்டும். அப்போது அவன் நாட்டின் தொண்டனாகி வழிகாட்டியுமாகிறான். அதாவது நாம் சொல்வது அண்ணா மாதிரியாகிறான் என்று குறிப்பிடலாம்.

## முயற்சியின்றி முன்னேற்றம் இல்லை

- மனிதனுடைய முயற்சியின்றி முன்னேற முடியாது. அவற்றில் தடை ஏற்படுவதோ, அந்தத் தடைகள் ஏற்படுவதன் முடிவில் நமக்குத் தரப்படும் தெளிவான பதில்களோ நிச்சயமாக நமது கையில் இல்லை.

## நம்மால்தான் எல்லாம் என்பது தப்புக் கணக்கு

❖ நம்மை எல்லாம் ஆட்டிப் படைக்கின்ற மாபெரும் சக்திதான் அவைகளுக்கு பொறுப்பு ஏற்றிருக்கிறதே தவிர நம்மால்தான் எல்லாம் முடியும், நம்மால்தான் எல்லாம் நடக்கிறது என்று தப்புக்கணக்கு போடுவோமேயானால் நாம் கடந்து வந்த பாதையைத் திரும்பப் பார்த்து நிம்மதியும், மகிழ்ச்சியும் மேலும் முன்னேற வேண்டும் என்ற துடிப்பையும் பெற முடியாது.

## கலைப்பணி – தெய்வீகப் புனிதப்பணி

❖ நாம் முன்னேறிச் செல்ல வேண்டிய பாதை நீண்டதொரு பாதை. கடக்க வேண்டிய தடைகள் மிகப்பெரியவை என்பதை உணர்ந்து மேலும் எச்சரிக்கையோடு, தக்க துணையோடு, நல்லோரின் ஆதரவோடு, நம்மக்களின் ஆசியோடு, என்னைப் போன்றவர்களின் ஏற்றுக் கொண்டிருக்கிற கலைத்தொழிலை தெய்வீக சக்தி வாய்ந்த புனிதமான ஒரு பணி என்று உணர்ந்து சிக்கலை அறுப்பதன் மூலமாகத்தான் தீர்க்கமுடியும்.

## எறும்புகளிடம் பாடம் கற்கலாம்

❖ "நாம் ஆறறிவு பெற்ற மனிதர்களாய் இருந்தாலும் அறிவில் குறைவுப்பட்ட சிறு எறும்புகளிடம் கற்றுக்கொள்ள வேண்டியவை நிறையவே உள்ளன.

❖ சேமிப்பு குணம், ஒழுங்கு வரிசை—இவற்றைக்கூட எறும்பை பார்த்தபின்தான், நமக்கு முக்கியம் என்று சொல்லியிருக்கிறார்கள் போல இருக்கின்றது!

## நல்லாட்சிக்கு அஸ்திவாரம்

❖ "ஒரு நல்ல ஆட்சிக்கு அஸ்திவாரம் என்ன என்றால் நம் மீது மக்கள் வைத்திருக்கிற மதிப்பும், நாம் அவர்கள் பேரில் வைத்திருக்கிற நம்பிக்கையும்தான்."

## அதே உரிமையை அனுமதிக்கலாகாது

❖ ஜனநாயகத்தின் அடிப்படையே, சிந்திப்பதும், பேசுவதும், எழுதுவதும் ஆகும். ஆனால் ஜனநாயகத்திற்கு ஆபத்து ஏற்படுவதற்குச் சிந்திக்கவும், பேசவும், எழுதவும் உள்ள உரிமையைப் பயன்படுத்த அதே ஜனநாயகம் அனுமதிக்க முடியாது.

## அரசியல் கட்சிக்கு சொந்தம் கொண்டாடும் தகுதி

❖ சராசரி மனிதனின் எண்ணங்களையும், அவனது தேவைகளின் வற்புறுத்தலையும், அவனுடைய உள்ளத்தின் உரிமை ஒலியையும் எதிரொலிக்காத எவனுக்கும் ஒரு அரசியல் கட்சிக்குச் சொந்தம் கொண்டாடத் தகுதியோ, உரிமையோ கிடையாது.

## எதிரிகளும் அன்போடு பேசக் காரணம்

❖ என்னை எதிரியாக நினைக்க வேண்டும் என்ற கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டவர்கள் கூட என்னை நேரில் சந்திக்கும் போது அன்போடு பேசுவதற்குக் காரணமே அவர்களது ஒலிகளையும், எதிரொலிகளையும், நான் என்றும் தடுக்க முயலாதவன் என்பதோடு, அத்தகைய எண்ணத்திற்கும், எனக்கும் வெகுதூரம் என்பதனாலும்தான்.

❖ ❖ ❖



"அமைதி, ஒற்றுமை, முன்னேற்றம் என்ற முப்பெரும் முழக்கங்களை
உயிர்மூச்சாகக் கொண்டு உழைப்போம்;
நாட்டை உயர்த்திவிடக் கடமையாற்றுவோம்."

பாரத ரத்னா புரட்சித் தலைவர்

**டாக்டர் எம்.ஜி.ஆர்.**

வெளியீடு :
இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத்துறை